விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள
உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
(ஜி-8615)
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 வைகாசி 07 ஞாயிற்றுக்கிழமை (21.05.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 153

# தடுத்து வைக்கப்பட்டுள்ளார்களா?
# காணாமல் போனவர்கள் குறித்து ஆராய தயார்
## ஜனாதிபதி மைத்திரி அறிவிப்பு



(சம்பூர்)

காணாமல் போனவர்கள் தொடர்பான விடயங்களை முன்வைத்து எங்கேயாவது அவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுமாயின் அந்த இடங்களை பரிசீலிப்பதற்கான திட்டத்தை அரசாங்கம் உருவாக்குமென தெரிவித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இதற்குமுன்னர் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு அறிக்கை மற்றும் அதன் விதந்துரைகளை கருத்திலெடுத்து காணாமல் போனோர் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்கு விசேடகுழு விரைவில் நியமிக்கப்படும் எனவும் குறிப்பிட்டார். (15-ம் பக்.)



பளை கச்சார்வெளி பகுதியில் போக்குவரத்து பொலிஸாரை இலக்கு வைத்து அடையாளம் தெரியாத நபர்களால் நேற்று முன்தினம் அதிகாலை நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு தாக்குதல் தொடர்பில் அங்கு நேற்றும் தேடுதல் நடவடிக்கைகள் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர். இதன்படி குறித்த பகுதியில் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டு சோதனை நடவடிக்கையும் இடம்பெற்றிருந்தன.

## இலவசக்கல்வியை ஒழிக்கும் சைட்டம்
### ஜே.வி.பி எச்சரிக்கை



(கொழும்பு)

சைட்டம் தனியார் வைத்திய கல்லூரியை இல்லாதொழிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிடின் மக்களாட்சி ஒன்று உருவாகி அதனூடாக அந்த நிறுவனம் இல்லாது 15☛

## அரசியல் சாசனம் தாமதம் கூடாது!
### சம்பந்தன் பேச்சு

(சம்பூர்)

மக்களின் காணிகள் மக்களிடமே மீண்டும் கையளிக்கப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ள த.தே.கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சம்பந்தன், புதிய அரசியல் அமைப்புக்கான பணிகள் தாமதமின்றி முன்னெடுப்பட 15☛

## கொழும்பில் போராட்டம்

(கொழும்பு)

தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கான தீர்வை வலியுறுத்தி அரசியல் 16☛

## ஆலய மண்டபம் இடிந்து வீழ்ந்தது
### 30 பேர் காயம்

(ஆரையம்பதி)

மட்டக்களப்பு, ஆரையம்பதியில் ஆலயம் ஒன்றில், கட்டப்பட்டு 16☛

## அருட்தந்தையிடம் தொடர் விசாரணை

(யாழ்ப்பாணம்)

தமிழ் சிவில் சமூக அமையத்தின் இணைப் பேச்சாளரும், அடையாளம் கொள்கை ஆய்வு அமைப்பின் 04☛

## அமைச்சரவை மாற்றம் அவசர கூட்டம் நாளை
### ஜனாதிபதி மைத்திரி அழைப்பு

(கொழும்பு)

அமைச்சரவையில் மாற்றம் செய்வது தொடர்பில் நாட்டின் ஆளும் கூட்டணி அரசாங்கத்திற்குள் முரண்பாடுகள் அதிகரித்துள்ள நிலையில் நாளை திங்கட் கிழமை விசேட அமைச்சரவை கூட்டத்திற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அழைப்பு விடுத்துள்ளார்.

இந்த அவசர அமைச்சரவை கூட்டமானது அமைச்சரவை மாற்றத்திற்கு அன்றேல் அதற்கான இறுதி இணக்கப்பாட்டைப் பெறுவதற்கானதாக இருக்கலாம் என கருத்துக்கள் வெளி 15☛

## வடக்கு அபிவிருத்தி குறித்து பிரதமர் நேற்று கள ஆய்வு



15☛

## கணவன் குறித்து தகவல் இல்லை!

(முல்லைத்தீவு)

தனது கணவரை கடத்தியவர்கள் இன்றும் 15☛

## கடவுள் கருணை காட்டினால்தான் தமிழருக்கு தீர்வு கிடைக்கும்!
### இராஜாங்க அமைச்சர் விஜயகலா கருத்து

(பரந்தன்)

கடந்த காலத்தோடு ஒப்பிடுகையில் வெகு விரைவில் அரசியல் தீர்வு கிடைக்கும் என எண்ணியிருந்தோம். ஆனால் இன்றைய காலகட்டத்தில் நோக்கும் போது தீர்வு எப்போதோ ஒரு நாளைக்கு கிடைக்கும் என்ற நிலையே காணப்படுகிறது. அதை நாங்கள் எதிர்பார்த்துக்கொண்டு இருக்காது எப்பொழுது கடவுள் இந்த தீர்வை எங்களுக்கு வழங்கவேண்டும் 15☛



## வட – கிழக்கு குடும்பங்களின் கடன்படுநிலை அதிகரிப்பு!
### மத்திய வங்கி ஆய்வு

(கொழும்பு)

தமிழ் மக்கள் அதிகளவில் வசிக்கும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அதிகரிக்கும் கடன் படுநிலை தொடர்பாக இலங்கை மத்திய வங்கி ஆய்வு நடத்தவுள்ளது.

கொழும்பில் வெளிநாட்டுச் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போது, இலங்கை மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

வீடு மற்றும் அதனைச் சார்ந்த குடும்பத்தினரின் கடன் அதிகரித்து வருவது குறித்து 16☛

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

**வேலை ஆள் தேவை**

நல்லூரில் இயங்கும் சைவ உண வகம் ஒன்றுக்கு றொட்டி தயாரிப் பாளர், சமையல் ஆள் தேவை (இருபாலாரும்) (8688)

தொடர்பு:-
077 247 9723

## பிரச்சினைகளை தீர்க்க பிரதமர் உடன்பாடு - மாவை

வேலையற்ற பட்டதாரிகள் மற்றும் பெண் தலைமைத்துவ குடும் பங்களுக்கான தீர்வுகள் உள்ளிட்ட சில பிரச்சினைகள் தொடர்பில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கலந்துரையாடப்பட்ட நிலையில் அதற்கான உடன்பாட்டை அவர் தந்துள்ளார் என பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மக் கள் சேவை தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய் யப்பட்ட நடமாடும் சேவை கிளிநொச்சி கண்டாவளை தர்ம புரம் பாடசாலையில் நேற்று இடம்பெற் றது.

இதில் கலந்து கொண்டு உரை யாற்றும் போதே மாவை எம்.பி இவ் வாறு தெரிவித்தார். (செ-11)

15 வருட நிறைவை முன்னிட்டு விசேட கட்டணக்கழிவு 50% Only 50 Students

**Diploma in Spoken English**

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மாணித்தியாலங்கள் நடைபெறுவதுடன், பகுதிநேர வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களிலும் நடைபெறும்.

Spoken English - Course Fee : 15250/= Offer Fee : 7625/=
Diploma in English - Course Fee : 21000/= Offer Fee : 10500/=

BRITISH COLLEGE of Education
More information 0777-596148

23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124
(C-8627)

**Lega Beauty Parlour**
**லேகா பியூட்டி பார்லர்**

சாயி ஸ்ருடியோ, டென்டல் கிளினிக் அருகாமையில் M.M.V.Road, Nelliady.
T.P: 0779480824

**வடமராட்சியில்!**

மகளிர்க்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- கேக் ஐசிங்
- கூந்தல் அலங்காரம்
- மணப்பெண் அலங்காரம்
- முக அழகுக்கலை (Facials)
- தலைமயிர் சுருள் பண்ணுதல், அயன் செய்தல்,
  Hair Colouring, Hair Cutting



பயிற்சி முடிவில் தகைமைச் சான்றிதழ் வழங்கப்படும்

கிழமை நாள் புதிய பிரிவுகள் 29.05.2017 காலை 10 மணி
சனி ஞாயிறு புதிய பிரிவுகள் 27.05.2017
(C-8617)

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம். இயக்குநர்

**Yarl Beauty & Language's Skills College**
YBLSC



மகளிருக்கான டிப்ளோமா பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

- அழகுக்கலை
- கேக் ஐசிங்
- தையல்



கிழமை நாள் பிரிவுகள் 24.05.2017 அன்று 10.00 மணிக்கு
சனி, ஞாயிறு பிரிவுகள் 27.05.2017 அன்று 10.00 மணிக்கு


# சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட NVQ பாடத்திட்டம்,
# சர்வதேச அங்கிகாரம் பெற்ற சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கும் பதிவுகளுக்கும் அலுவலக நேரத்தில் வருகைதரவும்.

இல.17, 3ம் ஒழுங்கை, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
(ராசி கலெக்சனுக்கு அருகில் உள்ள ஒழுங்கை)
(C-8626)

# மரண அறிவித்தல்

## திருமதி மாப்பாணர் மாணிக்கம்



பிறப்பு 18 . 11 . 1921 இறப்பு 20.05.2017

சிங்கப்பூரை பிறப்பிடமாகவும் புத்தூர் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாப்பாணர் மாணிக்கம் 20.05.2017 சனிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற இராமு மாப்பாணரின் துணைவியாரும் காலஞ்சென்ற வைரவப்பிள்ளை - தெய்வானை தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற இராமு - கைராசி தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் (சிங்கப்பூர்), காலஞ்சென்ற திருமதி ஆறுமுகம் நாகம்மா (கதிர்காமக் கோவில், வதிரி), காலஞ்சென்ற சின்னத்துரை (வதிரி) ஆகியோரின் சகோதரியும் பரமேஸ்வரி (ஓய்வுநிலை பொது சுகாதார தாதிய சகோதரி (PHNS)), பூமணி, காலஞ்சென்ற தியாகராஜா, காலஞ்சென்ற சந்திரசேகரம் (கனடா), கமலாதேவி, காலஞ்சென்ற சதானந்தம், இராஜேஸ்வரி, செளந்தேஸ்வரி, பத்மாவதி (ஓய்வுநிலை ஆசிரியர் - யா/ஸ்ரீசோமஸ்கந்தா கல்லூரி), வசந்தமாலா (வைத்திய அதிகாரி - திருகோணமலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் பரமநாதன், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் காலஞ்சென்ற புளோரன்ஸ், நத்தாலியா, வசந்தி (கனடா), விவேகானந்தராஜா, சந்திரவதனி, மகாதேவா, ஜெயராசா, நாகராஜா, ரவீந்திரா (திருமலை ரூபன்) ஆகியோரின் அன்பு மாமியும் கஜேந்திரன் (செயல்திட்ட அலுவலகர் - ஆறுதல் நிறுவனம்), லூசியா கிறேஸ் (ஆசிரியை - யா/சென்.பெனடிக்ற் வித்தியாலயம்), றூபேந்திரன் (விவசாய முகாமையாளர்), பிறிஸ்சீலாறஷ்மி (ஆசிரியை - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), சர்மிளா - ஜெயகரன் (வட மாகாணக் கணக்காய்வுத் திணைக்களம்), சைலயா - ஸ்ரீரங்கநாதன் (லண்டன்), சங்கீதா - குகதாசன் (கானா), பிரதீப் (புகைப்படப் பிடிப்பாளர் - நவிண்டில்), கஜனி - அருள்சந்திரபாலன் (தொழிலதிபர் - பிரகாந் நிறுவனம், கண்டி), பிரஷாயினி (ஆசிரியர் - கொழும்பு), பிரதீபன் (போதனாசிரியர் - மன்னார்), நிரோஸ் (ஊடகவியலாளர்), துவாரகா - பிரதீபன் (கனடா), புருசோத்தமன் (கனடா), வாமனன் (கனடா), துளசிகா ( உபதபால் அதிபர் - புத்தூர்), மகேந்திரராசா (றேகா), துசாயினி, வேணுகா, ஜெனார்த்தனி, விஜேந்திரன், வினோஜ் - ஹம்சினி, அகாலச்சாவடைந்த கிசோக்குமார், வானதி - மயூரன் (ஜேர்மனி), நிறோசினி - றமேஸ் (லண்டன்), விதுசன் (SLGIS மாணவன் - கிளிநொச்சி) ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும் மதுராஞ்சலி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), மதுராஞ்சன், அபிராஞ்சன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), ஆராதனன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), ஹரித்தனா (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ஜிலக்சன், ஹினுசன், டிலக்சனா (யா/கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்), றுசானந், நிக்கிஸ் (லண்டன்), கபிஸ் (கானா), தர்சிகா, பிரஜீப் (கண்டி/ சென் அன்ரனிஸ் கல்லூரி), ஹாசினி (கனடா), அமுதவிழி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), அறிவுக்குமரன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), டயந்தி, சந்தியா (யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), வர்சினி (யா/ஆனைப்பந்தி மெதடிஸ்ற்மிசன் பாடசாலை), மிற்றி (லண்டன்) ஆகியோரின் பாசத்திற்குரிய பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (21.05.2017) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் நடைபெற்று தகனக்கிரியைக்காக பூதவுடல் புத்தூர் கிழக்கு இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

"மதுராவனம்"
புத்தூர் கிழக்கு, புத்தூர்.
0217200414

(C - 8625)

தகவல் :
குடும்பத்தினர்

# எந்த அரசாங்கத்தாலும் பொதுபலசேனாவை முழுமையாகத் தடை செய்துவிட முடியாது

## பிரதியமைச்சர் அமீர் அலி விரக்தி



(கொழும்பு)

**எந்த அரசாங்கம் வந்தாலும் பொதுபலசேனாவையும் இதுபோன்ற தீவிர இனவாத அமைப்புக்களையும் முழுமையாகத் தடை செய்துவிட முடியாது என கிராமிய பொருளாதார பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி விரக்தியுடன் தெரிவித்துள்ளார்.**

கிராமிய பொருளாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டுடன் ஏறாவூர் புன்னைக்குடா வீதியில், மினி ஆடைத் தொழிற்சாலை நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டபோது அங்கு உரையாற்றுகையிலேயே பிரதியமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

"இந்த இனவாதக் கும்பல்களை பெரும்பான்மை சமூகத்தின் இனக் காவலர்களாக சித்திரிக்கப்படுவதால் எந்தவொரு அரசாங்கம் ஆட்சிக்கு வந்தாலும் அவர்களை முழுமையாகத் தடைசெய்துவிட முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலையில் நம் நாடு சென்று விட்டது.

அதனால் சிறுபான்மையினராகிய நாம் மிகக் கவனமாக, அறிவுபூர்வமான அணுகுமுறைகளைச் செய்ய காய்நகர்த்த வேண்டும். இந்த நாட்டில் வாழும் சிறுபான்மைச் சமூகங்கள் இரண்டும் ஒன்று சேர்ந்து எமக்கு முன்னே எரியும் நெருப்பாக எதிர்கொள்கின்ற இனவாதத்தை முறியடிப்பதற்கு ஆணித்தரமான வியூகம் வகுக்க வேண்டும்.

ஆனால் ஒற்றுமைப்படுவதற்குப் பதிலாக இன்னமும் தங்களுக்குள் பிரிந்து நின்று செயற்படுவதால் ஏற்படும் தற்காலிக அரசியல் இலாபம் பற்றி தமிழ் முஸ்லிம் சமூகத் தலைமைகள் சிந்தித்துக் கொண்டிருப்பது தான் வேதனையாகவுள்ளது" என பிரதியமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி மேலும் தெரிவித்தார். (இ)

# பன்முகத் தன்மை ஏற்றுக் கொள்ளப்படாத வரையில் நல்லிணக்கம், சமாதானம் ஏற்படப்போவது இல்லை

## அமைச்சர் மனோ சுட்டிக்காட்டு



(கொழும்பு)

பன்முகத் தன்மை ஏற்றுக்கொள்ளப்படாத வரையில் நாட்டில் நல்லிணக்கம் மற்றும் சமாதானம் ஏற்படப் போவது இல்லையென சகவாழ்வு, அரசகரும மொழிகள் மற்றும் தேசிய கலந்துரையாடல்கள் அமைச்சர் மனோகணேசன் சுட்டிக் காட்டியுள்ளார்.

சிறுபான்மை மதங்கள் மற்றும் மொழிகளுக்கு இருக்கும் தனித்துவத்தை இல்லாதொழித்து ஒரு மொழி, ஒரு மதம் என்ற கொள்கையை நிலைநிறுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்படுவதை அவதானிக்கக்கூடியதாக இருப்பதாகவும் அவர் கொழும்பில் நேற்று முன் தினம் இடம் பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றுகையில் சுட்டிக் காட்டியுள்ளார்.

நாட்டில் நான்கு மதங்கள், மூன்று மொழிகள் இருக்கின்றது என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டுமெனவும் அமைச்சர் மனோகணேசன் வலியுறுத்தியுள்ளார். (இ-7)

# இரட்டை குடியுரிமை எம்.பிக்களின் தகவல்கள் பகிரங்கப்படுத்தப்படும்

(கொழும்பு)

இரட்டை குடியுரிமை உள்ளவர்கள் மற்றும் இரட்டை குடியுரிமையை கொண்டிராத நாடாளுமன்ற உறுப்பினர்களின் தகவல்களை அடுத்த மாதம் முதல் வாரத்தில் முழு நாட்டுக்கும் வெளியிட உள்ளதாக பவ்ரல் அமைப்பு தெரிவித்துள்ளது.

தகவல் அறியும் சட்டத்தின் கீழ் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 225 உறுப்பினர்களின் குடியுரிமை பற்றிய தகவல்களை குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தில் கோரியிருந்தாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் அடுத்த 14 நாட்களுக்குள் தகவல்கள் கிடைக்க உள்ளதாகவும் தகவல்கள் கிடைத்ததும் ஊடக சந்திப்பு மற்றும் பத்திரிகை விளம்பரங்கள் மூலம் பகிரங்கப்படுத்த உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். இரட்டை குடியுரிமை கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள் எனில் மக்கள் உண்மையை அறிந்து கொள்ள முடியும்.

அத்துடன் தேவை என்றால் வாக்காளர்களுக்கு நீதி மன்றத்தில் அவர்களுக்கு எதிராக வழக்கு தொடரலாம் எனவும் ஹெட்டியாராச்சி தெரிவித்தார். (இ-7)

## 2 பாரவூர்திகள் நேருக்கு நேர் மோதி விபத்து இருவர் பலி!

கொழும்பு - மட்டக்களப்பு பிரதான வீதியின் கந்த கொடைப் பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர். இரத்தினபுரியிலிருந்து பயணித்த பாரவூர்தியொன்றுடன், எதிர் திசையில் வந்த பாரவூர்தி நேருக்கு நேர் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் 19 மற்றும் 27 வயதான இருவர் உயிரிழந்துள்ளதுடன், அவர்கள் எம்பிலிப்பிட்டிய பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக் கப்பட்டுள்ளது. விபத்து தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (இ-7)

# இடிபாடுகளுக்குள்ளிருந்து மற்றுமொரு சடலம் மீட்பு



வெள்ளவத்தை கட்டட இடிபாடுகளுக்குள் இருந்து சுமார் 20 வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவருடைய சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

அனர்த்த பகுதியில் நேற்றுக்காலை சனிக்கிழமை மூன்றாவது நாளாகவும் மீட்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், குறித்த சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப் படுகிறது.

வெள்ளவத்தை, சார்லிமண்ட் ஒழுங்கையில் அமைந்திருந்த ஐந்து மாடி கட்டடம் சரிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்ததுடன், சுமார் 27 பேர்வரை படுகாயமடைந்தனர். இந்நிலையில், மற்றுமொரு சடலம் கண்டெடுக்கப்பட்டுள்ள நிலையில் உயிரிழப்பு எண்ணிக்கை இரண்டாக அதிகரித்துள்ளது.

இதேவேளை, குறித்த பகுதியில் மீட்பு பணிகள் மந்த கதியில் இடம்பெற்று வருவதாக குற்றஞ்சாட்டி உயிரிழந்த இளைஞனின் உறவினர்கள் நேற்றுக்காலை அனர்த்த பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# இணைந்த வடக்கு- கிழக்கில் முஸ்லிம்களுக்கு தனி அலகு

## கிழக்கு சபை உறுப்பினர் ஜனா தெரிவிப்பு

பெரும்பான்மையினத்திடம் இருந்து உரிமையை பெறுவதற்காக தமிழ் மக்கள் போராடினார்கள். எதிர்காலத்தில் தமிழ் மக்களிடம் இருந்து உரிமையைப் பெறுவதற்காக முஸ்லிம் மக்கள் போராடக்கூடாது என்பதற்காக இணைந்த வடக்கு-கிழக்கில் குறிப்பிட்ட அதிகாரங்களுடன் தனி அலகு ஒன்று முஸ்லிம்களுக்கு வழங்கப்பட வேண்டும்என கிழக்கு மாகாண சபை உறுப்பினரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் (ஜனா) தெரிவித்தார்.

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு, மண்முனைப்பற்று பிரதேசத்தின் ஆரையம் பதியில் அமைக்கப்பட்ட பொது நூலக திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.

தமிழ் மக்கள் எந்தளவுக்கு நசுக்கப்பட்டார்கள், நாங்கள் எந்தளவுக்கு துன்புறுத்தப்பட்டோம், எந்தளவுக்கு அடிமைகளாக்கப்பட்டோம், நாங்கள் ஏன் போராடினோம் என்பதற்கு பெரிய உதாரணமாக யாழ் நூலகம் இருந்து வருகின்றது.

அதனைத் தொடர்ந்து 2009ஆம் ஆண்டு மே மாதம் 18ஆம் திகதி எமது விடுதலைப் போராட்டம் ஒடுக்கப்பட்டு நசுக்கப்பட்டு இலட்சக்கணக்கான மக்கள் கொன்றொழிக்கப்பட்டார்கள். எட்டு வருடங்களை கடந்துள்ள நிலையிலும் அந்த போராட்டத்திற்கான தீர்வு இதுவரை கிடைக்கவில்லை.


அதேபோன்று இந்த போராட்டத்தினை நசுக்கி தமிழர்களை கொத்துக்கொத்தாக கொன்றொழித்த மகிந்தவும் யுத்த வெற்றிக் கொண்டாட்டத்தை நடத்துகின்றார். இந்த நாட்டில் ஒரு இனம் துன்பப்பட்டு, கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கும்போது இன்னுமொரு இனம் வெற்றிக் கொண்டாட்டத்தை செய்து கொண்டிருக்கின்றது என்றால் இந்த நாடு எங்குள்ளது என்பதை நாங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

எமக்கான அதிகாரங்கள் பகிரப்படவேண்டும். எமக்கான உரிமைகள் வழங்கப்பட வேண்டும். எங்களது பிரதேசத்தினை நாங்கள் பாதுகாக்கும் நிலைப்பாடு ஏற்பட வேண்டும். இலட்சக்கணக்கான உயிர்களையும் கோடிக்கணக்கான சொத்துகளையும் பறிகொடுத்தது எமது நிலங்களையும் மண்ணையும் பாதுகாப்பதற்காகவே.

பெரும்பான்மையினத்திடம் இருந்து உரிமையை பெறுவதற்காக தமிழ் மக்கள் போராடினார்கள். எதிர்காலத்தில் தமிழ் மக்களிடம் இருந்து உரிமையினைப் பெறுவதற்காக முஸ்லிம் மக்கள் போராடக்கூடாது என்பதற்காக இணைந்த வடக்கு-கிழக்கில் குறிப்பிட்ட அதிகாரங்களுடன் தனி அலகு ஒன்று முஸ்லிம்களுக்கு வழங்கப்படவேண்டும்என்பது எங்களது கோரிக்கை. அந்த வகையில் இணைந்த வடக்கு-கிழக்கிற்காக போராட வேண்டும். அதற்காக ஒன்றுபட்டு நாங்கள் எமது பிரதேசத்தினை அபிவிருத்தி செய்ய வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ)

# மரண அறிவித்தல்

## திருமதி மகாலக்சுமி செல்வரட்ணம்



கோண்டாவில் கிழக்கை பிறப்பிடமாகவும் மானிப்பாயை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திருமதி மகாலக்சுமி செல்வரட்ணம் அவர்கள் 17.05.2017 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்வரட்ணத்தின் (செல்வம் Motor works - கோண்டாவில்) அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான பொன்னையா - சின்னம்மா தம்பதியினரின் பாசமிகு மகளும், காலஞ் சென்றவர்களான செல்லப்பா தம்பதியினரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான அரியரட்ணம், இராஜரட்ணம், திருஞானம் மற்றும் குணரத்தினம், கணேசரத்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரியும், ஜெகத்ஜெனன் (U.K), விலாசினி, இன்பா (U.S.A), ரசிகா ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலா (U.K), பஞ்சரட்ணம் (Manipay Rice Mill), Dr.சிவகுமாரன் (U.S.A), இராசகுலேந்திரன் ஆகியோரின் மாமியாரும், சங்கீத் - பிரவீனா, துஷிதா - ஹரிஹரன், சிவானுஜா - சபேசன், பிரகலாத் (Cargills Bank) - சியாமி, ராகவன், ரதீஸ், சுஜாந்தி காலஞ்சென்ற இஷானி ஆகியோரின் பேர்த்தியும், அபர்ணா, கீர்த்தனா, ஆரியன் ஆகியோரின் பூட்டியும், சரஸ்வதி, ஜெயமணி காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, கணநாதன் மற்றும் வாலையானந்தன் ஆகியோரின் ண்மத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (21.05.2017) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

யோகஸ்தி, மானிப்பாய் தெற்கு,
மானிப்பாய்.

(C-8629)

தகவல் :
பஞ்சரட்ணம் (மருமகன்)

## அருட்தந்தையிடம் ...

திட்டப்பணிப்பாளருமான அருட்தந்தை இ. எழில்ராஜன் மற்றும் சிற்பி ஒருவரும் மூன்றாவது தடவையாகவும் முல்லைத்தீவு பொலிஸாரால் அழைக்கப்பட்டுள்ளனர்.

சிவில் சமூகத்தால் முல்லைத்தீவில் முள்ளிவாய்க்கால் நினைவு உருவச்சிலை முன்பாக நினைவு நிகழ்வை நடத்துவதற்கு முல்லைத்தீவு நீதிமன்றம் தடையுத்தரவு விதித்திருந்த நிலையில், புனித சின்னப்பர் ஆலயத்தில் நினைவு நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன. எனினும் நூற்றுக்கணக்கான புலனாய்வு பிரிவினரின் பலத்த கண்காணிப்புக்களுக்கு மத்தியிலேயே நடைபெற்றிருந்தது. இந்த தீவிர கண்காணிப்பு நடவடிக்கைகளை அனைத்து நினைவேந்தல் நிகழ்வுகளிலும் காண முடிந்தது.

இந்த நிகழ்வுக்கு முன்னதாக முல்லைத்தவு மற்றும் வவுனியாவில் அருட்தந்தை விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில் நாளை ,திங்கட்கிழமையும் விசாரணைக்காக முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்திற்கு வருமாறு நேற்றைய தினம் அவருக்கு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறான தொடர் விசாரணைகளுக்கு அமெரிக்காவை தளமாக கொண்டியங்கும் பேர்ள்போன்ற பொது அமைப்புக்கள் தமது கடும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

பிரிவின் 45ம் நாளில்...



மண்ணில்
01.01.1975

மண்ணில்
27.02.1982

விண்ணில்: 07.04.2017

## கிறிஸ்ரி ஜோசப் - மாக்கிறேற் றோஸ்

(அமலன்) (சுகந்தி)

பிரியாமல் பிரிந்துவிட்ட பிரியமான பிணைப்புக்களே!
அமலன் சுகந்தி உங்களுக்கு வணக்கம்
உங்களைப் போன்று நீங்கள் விட்டுச் சென்ற
உங்கள் இருவரையும் அரவணைத்து
உங்கள் நினைவுகளை சுமந்தபடி
யேசுவின் நாமத்தில் எம் வாழ்நாள் எல்லாம்...

கச்சாய் வீதி,
கொடிகாமம்.
077 404 9568

(C-8628)

பிரிவின் நினைவுகளோடு
அண்ணா குடும்பம், சின்னக்கா குடும்பம்
செல்லக்கா குடும்பம், ஆசை அக்கா குடும்பம்.

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

SPOKEN
SINHALA
அரச கருமமொழித் திணைக்களத்தின் பரீட்சைக்கான பாடநெறி
சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறுகின்றது.
Hot line : 0777-596148
BRITISH COLLEGE of Education
23, Kachchari nallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Pettah Rd, Mannar. Tel : 023-4924124
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
(C-8627)

IELTS கற்பதுடன் எங்களது
கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றுங்கள்
கல்வி கற்க மற்றும் குடியேற
Now prepare for your Academic / General
IELTS
Full time / Part time
இலங்கையில் IELTS பரீட்சை நிலையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ள ஒரே ஒரு தனியார் கல்வி நிறுவனம்
சர்வதேச மொழிக் கற்கைநெறிகள்
ஜெர்மன், சுவிஸ் மொழிப் பாடநெறி — Deutsch
நெதர்லாந்து மொழிப் பாடநெறி — Dutch
பிரான்ஸ் மொழிப் பாடநெறி — French
BRITISH COLLEGE of Education
More information 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124
(C-8627)

கொழும்பு, கண்டி, யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு, மற்றும் மன்னாரில்
AUTO CAD
Civil / MEP / HVAC / Plumbing 2D & 3D
Computerized
Accounting
AccPack + Quick book + M.Y.O.B. + Tally
Hot Line : 0777-596148
BRITISH COLLEGE OF EDUCATION
(C-8627)
23, Kachcheri nallur Rd, Jaffna. Tel : 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Mullaithivu. Tel : 021-4927497
Mannar. Tel : 023-4924124

திருமணம் முடித்து Spouse
விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு
IELTS Life Skills A1 B1
ஒரே தடவையில் மாணவர்கள் சித்தியடைவதற்கு 100% உத்தரவாதம்
BRITISH COLLEGE of Education
More information 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Pettah Rd, Mannar. Tel : 023-4924124
(C-8627)
British College of Educatin - IELTS பரீட்சை நிலையம்

# நீரில் மூழ்கி ஒருவர் உயிரிழப்பு

பொலநறுவை, புலஸ்திபுர பிரதேசத்தில் நபர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார். திருமண நிகழ்வொன்றிற்குச் சென்றுவிட்டு திரும்பும் வழியில் 3 பேர் சேர்ந்து நேற்று அதிகாலை புலஸ்திபுர பிரதேசத்தில் உள்ள குளம் ஒன்றில் நீராடியுள்ளதுடன் அதில் ஒருவர் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். பொலநறுவை புலஸ்திபுர பிரதேசத்தில் வசிக்கும் 27 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். (இ-7)


## நான்கு மாடி கட்டடத் தொகுதி விற்பனைக்கு

கொழும்பு சங்கராஜ மாவத்தை (பஞ்சிகாவத்தை) பிரதான வீதியில் அமைந்துள்ளதும், நீளமான பார ஊர்திகள் (Condainer) சென்று வரக் கூடிய பாதை அமைப்புக்களை கொண்டதுமான 4 மாடி கட்டடத் தொகுதி உடன் விற்பனைக்கு உண்டு. அத்துடன் நீண்டகால குத்தகைக்கும் அல்லது வாடகைக்கும் கொடுக்கப்படும்

தொடர்புகளுக்கு:-
077 239 7898
077 085 6058

## IMMEDIATE VACANCY IN FIRM OF CHARTERED ACCOUNTANTS

Vacancy available for an Audit/ Accounts Executive who should possess chartered Inter/ CAB II completed with 3 years experience in audit/ accounting field with knowledge of QB & MS Office.

Please forward your curriculum vitae including addresses of two non-related referees to wskiru@yahoo.com within 7 days of this advertisement. (C-098)

## விவசாயப் பண்ணைக்கு வேலையாள் தேவை

இயக்கச்சி மற்றும் சுழிபுரத்தில் அமைந்துள்ள சிவபூமி விவசாய பண்ணையில் தங்கியிருந்து வேலை செய்யக் கூடிய பணியாளர்கள் தேவை. தகுதியானவர்கள் விண்ணப்பிக்கவும்.

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

சிவபூமி அறக்கட்டளை,
கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில். (8679)

தொலைபேசி இலக்கம் - 077 844 8796

1985ம் ஆண்டிலிருந்து இன்று வரையான தனித்துவமிக்கதொரு பயிற்சி நிலையம்

## யாழ் கலாலயா பயிற்சியகம்

விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். போதனா வைத்தியசாலை பின் புற வீதி)





மகளிருக்கான 3 மாத பயன்மிகு பயிற்சிகள் ஆரம்பமாகின்றன!

✌ கேக் ஐசிங் – றோயல், Parchment, Frosting, Fondant, Whipping Cream Icing, மாச்சீனி மலர்கள். (Sugar Flowers).

✌ உணவு தயாரித்தல் – உணவு வகைகள், 6 வகையான Cakes, Cup Cake மற்றும் பீஸா, சிற்றுண்டிகள் குளிர்பானங்கள், ஐஸ் கிறீம், புடிங் தயாரித்தல்.



✌ கூந்தல் வடிவமைப்புகளும் முடி சீராக்குதலும்
40 வகையான கொண்டைகள் போடுதல், முடி அயன் செய்தல், முடி சுருட்டுதல், Hair Colouring, முடி வெட்டுதல், Hair Perming.



✌ FACIALS (முக அழகுக்கலை)
Pedicure, Manicure, Nail Art, கண் புருவம் சீராக்குதல் (Eye Brow Threading), தேவையற்ற முடிகளைஅகற்றுதல் (Waxing)

✌ BRIDAL DRESSINGS
(மணப்பெண் அலங்காரங்கள்) இந்து, கிறிஸ்தவ இஸ்லாம் மணப்பெண் அலங்காரமும் Modern, கூர்க்காஸ், சிங்கப்பூர் குஜராத்தி, மடிசார், சிங்கள முறையிலான சேலை அணியும் முறைகள்.

பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

✌ பிளவ்ஸ், சாறி பிளவ்ஸ், சுரிதார், மற்றும் மகளிருக்கான ஆடைகள் தைக்கும் கிழமைநாள் தையல் பயிற்சிகள்.

பயிற்சிகள் யாவும் பலவருட அனுபவமிக்க எமது ஆசிரியைகளினால் சிறந்த முறையில் பயிற்றுவிக்கப்படும்!

கிழமை நாள் புதிய பிரிவுகள் ஆரம்பம் 24-05-2017
புதன் காலை 10.00 மணி
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 27-05-2017
சனி காலை 10.00 மணி

மேலும் விபரங்களை நேரில் அறிந்து கொள்ளலாம்.
-இயக்குநர்-




## கேள்விப்பத்திர அறிவித்தல்
## மக்கள் வங்கி
## சுத்திகரிப்புச் சேவைகளுக்கான கேள்விப்பத்திரம் கோரல்

மக்கள் வங்கியின் யாழ். பிராந்தியத்தைச் சேர்ந்த யாழ். ஸ்ரான்லி வீதி, காங்கேசன்துறை, யாழ்.பிரதான வீதி, ஊர்காவற்றுறை, நெல்லியடி, அச்சுவேலி, சங்கானை, சுன்னாகம், சாவகச்சேரி, வல்வெட்டித்துறை, யாழ். பல்கலைக்கழகம், யாழ்.கன்னாதிட்டி, பருத்தித்துறை ஆகிய கிளைகளிலும் கொக்குவில், மானிப்பாய், மல்லாகம், உரும்பிராய்,புத்தூர், பண்டத்தரிப்பு, கோப்பாய், அளவெட்டி, கொடிகாமம், கைதடி, உடுப்பிட்டி, திருநெல்வேலி, கல்வியங்காடு, இணுவில், புலோலி ஆகிய சேவை நிலையங்களிலும் யாழ். பிராந்திய தலைமைக்காரியாலயத்திலும் சுத்திகரிப்புச் சேவைகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட சேவை வழங்குநர்களிடம் முத்திரை இடப்பட்ட விலைகள் கோரப்படுகின்றன.

மீளச் செலுத்தப்படாத ரூபா 1000/- கேள்விப்பத்திர எழுத்தாவணக் கட்டணம் செலுத்துவதன் மூலம் 2017 ஆனி 5ஆம் திகதி திங்கட்கிழமை பி.ப 3.00மணி வரை எந்தவொரு வார நாளிலும் காலை 9.00- பி.ப. 4.00 மணி வரை பின்வரும் கைச்சாத்திடுவோரிடம் கேள்விப்பத்திர விபரங்களைப் பெறலாம்.

கேள்விப்பத்திர ஆவணங்களை பரிசோதித்துப் பார்க்குமாறு கோருவோர் கேட்கப்படுவதோடு எக்காரணம் கொண்டும் கேள்விப் பத்திரக் கட்டணம் மீளச் செலுத்தப்படமாட்டாது என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

குறிப்பிட்ட கிளைகள் மற்றும் சேவை நிலையங்களின் முகாமையாளர்களோடு தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கி அந்தந்த கட்டட வளாகங்களைப் பரிசோதிக்குமாறு கோருவோர் கேட்கப்படுகின்றனர்.

2017 ஆனி 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை பி.ப2.00 மணிக்கு அல்லது முன்பு கிடைக்கப்பெறுமாறு எல்லா முத்திரையிடப்பட்ட விலைக்கோரல்களும் பின்வருபவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பிராந்திய முகாமையாளர்,
பிராந்திய தலைமைக் காரியாலயம்,
இல: 82, கன்னாதிட்டி சந்தி,
யாழ்ப்பாணம்.

Fax : 021-222 2602
E-mail : jafrho@peoplesbank.lk
தொலைபேசி இல : 021-222 2601/ 021 222 8602

(சி-8622)


# இராசி பலன்

21.05.2017
(வைகாசி 07, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 5.53 மணிக்கு
தசமி பிற்பகல் 12.04 மணிவரை
பூரட்டாதி காலை 6.51 மணி வரை
சுபநேரம் 8.52-10.22 மணிவரை
இராகுகாலம் 4.22-5.52 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| சுக் சந் | புத | சூரி செவ் | |
| கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பூரம் | | |
| | | | ராகு |
| | சனி | | குரு |

**மீனம்** பெரிய மனிதர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், தேவையற்ற கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், போசன சுகமுண்டு, ஆரோக்கியம் சீராகும்.

**மேடம்** தேகாரோக்கியத்தில் கவனம் தேவை, வெளியூர்த் தொடர்புகள் விரிவடையும், பயணங்கள் ஏற்படும் வாய்ப்புண்டு, புதிய பொறுப்புக்கள் கூடும் நாள்.

**இடபம்** மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு, இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம்.

**மிதுனம்** பேச்சைக் குறைத்து செயலில் தீவிரம் காட்டுவீர்கள், குடும்பத்தினர் உங்கள் ஆலோசனைகளை ஏற்றுக் கொள்வர், ஆரோக்கியமான நாள்.

**கும்பம்** தேவையற்ற விவாதங்களைத் தவிர்ப்பது நல்லது, வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், எடுத்த காரியங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**கடகம்** மறதியால் விட்டுப்போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

**மகரம்** சேமிப்பில் அக்கறை காட்டுவீர்கள், உடன் பிறப்புக்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், போசன சுகமுண்டு.

**சிம்மம்** வாகனப் பழுது செலவுகள் ஏற்படலாம், உறவினர்களின் மனக் கசப்பிற்கு ஆளாகாமல் பார்த்துக் கொள்வது நல்லது, கௌரவக் குறைவான நாள்.

**தனுசு** மனதில் இனம் புரியாத சந்தோசம் குடிகொள்ளும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பாசம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**விருச்சிகம்** தொலைபேசி வழியில் வரும் செய்திகள் உறுதுணை புரியும், சொத்துக்களால் ஆதாயம் உண்டு, பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம்.

**துலாம்** உதிரி வருமானங்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தலைமைப் பதவிகள் உங்களைத் தேடி வரலாம், வெளியூர்த் தொடர்புகள் ஏற்படலாம், கௌரவமான நாள்.

**கன்னி** பயணங்கள் செல்லப் போட்ட திட்டங்கள் கைகூடும், புதிய பொருட் சேர்க்கைக்கு அடித்தளம் அமைப்பீர்கள், குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும்.

# புலிகளுக்கான நினைவேந்தல்களை சட்ட ரீதியாக்கிக்கொள்ள முயற்சி

## சிங்கள ஊடகம் குதர்க்கம்

உயிர்நீத்த தமிழீழ விடுதலைப்புலிப் போராளிகளுக்காக மேற்கொள்ளப்படும் நினைவேந்தல் நிகழ்வுகளை சட்ட ரீதியாக்கிக் கொள்ள முயற்சிக்கப்படுகின்றது என சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஒரு இலட்சத்து 46 ஆயிரத்து 679 தமிழர்கள் போரில் கொலை செய்யப்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறு உயிர் நீத்தவர்களை நினைவு கூர்ந்து அஞ்சலி செலுத்த அனுமதிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், புலம்பெயர் தமிழ் சமூகமும் முயற்சிப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த முயற்சிக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் சயிட் அல் ஹு சைனின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முயற்சிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் நல்லிணக்கப் பொறிமுறைமை குறித்த காரியாலயத்தின் பரிந்துரையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் சமர்ப்பித்து இதற்கான அனுமதி கோரப்பட்டுள்ளது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நடவடிக்கைகளுக்கு நீதிமன்றம் அனுமதி மறுத்துள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பின் முன்னாள் அதிகாரி யஸ்மின் சூகா ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையிடம் முறைப்பாடு செய்துள்ளார்.

எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவை அமர்வுகளின் போது போரில் உயிர் நீத்த தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அஞ்சலி செலுத்த அனுமதிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட உள்ளதாக சிங்கள நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# அரசியல் ரீதியான தீர்மானங்கள் எடுக்கப்பட்ட பின் அறிவிக்கப்படும்

## சு.க. அமைச்சர் துமிந்த கூறுகிறார்



0

அரசியல் ரீதியாக எடுக்க வேண்டியுள்ள முக்கியமான சில தீர்மானங்களை மேற்கொண்டதன் பின்னர் அந்த தீர்மானங்கள் தொடர்பில் பகிரங்கப்படுத்துவதற்கு எதிர் பார்த்துள்ளதாக அமைச்சர் துமிந்த திசாநாயக்க தெரிவித்தார்.

அவ்வாறான முக்கியமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னதாக அவை தொடர்பில் பகிரங்கப்படுத்த வேண்டிய தேவை இல்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

தற்போதைய நல்லாட்சிக்கு எதிரான தரப்பினர் சம்பந்தமாக எதிர்வரும் நாட்களில் அரசியல் ரீதியான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அநுராதபுரத்தில் நேற்று இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசும்போதே அமைச்சர் இவ்வாறு கூறியுள்ளார். (இ-7)

# வடமாகாண வைத்தியர்கள் நாளை வேலைநிறுத்தம்

நாளை 22ஆம் திகதி அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம் நாடு தழுவிய ரீதியில் போராட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட போராட்டத்தில் பங்கேற்ற மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியமைக்கு எதிர்ப்பை வெளியிட்டு இவ்வாறு போராட்டம் நடத்தப்படவுள்ளது.

அதே வேளை அளுத்கடையில் இருந்து கொழும்பு தேசிய வைத்தியசாலை நோக்கி அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினரின் ஏற்பாட்டில் பேரணி ஒன்றும் இடம்பெறும்.

இப் போராட்டத்தில் வடமாகாண வைத்தியர்கள் காலை 8மணி முதல் 12மணி வரை பின்வரும் கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபடுவர்.

1.சைட்டம் மருத்துவ கல்லூரிக்கு எதிராக பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்பட்ட போராட்டத்தில் பங்கேற்ற மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தியமை மற்றும் கைது செய்தமை.

2. இலங்கை மருத்துவ சபை மீது மேற்கொண்ட வெடிகுண்டுத் தாக்குதல் சம்பவத்திற்கு காரணமானவர்களை கைது செய்ய நடவடிக்கை எடுக்காமை.

3.சைட்டம் மருத்துவ கல்லூரியின் முன்னாள் தலைமை நிர்வாக அதிகாரி சம்பந்தபட்ட சூட்டுச் சம்பவத்திற்கு விசாரணை முடிவடைந்த பின்னரும் எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் இருப்பதற்கும்.

4.தொழிற் சங்க நடவடிக்கைகளையும்,அதன் தலைமையையும் நசுக்கும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டு வருவதற்கு கண்டனம் தெரிவித்தும்.

5.சைட்டம் மருத்துவ கல்லூரி மாணவர்களுக்கு அரச வைத்தியசாலைகளை பயன்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு வழங்கியதற்காக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் மேற்கொண்ட முறைப்பாட்டிற்கு எவ்வித விசாரணைகளையும் முன்னெடுக்காமை உள்ளிட்டவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் மேலும் எதிர்வரும் 29ம் திகதி முதல் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தினர் ஏனைய அனைத்து தொழிற் சங்கத்தினர் உதவியுடன் கால வரையறை இன்றிய போராட்டத்தில் ஈடுபடவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (இ-9)

## புதிய விதிகள்! சாரதிகளே அவதானம்

இலங்கையில் தற்போது அமுலில் உள்ள மோட்டார் போக்குவரத்துச் சட்டம் புதிய நடைமுறையை அமுலுக்குக் கொண்டுவந்துள்ளது. இதன் அடிப்படையில் அதிக தண்டப்பணமும் சாரதி அனுமதிப் பத்திரத்தை இடை நிறுத்தி வைப்பதும் அமுலுக்கு வந்துள்ளது.

✹ சீட் பெல்ட் போடாமல் சென்றால் (Without Seat Belt ) Rs. 1000

✹ புகை சான்று இல்லாமல் சென்றால் (Without PUC) Rs. 1500

✹ இன்சூரன்ஸ் இல்லாமல் சென்றால் (Without Insurance) Rs. 10000

✹ வாகன பதிவு சான்று இல்லாமல் சென்றால் (Without paper ) Rs.5000 + வாகனத்தை நீதிமன்றத்துக்கு எடுத்துச்செல்லப்படும் (Vehicle will be taken to court.).

✹ ஓட்டுநர் உரிமம் இல்லாமல் சென்றால் (Without license)Rs.10000, வாகனம் பறிமுதல் செய்யப்படும்

✹ வாகனத்தில் செல்லும் போது ஒரிஜினல்சான்றுகளை எடுத்து செல்ல வேண்டும். (All original papers should be taken along while Driving)

✹ அலைபேசியில் பேசிக் கொண்டு வாகனத்தை இயக்கினால் (Mobile while driving) Rs. 5000

✹ 3 முறைக்குமேல் அபராதமும் விதித்தால் 2 மற்றும் 4 சக்கர ஓட்டுநர் உரிமம் தற்காலிகமாக பறிமுதல் செய்யப்படும்.

இதற்கு மேலும் அபராதம் வாங்கினால் குற்றமாக கருதப்பட்டு ஓட்டுநர் உரிமம் முற்றிலுமாக இரத்துசெய்யபடும். (இ-7)

## 'வீரம் விளைந்தது'

தேசிய கலை இலக்கியப் பேரவையின் ஏற்பாட்டில் மகத்தான ஒக்டோபர் சோசலிசப் புரட்சியின் நூற்றாண்டை முன்னெடுக்கும் முகமாக நடத்தப்படுகின்ற கலை இலக்கிய ஆய்வரங்குத் தொடரின் நான்காவது ஆய்வரங்கு "மக்கள் இலக்கிய வரிசையில் நிக்கோலாய் ஒஸ்ரோவ்ஸ்கியின் "வீரம் விளைந்தது" என்ற தலைப்பில் இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப 3. 30 மணியளவில் இல. 62, கே.கே.எஸ். வீதி, கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கியப் பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இந் நிகழ்வில் தலைமை உரையினை பிரபல எழுத்தாளரும், கவிஞரும், ஊடகவியலாளருமான சி. கருணாகரன், ஆய்வுரையினை இலக்கிய ஆய்வாளர் ச. சத்தியதேவன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். இவ் ஆய்வுரையைத் தொடர்ந்து கலந்துரையாடல் இடம்பெறும். (இ-3)

# குடும்பஸ்தரை அச்சுறுத்தி தாக்கியதாக மனிதவுரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு

கோப்பாய் மத்தி பிரதேசத்தில், வீட்டில் இல்லாத நபருடைய விபரங்களைக் கேட்டு குடும்பஸ்தர் ஒருவரை அச்சுறுத்தி தாக்கியதாக மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கோப்பாய் மத்தி பிரதேசத்தில் வசித்து வரும் இ. பொன்ராசா (வயது -59) என்பவர் கடந்த வெள்ளிக்கிழமை பகல் பொழுது வீட்டில் இருந்துள்ளார்.

அந்த நேரத்தில் ஆறு பேர் அடங்கிய குழுவினர் வீட்டுக்குள் நுழைந்து, வீட்டில் இல்லாத மகனுடைய பெயரை கூறி எங்கே அவர் என கேட்டுள்ளனர். அவர் இல்லை எமக்கு தெரியாது. இல்லாத ஒருவரை ஏன் கேட்கிறீர்கள் என அந்த குடும்பஸ்தர் கேட்ட போது அவரை தாக்கி விட்டு சென்றுள்ளனர்.

தமக்கு நிம்மதியாக வீட்டில் குடும்பத்தினருடன் இருக்க முடியவில்லை என தெரிவித்து பொலிஸ் நிலையத்திலும் மனித உரிமை ஆணைக்குழுவிலும் தனது முறைப்பாட்டினை பதிவு செய்துள்ளார். (இ-9)

# மேல் மாகாண சபையின் ஸ்திரத்தன்மைக்கு ஆபத்து

மேல் மாகாணசபையின் ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

**இதனடிப்படையில் மேல் மாகாண சபையின் ஆளும் கட்சியின் 42 உறுப்பினர்கள்** சுயாதீனமாக செயற்படத் தீர்மானித்துள்ளனர். கூட்டுஎதிர்க் கட்சிக்கு ஆதரவானவர்களே இவ்வாறு சுயாதீனமாக இயங்கத் தீர்மானித்துள்ளனர்.

**மாகாணசபையில் ஆளும் கட்சி எடுக்கும் தீர்மானங்க**ளுக்கு புறம்பாக தனித்து தீர்மானம் எடுக்க இந்தக் குழுவினர் தீர்மா்னித்துள்ளனர்.

மேலும், இது தொடர்பில் அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-7)

## இசை விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வு

இலங்கை இளங்கலைஞர் மன்றம் வழங்கும் 38 ஆவது இசை விழாவின் மூன்றாம் நாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நல்லூர் சட்ட நாதர் வீதியில் அமைந்துள்ள இளங் கலைஞர் மன்றக் கலா மண்டபத்தில் கவிஞர் கு.வீரா **தலைமையில் இடம்பெறும்.**

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக இளங்கலைஞர் மன்ற ஆட்சிக்குழுத் தலைவரும் வடமாகாண சபை அவைத் தலைவருமான சீ.வீ.கே.சிவ ஞானம் கலந்து கொள்வார்.

இந்நிகழ்வில் குழுப்பாடல், பாடல், பாட்டு என்பன இடம்பெற்று மாலை நிகழ்வு**கள் 4 மணியளவில் மங்கல** விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும். மாலை நிகழ்வில் குழுப்பாடல் வீணைக் கச்சேரி இசையரங்கம் வயலின் ஷோலோ நாடகம் மற்றும் நீர்வையூர் பொன் சக்தி கலா மன்றம் வழங்கும் "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" நாட்டிய நாடகம் என்பன இடம்பெற்று பரிசளிப்பு வைபவமும் இடம் பெறவுள்ளமை குறிப்பிடத் **தக்கது.** (இ-3)

# யுத்த வெற்றியை கொண்டாடும் சூழ்நிலை தற்போது இல்லை

### கூட்டு எதிரணி கூறுகிறது



தற்போதைய சூழலில் யுத்த வெற்றியைக் கொண்டாடும் சூழ் நிலை இல்லாது போயுள்ள தாக கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்துள்ளார்.

வடக்கில்ஒரு சிலர் பயங்கர வாதிகளைக் கொண்டாடும் நிலைமை உருவாகியுள்ளதால் யுத்த வெற்றியின் உண்மையான அர்த்தம் இல்லாது செய்யப்பட்டுள்ள தாக வும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கொழும்பில்நேற்று இடம் பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இதனைக் கூறினார். (இ-7)


## தேவை

பிரசித்தி பெற்ற சிகை அலங்கார நிலையத்திற்கு வேலை செய்வதற்கு எல்லா வேலைகளும் தெரிந்த ஆண் ஒருவர் உடனடியாக தேவை. சம்பளம் 50%.

La Passion
Hair - Beauty - Bridal

தொடர்புகளுக்கு,
LA PASSION,
(Hair, Beauty, Bridal)
077 060 0228.

(C-8556)

## விநியோகஸ்தர்கள் தேவை

கடந்த 26 வருடங்களாக தகவல் தொழில்நுட்ப மற்றும் வலுசக்தி சார்ந்த உற்பத்தி பொருட்களை இறக்குமதி மற்றும் சந்தைப்படுத்தும் நாங்கள், எமது வியாபார பங்குதாரர்களுடன் நன்மதிப்பையும் நல்லுறவையும் பேணி வருகிறோம்.

எம் விநியோகஸ்தர்கள் தனிமனிதர்களாய் தொடங்கிய அவர்களது வலையமைப்பு இன்று 25 இற்கும் மேற்பட்ட பணியாளர்களுடன் வெற்றிகரமாக இயங்கி வருகிறது.

அந்தவகையில் INDOASIAN உற்பத்தி பொருட்களின் (mcb/rccb) ஏகவிநியோகஸ்தர்களான நாங்கள் எங்கள் வலையமைப்பை விஸ்தரிக்கும் வகையில் நாடு முழுவதும் விநியோகஸ்தர்களை வரவேற்கிறோம்.

தெரிவுசெய்யப்படும் விநியோகஸ்தர்களிடமிருந்து...
01. வங்கிப்பிணை
02. களஞ்சிய வசதி
03. விநியோகஸ்திற்கான வாகனம்
முதலியவற்றை எதிர்பார்க்கிறோம்

மேலதிக தகவல்களுக்கு அழைக்கவும்
077 2 919 046

(சி-97)

INDOASIAN MAKES SENSE

Debug Group of Companies

## டயானா பிளாஸ்ரிக் மீள்சுழற்சி

பைவர் கிளாஸ் மோல்ட், பைவர் கிளாஸ் உற்பத்தி, றபர் மோல்ட் மற்றும் சிறுவர்களுக்குத் தேவையான உள்ளக, வெளியக விளையாட்டு உபகரணங்கள் தரமான முறையில் செய்து தரப்படும்.

(சி.8589)

108, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 8680, 077 592 5088

## வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு

கந்தரோடை மூன்று கண் பிள்ளையார் எதிரில் அமைந்துள்ள நிலப் பரப்பு : 1 குளி 6, 7/8 வீட்டுடன் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:
077 363 4525,
077 255 3220

C-8682

## இலங்கை இளங்கலைஞர் மன்றம்

வழங்கும்

# 38வது இசை விழா

இடம் : இளங்கலைஞர் மன்றக் கலா மண்டபம், சட்டநாதர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்

**இன்று 21.05.2017 - ஞாயிற்றுக்கிழமை**
**மூன்றாம் நாள் இசைவிழா**

காலை அமர்வும் ஆற்றுகையும் பரிசளிப்பும்

தலைவர் : கவிஞர். கு.வீரா அவர்கள்
முதன்மை விருந்தினர் : திரு. சி.வீ.கே. சிவஞானம் அவர்கள் (வட மாகாண அவைத் தலைவர், தலைவர், ஆட்சிக்குழு இளங்கலைஞர் மன்றம்)

**காலை 9.00 மணி - மங்கல இசை**

நல்லூர் பிச்சையப்பா ரஜீந்திரன் குழுவினர்
நாதஸ்வரம் : P.S.R. சுரசாகித்தியன்M சாரகேசவன்
தவில் : கூழர். K. ராமகிருஷ்ணா, திருச்செங்கோடு அஜய்

**காலை 9.30 மணி - மங்கல விளக்கேற்றல்**

இறை வணக்கம் : செல்வி. சித்ரா கந்தசாமி
மன்றக் கீதம் : இளங்கலைஞர் மன்ற மாணவர்கள்

**காலை 9.45 மணி - இசையரங்கம்**

பாடல் : திரு. வர்ஜிகன் கமலகாந்தன் வயலின் : திரு. அ.ஜெயராமன்
மிருதங்கம் : செல்வன்.ஞா.வசந்

**காலை 10.15 - பாடல்**

பாடல் : செல்வி. சர்மிகா ராஜ்குமார்.
(இசை விழாவையொட்டி நடத்தப்பட்ட இசைப் போட்டியில் கீழ்ப் பிரிவில் முதலிடம் பெற்று தங்கப் பதக்கம் பெறும் மாணவி)
வயலின் : செல்வி. பிறிசில்லா ஜோர்ச்
மிருதங்கம் : திரு. சதா.வேல்மாறன்

**10.45 மணி - பாட்டு**

செல்வி. பகீரதன் சதீஷனா (இசை விழாவினையொட்டி நடத்தப்பட்ட இசைப் போட்டியில் மத்திய பிரிவில்முதலிடம் பெற்று தங்கப் பதக்கம் பெறும் மாணவி)
வயலின் : செல்வி. பிரிசில்லா ஜோர்ச் மிருதங்கம் : திரு.ந. நந்தகுமார்

**11.00 மணி - பாட்டு**

செல்வி. எழிலினி தவராசா மிருதங்கம் : திரு. எஸ். இராகுலன்
வயலின் : திருமதி. சைந்தவி நிஷாகரன்

**11.30 மணி - முதன்மை விருந்தினர் உரையும், பரிசளிப்பும்**

இசைப் போட்டியில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவிகளுக்கான பரிசில்களை வழங்கி மதிப்பளிப்போர் திரு. திருமதி. பொன். சுபாஸ் சந்திரன் குடும்பத்தினர்.

**காலை 11.50 மணி - பாட்டு**

திரு. N.V.M.N. பரந்தாமன்
நயினை ப. சிவமைந்தன்
வயலின் : திரு. அ.ஜெயராமன் மிருதங்கம் : செல்வன். ஞா.வசந்
கெஞ்சிரா : செல்வன். எஸ். டிலுக்சன்

தலைவர் திரு. ஜனகன் முத்துக்குமார் (சட்டத்துறை விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம்)

முதன்மை விருந்தினர் பேராசிரியர் சி. சிவலிங்கராஜா (முன்னாள் தலைவர் தமிழ்த்துறை)

**மாலை 4.00 மணி - மங்கல இசை**

நாதஸ்வரம் : ரா.தர்சனன், ரா.தர்சன்
தவில் : ரா.தர்சீலன், ரா.சிவசாகித்தியன்

**மாலை 4.30 மணி - மங்கல விளக்கேற்றல்**

இறை வணக்கம் : செல்வி. சித்ரா கந்தசாமி
மன்றக் கீதம் : இளங்கலைஞர் மன்ற மாணவர்கள்

**மாலை 4.45 மணி - குழுப்பாடல்**

காரைநகர் கிழவன்காடு கலாமன்ற மாணவர்கள்
வயலின் : செல்வி.எஸ். நிரஞ்சலா மிருதங்கம் : செல்வன். எஸ். விக்னேஸ்வரன்

**மாலை 5.05 மணி - வீணைக் கச்சேரி**

வீணை : திருமதி. குமுதா உமாகாந்தன் மிருதங்கம் : திரு. ப.சியாம்சிருஷ்ணா

**மாலை 5.35 மணி - இசையரங்கம்**

பாடல் : செல்வி. என். சங்கீதவாணி, செல்வி. எம். அனுசித்திரா
வயலின் : திரு. அ.ஜெயராமன்
மிருதங்கம் : பிரம்மஸ்ரீ. என். சிவசுந்தர சர்மா

**மாலை 6.15 மணி - வயலின ஷோலோ**

முகர்சிங் : சி. செந்தூரன்
வயலின் : கோபிதாஸ் மிருதங்கம் : பிரம்மஸ்ரீ. வி.ரமணா
கடம் : திரு. கு. ரவிசங்கர் கெஞ்சிரா : பிரம்மஸ்ரீ. என். சிவசுந்தர சர்மா

**மாலை 7.15 மணி - நாடகம்**

மாலை 7.45 - நீர்வையூர் பொன் சக்தி கலா மன்றம் வழங்கும் "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" நாட்டிய நாடகம்.
நட்டுவாங்கம் : திருமதி. கஜன் சத்தியபிரியா வயலின் : திரு. அ.ஜெயராமன்
பாட்டு : திருமதி.தமிழினி மயூரன் மிருதங்கம் : திரு. க.கஜன்

(C-8614) அனைவரையும் அன்புடன் அழைக்கும் இளங்கலைஞர் மன்றத்தினர்

# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை
கி.பா: 7சூரிசெவ் 11 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்: Civil Eng/அரசதொழில்
தொ.இ: B/7374

பிறப்பு: 1988 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா: 34செவ் 2 இல்
உயரம்: 174cm
தகைமை/தொழில்: Diploma/ஆசிரியர்
தொ.இ: B/7375

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: செவ் 2இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்:BA/பிரானஸ் PR
தொ.இ: B/7376

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 61சூரிசெவ் 10 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BA/ஆசிரியர்
தொ.இ: B/7378

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1994 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம்
கி.பா: 34
தகைமை/தொழில்: A/L
எதிர்பார்ப்பு: சைவபோசனம் முக்கியம்
தொ.இ: G/5882

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 50 செவ் 2 இல்
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: BA/அரசதொழில்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/5884

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: பூரம்
கி.பா: 62 செவ் 7 இல்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: BA/அரசதொழில்
தொ.இ: G/5885

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 12 செவ் 2 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BSc
எதிர்பார்ப்பு: வெளிநாடுமட்டும்
தொ.இ: G/5887

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# வேலைவாய்ப்பு

உல்லாச பயண சபையின் அனுமதியுடன் யாழ். நகரிலும் கொழும்பிலும் இயங்கும் ஹொட்டல் ஒன்றுக்கு கீழ் வரும் பதவிகளுக்கு தகுதியானவர்கள் விண்ணப்பிக்க முடியும்.

## 1. ஹொட்டல் முகாமையாளர் (Hotel manager with F/B Knowledge)

ஹொட்டல் முகாமைத்துவ பயிற்சி பெற்று குறைந்தது 3 வருடம் வேலை செய்த அனுபவம் இருத்தல் வேண்டும். தாய் மொழியுடன் ஆங்கிலம் முக்கியமானது அத்துடன் பிரத்தியேக அனுபவங்கள் விரும்பத்தக்கது.

## 2. காசாளர் (Cashier)

கல்வித் தராதரத்துடன் காசாளர் பதவியில் குறைந்தது 1 வருட அனுபவம் இருத்தல் வேண்டும் வயது- 23-30 வரை ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

## 3.வரவேற்பாளர் (Receptionist)

கல்வித் தராதரத்துடன் குறைந்தது 1 வருட அனுபவம் விரும்பத்தக்கது. தாய் மொழியுடன் சரளமாக ஆங்கிலம் பேசத் தெரிந்திருக்க வேண்டும். சிங்களம் தெரிந்திருப்பின் விசேட தகைமையாகக் கருதப்படும். ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

(சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்).
தொடர்புகளுக்கு :- 077 798 3933
077 932 8895

(8683)


# கட்டுநாயக்கவில் அவசரமாக கட்டார் விமானம் தரையிறக்கம்

(கொழும்பு)

தாய்லாந்திலிருந்து 202 பயணிகளுடன் டேஹா நோக்கி பயணித்துக் கொண்டிருந்த கட்டார் விமான சேவைகள் நிறுவனத்திற்குச் சொந்தமான "கிவ். ஆர்.841" என்ற விமானத்தில் ஏற்பட்ட திடீர் கோளாறு காரணமாக அவ்விமானம் நேற்று முன்தினம் இரவு 8.30 மணியளவில் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் தரையிறக்கப்பட்டது.

குறித்த விமானத்திற்குள் தீ ஏற் படும் அபாய நிலை ஏற்பட்டதனாலேயே அவ் விமானம் தரையிறக்கப் பட்டுள்ளது.

குறித்த விமானம் கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறங்கும் விமானம் அல்ல. எனினும் டோஹா நோக்கி பயணித்துக்கொண்டிருந்த போது இலங்கை வான்பரப்பில் வைத்து விமானத்திற்குள் தீ அபாயம் ஏற்பட்டுள்ளது.

ஆகவே அபாய நிலையை கருத்திற்கொண்ட விமானி பாது காப்பான முறையில் விமானத்தை கட்டுநாயக்க விமான நிலையத்தில் தரையிறக்கியுள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலை யத்தில் அவசரநிலை பிரகடனப் படுத்தப்பட்டு தீயணைப்பு வாகனம் மற்றும் அம்புலன்ஸ் வண்டிகளும் தயார் நிலையில் வைக்கப் பட்டி ருந்தன. இந்நிலையில் 202 பயணிகளுடன் விமானம் பாதுகாப்பாக தரையிறக்கப்பட்டதாக தெரிவிக்கப் படுகின்றது. (இ-7)

# அடுத்து அமெரிக்காவுக்கு செல்கிறார் பிரதமர் ரணில்



பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அமெரிக்கா செல்கின்றார். இதன் போது அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உள்ளிட்ட அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் உயர் அதிகாரிகளை சந்தித்து கலந்துரை யாடவுள்ளார்.

அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பராக் ஒபாமாவின் ஆட்சி நிறைவடைந்து தற்போது குடியரசு கட்சியின் ஜனாதிபதியான டொனால் ட்ரம்பின் ஆட்சியில் இலங்கையின் பிரதமர் ஒருவர் அமெரிக்காவிற்கு விஜயம் செய்வது இதுவே முதற் தடவையாகும். எனவே பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் அமெரிக்க விஜயம் இரு நாடுகளுக்கும் முக்கியமானதாக கருதப்படுகின்றது.

தொடர்ந்தும் மூன்று நாட்கள் அமெரிக்காவில் தங்கியிருக்கும் பிரதமர் ரணில் விக்ரமசிங்க பல தரப்பு சந்திப்புகளிலும் கலந்து கொள்ளவுள்ளார். எவ்வாறாயினும் அமெரிக்காவின் புதிய ஆட்சியில் இரு தரப்பு உறவுகளை வலுப்படுத்துவது தொடர்பாக இலங்கை கடந்த் நாட்களில் அக்கறையுடன் செயற்பட்டு வந்தது.

இரு நாடுகளிலுமே ஆட்சி மாற்றங்கள் ஏற்பட்டுள்ள நிலையில் இரு தரப்பு வெளிவிவகார கொள்கைகளில் புரிதலுடன் செயற்பட வேண்டியதுள்ளது. இவ்வாறானதொரு நிலையில் பிரதமர் அமெரிக்கா செல்கின்றமை முக்கியவிடயமாகும். (இ-7)

# ஒன்றிணைந்த எதிரணியின் நாடு தழுவிய ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை உடனடியாக நடத்துமாறு கோரி, ஒன்றிணைந்த எதிரணியினர் நாடு தழுவிய ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளனர். இது தொடர்பாக, ஒன்றிணைந்த எதிரணியின் நாடளாவிய ரீதியிலுள்ள தேர்தல் அமைப்பாளர்களுக்கு அறிவிக்கப்பட்டு ஏற்பாடுகள் செய்யப்படும் என்று, ஒன்றிணைந்த எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சட்டதரணி சிசிற ஜயக் கொடி தெரிவித்துள்ளார். வடமத்திய, சப்ரகமுவ மற்றும் கிழக்கு மாகாண சபையின் பதவிக் காலம் நிறைவடையவுள்ளதாலும் தற்போது ஏற்பட்டுள்ள குழப்பங்கள் காரணங்களினாலும், இரண்டு தேர்தல்களையும் உடனடியாக நடத்துமாறு, வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படும் என்று அவர் குறியுள்ளார். இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பான விரிவான தகவல்களை அடுத்த வாரம் அறிவிக்கவுள்ளதாக அவர் மேலும் கூறியுள்ளார். (இ-7)

# இலங்கையில் முதன் முறையாக கைப்பற்றப்பட்ட போதைப் பொருள் இரு பெண்கள் கைது

கிறிஸ்டல் மெத்" எனப்படும் அதிக பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய ஐஸ் ரக போதைபொருளை வைத்திருந்த இரண்டு பெண்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இவர்கள் வத்தளை பகுதியில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தப் பெண்களிடமிருந்து சுமார் 250 கிராம் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதுடன், இதன் பெறுமதி சுமார் 20 இலட்சம் என கண்டறியப்பட்டுள்ளது.

"கிறிஸ்டல் மெத்" எனப்படும் இந்த போதைப்பொருள் இலங்கையில் முதன் முறையாக கைப்பற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# குற்றமிழைத்த படையினருக்கு சிறைக்குள் ஆசி வழங்கல்

மகிந்த ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் ஊடகவியலாளர்களைப் படுகொலை செய்த மற்றும் ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்களை மேற்கொண்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள படையினரை சிறைச்சாலையில் சந்தித்து ஆசி வழங்கியுள்ளார் எல்லே குணவன்ச தேரர்.



அரசாங்கத்தினால் போர் வெற்றி நாளாகப் பிரகடனப் படுத்தப்பட்ட நேற்று முன் தினம் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் சென்று அங்கு தடுத்து வைக்கப்பட்டுள்ள படையினரை எல்லே குணவன்ச தேரர் சந்தித்தார்.

லசந்த விக்கிரமதுங்க படுகொலை, பிரகீத் எக்னெலிகொட கடத்தல், கீத் நொயார், உபாலி தென்னக்கோன் மீதான தாக்குதல்களில் தொடர்புடைய படையினருக்கு அவர் பிரித் ஓதி வழிபாடுகளை நடத்தி ஆசி வழங்கினார். (இ-7)




- 996 - புனித ரோமப் பேரரசின் மன்னனாக 16 வயது மூன்றாம் ஓட்டோ முடி சூடினான்.
- 1502 - போர்த்துக்கீச மாலுமி ஜொவாவோ டா நோவா புனித ஹெலெனா தீவைக் கண்டு பிடித்தார்.
- 1792 - ஜப்பானில் ஊன்சென் மலை வெடித்ததில் இடம்பெற்ற சூறாவளி மற்றும் சுனாமியினால் 14,300 பேர் கொல்லப்பட்டனர்.
- 1851 - கொலம்பியாவில் அடிமைத்தொழில் ஒழிக்கப்பட்டது.
- 1859 - பிக் பென் மணிக்கூடு முதன் முறையாக இயக்கப்பட்டது.
- 1864 - ரஷ்ய-கோக்கசஸ் போர் முடிவடைந்தது.
- 1871 - பிரெஞ்சு அரசுப் படைகள் பாரிஸ் கம்யூனைத் தாக்கினார். ஒரு வார முற்றுகையில் 20.000 கொம்ம்யூன் மக்கள் கொல்லப்பட்டு 38,000 பேர் கைது செய்யப்பட்டனர்.
- 1894 - 22 வயது பிரெஞ்சு கொடுங்கோலன் எமிலி ஹென்றி கழுத்து துண்டிக்கப்பட்டு மரண தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டான்.
- 1904 - பாரிசில் சர்வதேச உதைபந்தாட்ட கூட்டமைப்பு (குஜகுயு) ஆரம்பிக்கப்பட்டது.
- 1917 - அட்லாண்டாவில் இடம்பெற்ற பெருந்தீயில் பெரும் அழிவு ஏற்பட்டது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: பிரேசிலில் இருந்து 950 மைல் தூரத்தில் றொபின் மூர் என்ற அமெரிக்க போர்க் கப்பல் ஜெர்மனியின் யூ-படகினால் மூழ்கடிக்கப்பட்டது.
- 1991 - முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி சென்னைக்கருகில் மனிதக் குண்டுவெடிப் பொன்றில் கொல்லப்பட்டார்.
- 1991 - எதியோப்பியாவின் கம்யூனிச அரசுத் தலைவர் மெங்கிஸ்டு ஹைலி மரியாம் நாட்டில் இருந்து தப்பி வெளியேறினார். எதியோப்பிய உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- 1994 - யேமன் மக்களாட்சிக் குடியரசு யேமன் குடியரசில் இருந்து விலகியது.
- 1996 - தான்சானியாவில் பூக்கோவா என்ற என்ற பயணிகள் கப்பல் மூழ்கியதில் 1000 பேர் வரையில் கொல்லப்பட்டனர்.
- 2003 - வடக்கு அல்ஜீரியாவில் நிகழ்ந்த நிலநடுக்கத்தில் 2,000 பேருக்கு மேல் கொல்லப்பட்டனர்.
- 2006 - மட்டக்களப்பு மாவட்டத் துணைத் தளபதி கேணல் ரமணன் நினைவு நாள்.
- 2006 - சுதுமலை புவனேசுவரியம்மை கொடியேற்றம்.

பிறப்புகள்

- 1471 -ஆல்பிரெஃக்ட் டியுரே, செருமானிய ஓவியர், 'கணிதவியலாளர் (இ. 1528)
- 1780 - எலிசபெத் ஃபிரை, ஆங்கிலேயக் கொடையாளை, சீர்திருத்தவாதி (இ. 1845)
- 1799 - மேரி அன்னிங், ஆங்கிலேயத் தொல்லியல் ஆய்வாளர் (இ. 1847)
- 1873 - ஹான்ஸ் பெர்கர், செருமானிய நரம்பியல் நிபுணர் (இ. 1941)
- 1919 - எம்.என்.நம்பியார், தமிழ்த் திரைப்பட நடிகர (இ. 2008)
- 1930 - மால்கம் பிரேசர், ஆத்திரேலியாவின் 22வது பிரதமர் (இ. 2015)
- 1954- டி.பி.எஸ். ஜெயராஜ், இலங்கை ஊடகவியலாளர்
- 1954 - அனிதா ரத்னம், இந்திய நடனக் கலைஞர்
- 1959 - நிக் காஸ்சவேட்ஸ், அமெரிக்க நடிகர், இயக்குநர்
- 1959 - அப்துல்லா யாமீன், மாலைத்தீவுகளின் 6வது அரசுத்தலைவர்
- 1960 - மோகன்லால், தென்னிந்தியத் திரைப்பட நடிகர்
- 1960 - ஜெப்ரி டூபின், அமெரிக்க வழக்கறிஞர்
- 1961 - சஞ்சய் சுப்ரமணியம், இந்தியவியலாளர், வரலாற்றாளர்
- 1967 - கிறிஸ் பெனவா, கனடிய மற்போர் வீரர (இ. 2007)

சிறப்பு நாள்

- விடுதலை நாள் (மொண்டெனேகுரோ)
- கடற்படை நாள் (சிலி)

## 3 கோடியே 70 இலட்சம் நிதியில்

# ஆறு கமநல சேவை நிலையங்களுக்குட்பட்ட 10 புனரமைப்பு வேலைகள் முன்னெடுக்கப்படும்

### முல்லை. மாவட்ட கமநல அபிவிருத்தி உதவிப் பணிப்பாளர் தெரிவிப்பு

மத்திய கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் 3 கோடியே 70 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டில் முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் கீழ் 6 கமநல சேவை நிலையங்களின் கீழுள்ள நீர்ப்பாசனக் குளங்களின் புனரமைப்பு மற்றும் நீர்ப்பாசனக் கால்வாய்களின் புனரமைப்பு வேலைகள் என 10 வேலைகள் நடைபெறவுள்ளதாக கமநல அபிவிருத்தித் திணைக்களத்தின் முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவிப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

மத்திய கமநல் அபிவிருத்தித் திணைக்களத்தின் நடப்பாண்டுக்குரிய 3 கோடியே 70 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீட்டின் மூலம் வேலைகள் நடைபெறவுள்ளன.

இதற்கமைய, முள்ளியவளை கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கஞ்சுர மோட்டை குளப் புனரமைப்பு வேலைகளும், அளம்பில் கமநல சேவை நிலையத்தின் கீழ் உள்ள அளம்பில் குளத்தின் நீர்ப்பாசனக் கால்வாய்கள் புனரமைப்பு வேலைகளும், பாண்டியன்குளம் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட தேவி குளத்தின் புனரமைப்பு வேலைகளும், துணுக்காய் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கரம்பைக் குளத்தின் புனரமைப்பு வேலைகளும், ஒலுமடு கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட புலுமச்சி நாத குளத்தின் புனரமைப்பு வேலைகளும், தச்சடம்பன் குளத்திற்குட்பட்ட 6 இலக்க நீர்ப்பாசனக் கால்வாய் புனரமைப்பு வேலைகளும், ஒட்டு சுட்டான் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட கோடாலிக் கல்லூக்குளம், பெரிய இத்திமடுக்குளம், இடி தாங்கிக் குளம் ஆகிய குளங்களின் நீர்ப்பாசன கால்வாய்கள் புனரமைப்பு வேலைகளும், தவசி குளத்தின் குளப் புனரமைப்பு வேலைகளுமே நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, குறித்த வேலைகள் கேள்வி கோரல்கள் மூலமாக ஒபந்தகாரர்களிடம் கையளிக்கப்பட்டு வேலைகள் நடைபெறவுள்ளன.

வேலைகள் நடைபெறவுள்ள பகுதி கமக்கார அமைப்புக்களின் விவசாயிகள் வேலைகள் தொடர்பில் கண்காணிப்பு செய்வதுடன், வேலைகளில் ஏதும் குறைபாடுகள் காணப்படின் தங்கள் பகுதி கமநல சேவை நிலையத்தின் கமநல அபிவிருத்தி உத்தியோகத்தர் ஊடாக தனக்கு அறியத்தருமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (2-5-15)




## கலை கலாசார பேரவையின் பொதுக் கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும்

பூநகரி பிரதேச சபை கலாசார பேரவையின் பொதுக் கூட்டம் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் பூநகரி பிரதேச செயலர் கிருஸ்ணேந்திரன் தலைமையில் பூநகரி பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் அங்கத்தவர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டது.

ஆர்வமுள்ள கலைஞர்கள், படைப்பாளிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் 2017 அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றி ஆராயப்படுவதுடன் இவ்வாண்டுக்கான கலை கலாசார பேரவையின் நிர்வாகிகள் தெரிவும் இடம்பெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5-84)

# ஜனாதிபதி மக்கள் சேவை நாளை புதுக்குடியிருப்பில்

ஜனாதிபதி மக்கள் சேவை செயற்றிட்டத்தின் கீழ் நடமாடும் சேவை ஒன்று புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தில் நாளை திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை நடைபெறவுள்ளது.

இந் நடமாடும் சேவையில் கீழ் குறிப்பிட்ட சேவைகளை பொது மக்கள் பெற்றுக் கொள்ள முடியும் என பிரதேச செயலாளர் அறியத் தந்துள்ளார்.

தேசிய அடையாள அட்டை, பிறப்பு, விவாக உத்தேச வயது சான்றிதழ், வாகன சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக் கொள்வதற்கான மருத்துவ அறிக்கை, பரீட்சை நடத்துதல் மற்றும் மோட்டார் வாகனத்திணைக்களத்தின் ஏனைய சேவைகள், முதியோர் அடையாள அட்டை (சிறுநீரக நோய், புற்று நோய், தலசீமா, தொழு நோய், காசநோய்) ஆகியவற்றுக்கான நோய்க் கொடுப்பனவு விண்ணப்பம், தற்செயல் நிவாரணக் கொடுப்பனவு விண்ணப்பங் கள் ஏற்றுக் கொள்ளல், இல வச மூக்குக் கண்ணாடி வழங்கல், தேசிய வீடமைப்பு அதிகார சபையின் கடன் தொடர்பான ஆலோசனை, முதியோர் அடையாள அட்டை, வங்கிக்கடன் சேவை, பொதுவான வைத்திய சேவைகள், காணி உரிமை சம்பந்மான பிரச்சினைகள், காணி அனு மதிப்பத்திரங்கள் வழங்கல், வனவளத் திணைக்களம் தொடர்பான காணிப்பிரச்சினைகளை தீர்த்தல், சிறு தொழில் தொடங்குவது தொடர்பாக அறிவுரை, தனியார் துறையில் தொழில் வாய்ப்புக்களை அறிமுகப்படுத்தலும் சுயதொழில் வாய்ப்புக் களைஅறிமுகப்படுத்தல், வெவ்வேறு துறைகளில் பயிற்சிகள் பெறுவது தொடர்பாக இளைஞர், யுவதிகளுக் கான அறிவுரைகள் வழங்குதல் போன்ற சேவைகளைப் பெற்றுக் கொள்ள முடியும் என புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார். (2-5)

# உரிமையுடனான உறவுச் சங்கம் மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு

(கிளிநொச்சி)

கிளி/ வட்டக்கச்சி மத்திய கல்லூரி பழைய மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு உரிமையுடனான உறவுச் சங்கமம் எனும் பெயரில் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடைபெறும்.

இந் நிகழ்விற்கு சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் முன்னாள் அதிபர்கள் 9 பேர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இவர்களுடன் கல்லூரியின் பழைய மாணவரும் முன்னாள் கல்லூரியின் ஆசிரியருமான சி.சிறிதரன் எம்.பி. கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இந்தஒன்றுகூடலின்போது ஜூன் மாதம் நடைபெறவுள்ள கல்லூரியின் வைரவிழா தொடர்பாகவும் கல்லூரியின் எதிர்காலத்திட்டங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளதால் அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

கலந்து கொள்ள விரும்புவோர் முன்கூட்டியே 077 102 3759, 077 087 9277 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும். (2-5-277)

# காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் சார்பாக கையெழுத்து அடங்கிய மகஜர்

### பிரித்தானிய பிரதமர் அலுவலகத்தில் கையளிப்பு




வடக்கில் இடம்பெற்று வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களுடைய தொடர் போராட்டத்தினை சர்வதேச சமூகத்துக்கு தெரியப்படுத்தும் வகையில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தின் சார்பாக பிரித்தானியாவில் உள்ள தமிழ் இளைஞர் செயற்பாட்டாளர்கள் இணைந்து பிரித்தானிய பிரதமர் அலுவலகத்தில் மகஜர் ஒன்றினை நேற்று முன்தினம் கையளித்துள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கத்தின் சார்பாக அவர்களின் கையெழுத்து அடங்கிய மகஜரை புலம்பெயர் சட்டத்தரணி குலசேகரம் கீதர்த்தனன் தலைமையில் ஆன குழுவினர் கையளித்திருந்தனர்.

அந்த மகஜரில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் ஒன்றிணைந்து தமது உறவுகளை தேடுவதற்கு கடந்த 3 மாதங்களுக்கு மேலாக கிளிநொச்சி மாவட்டத்திலும் வேறு மாவட்டங்களிலும் தெருவோரமாக தொடர்ச்சியான போராட்டத்தை மேற்கொண்டு வருகிறோம்.

எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்று தெரிந்து கொள்ள வேண்டும். யுத்தம் நிறைவடைந்து 8 ஆண்டுகள் கடந்த நிலையிலும் எமக்கான பதில் தரப்படவில்லை. அரசு எம்மையும் எமது கோரிக்கைகளையும் அலட்சியம் செய்து வருகிறது. உமது உணர்வுகளை கொச்சைப்படுத்துகின்றனர்.

நமது சிறிய மாவட்டத்தில் மட்டும் 2009 இல் உள்நாட்டு யுத்தத்தின் முடிவில் காணாமல் போன ஆயிரத்து 200 பேர் உள்ளனர். அத்துடன் இறுதி யுத்தத்தில் சரணடைந்தவர்கள் மற்றும் சந்தேக நபர்களாக அடையாளம் காணப்பட்டவர்கள் கைது செய்யப்பட்டனர். போர் முடிவடைந்த பின்னும் கடத்தப்பட்டு கைது செய்யப்பட்டார்கள், இதற்கு இலங்கை அரசாங்கம் பொறுப்பு கூற வேண்டும்.

அத்துடன் இரகசிய முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களின் பெயர்களை அறியத் தரவேண்டும் என நாம் கோரினோம். எமது உறவுகள் இலங்கை இராணுவத்தால் இரகசிய முகாம்களில் வைக்கப்பட்டு சித்திரவதை செய்யப்படுகிறர்கள் என்பதை நிரூபிக்கும் சான்றுகள் எம்மிடம் உள்ளன. ஆனால் அவர்கள் எமது கோரிக்கைகளை செவிசாய்ப்பதாக இல்லை.

நாம் இந்த கவனயீர்பு போராட்டத்தை ஆரம்பித்து 80 நாட்களுக்கு அதிகமான நாட்கள் கடந்து விட்டன.

நாம் உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் மிகவும் பாதிப்படைந்து உள்ளோம். அரசோ, சர்வதேசமோ சமூக அமைப்புக்களோ எமது வேண்டுகோள்களுக்கு பதிலளிக்கவில்லை. எமது பிள்ளைகளுடன் சேர்ந்து வாழ நாங்கள் விரும்புகிறோம். இவற்றை மீண்டும் சர்வதேசத்துக்கு தெரியப்படுத்த விரும்புகிறோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-5-9)

# கண்டாவளையில் நிலமெஹெவர தேசிய நிகழ்ச்சி திட்டத்தின் நடமாடும் சேவை



(மல்லாவி)

"நிலமெஹெவர" ஜனாதிபதி மக்கள்சேவை தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் நடமாடும் சேவை கிளிநொச்சி கண்டாவளை பிரதேசத்தில் தர்மபுரம் பாடசாலையில் நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்றது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்தன பிரதம விருந்தினராக கலந்துகொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்துள்ளார்.

இந் நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டை, பிறப்பு, விவாக உத்தேச வயது சான்றிதழ்கள், வாகன சாரதி அனு மதிப்பத்திரம் பெற்றுக் கொள் வதற்கான மருத்துவ அறிக்கை, பரீட்சை நடத்துதல் மற்றும் மோட்டார் வாகனத் திணைக்களத்தின் ஏனைய சேவைகள், முதியோர் அடையாள அட்டை சிறுநீரக நோய், புற்று நோய், தலைசீமா, தொழுநோய், காசநோய்) ஆகியவற்றுக்கான நோய்க்கொடுப்பனவு விண்ணப்பம், தற்செயல் நிவாரணக் கொடுப்பனவு விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளல் ,இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல், தேசிய வீடமைப்பு அதிகாரசபையின் கடன் தொடர்பான ஆலோசனை, முதியோர் அடையாள அட்டை, வங்கிக் கடன் சேவை, பொதுவான வைத்திய சேவைகள் ,காணி உரிமை சம்பந்தமான பிரச்சினைகள், காணி அனுமதிப் பத்திரங்கள் வழங்கல் வனவளத் திணைக்களம் தொடர்பான காணிப் பிரச்சினைகளை தீர்த்தல், சிறு தொழில் தொடங்குவது தொடர்பாக அறிவுரை, தனியார் துறையில் தொழில் வாய்ப்புக் களை அறிமுகப்படுத்தலும் சுய தொழில் வாய்ப்புக்களை அறிமுகப்படுத்தல், மின்சார சபை தொடர்பான பிரச்சினைகள், வங்கிஅலுவல்கள் சுய தொழில் பொலிஸ் திணைக்களம் சார்ந்த சேவை கள், பிரதேச சபைசார்ந்த சேவைகள், சிறுவர்பெண்கள் தொடர்பான பிரச்சினைகள்,வீதி தொடர்பான பிரச்சினைகள் ,புனர்வாழ்வு போன்ற இன்னும் பலசேவைகள் வழங்கப்பட்டன.இந் நடமாடும் சேவை தேசிய ரீதியில் ஒவ்வொரு மாவட்டத்திலும் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.இந்த நிகழ்வில் பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சர் வஜிர அபேவர்த்தன, சிறுவர் பெண்கள் விவகார இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா,வடக்கு மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா,வடக்குமாகாண சபை உறுப்பினர் வை.தவ நாதன், மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், கண்டாவளை பிரதேச செயலாளர் த.முகுந்தன், மற்றும் அமைச்சின் அதிகாரிகள் கலந்துகொண்டதோடு கண்டாவளை பிரதேசத்தை சேர்ந்த பெருமளவு மக்களும் கலந்து கொண்டிருந்தனர். (2-5-312)

# செட்டிக்குளம் செல்லும் அரச உத்தியோகத்தர்களை ஏற்றாது செல்லும் இ.போ.ச. பேருந்துகள்


வவுனியாவில் இருந்து செட்டிகுளம் செல்லும் அரச உத்தியோகத்தர்களை ஏற்றாது இலங்கை போக்குவரத்துச் சபை பேருந்துகள் செல்வதாக அரச உத்தி யோகத்தர்கள் குற்றம் சாட்டி யுள்ளனர்.

வவுனியா பேருந்து நிலையத்தில் இருந்து புறப்படும் இ.போ.சபை பேருந்துகள் உரிய நேரத்திற்கு சேவையில் ஈடுபடாததால் அரச உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் உரிய நேரத்திற்கு கடமைக்கு செல்ல முடியவில்லை எனத் தெரிவித்து கடந்த மார்ச் மாதம் வவுனியா பேருந்து நிலையத்தில் செட்டிகுளம் செல்லும் அரச உத்தியோகத்தர்கள் ஆர்ப்பாட்டம் செய்திருந்ததுடன் அரசாங்க அதிபர் மற்றும் இ.போ.சபை சாலை முகாமையாளரிடம் மகஜரும் கையளித்திருந்தனர்.

இந்நிலையில் தற்போது அரச உத்தியோகத்தர்கள் வீதியில் நின்று இ.போ.சபை பேருந்தை மறித்தால் நிறுத்தாது செல்வதாகவும், தமது அலுவலங்களுக்கு கடந்து தூரத்தில் பேருந்துகளை நிறுத்தி தம்மை இறக்குவதாகவும் அரச உத்தியோகத்தர்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

இது தொடர்பில் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் கவனம் செலுத்தி தாம் உரிய நேரத்திற்கு வேலைக்குச்செல்ல உதவ வேண்டும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (2-5-250)

# இந்தியா, சீனா இடையே விவாதப்புள்ளியாக இலங்கை





சாதகமற்ற மற்றும் குறைவான கணிப்பீடு போன்ற காரணிகளினால், இந்தியா, சீனா ஆகிய இரு நாடுகளுக்கு இடையில் இலங்கை ஒரு விவாதப் புள்ளியாக மாறியுள்ளது. கொழும்புத் துறைமுகத்தில் சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் தரித்து நின்றமையால் மட்டும் இவ்விரு நாடுகளுக்கும் இடையில் இராணுவ சார் முரண்பாடுகள் ஏற்படவில்லை.

இலங்கையானது கேந்திர அரசியல் முக்கியத்துவம் மிக்க அமைவிடத்தைக் கொண்டுள்ளது. சிறிய நாடுகள் தவிர்க்க வேண்டிய இரு விடயங்களை இலங்கை கைக் கொண்டது.

முதலாவது, இலங்கை தனது உள்நாட்டிற்குள் எழுந்த சிறுபான்மைத் தமிழ் மக்கள் தொடர்பான அரசியல் பிரச்சினையைத் தீர்க்குமாறு இந்தியாவால் வழங்கப்பட்ட அழுத்தத்தை முறியடிப்பதற்காக , சீனாவின் உதவியை நாடியது.

இரண்டாவதாக, சீனாவிடமிருந்து பல பில்லியன்களை ஏற்றுக்கொள்வதன் மூலம் உள்நாட்டில் தனக்கான அதிகாரத்துவத்தை உத்தரவாதப்படுத்த முடியும் என இலங்கையின் அரசியல் தலைமைத்துவத்தின் ஒரு பகுதி தீர்மானித்தது.

இலங்கையால் கைக் கொள்ளப்பட்ட இவ்விரு விடயங்களுமே இந்தியா இதற்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்குக் காரணமாக இருந்தது. இதன் காரணமாக சீனாவிடமிருந்து இலங்கை அதிக வட்டியில் கடனைப் பெற்றது. அத்துடன் பொருளாதார ரீதியில் பயனற்ற சில கட்டுமானத் திட்டங்களை சீனா, இலங்கையில் மேற்கொள்வதற்கும் காரணமாக அமைந்தது.

இலங்கை மீதான சீனாவின் இத்தகைய தலையீடானது உலகின் சக்தி வாய்ந்த நாடுகள் இலங்கையின் மீது அதிகூடிய கவனத்தைக் குவிப்பதற்கு வழிவகுத்தது.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி "முதலில் அயல் நாடு" என்கின்ற தனது கோட்பாட்டை மையப்படுத்தி இது வரை இரண்டு தடவைகள் இலங்கைக்கு உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ளார். முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் காலத்தில், இலங்கை தான் எதிர்கொண்ட தனது அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வாக சீனாவையே நாடி நின்றது. மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டிருந்தது. இதன் காரணமாகவே மைத்திரிபால சிறிசேன, ஜனாதிபதியாக வருவதற்கு இந்தியா உதவியது.

ஆனால் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட போதிலும் சீனாவால் இதன் மீது சுமத்தப்பட்ட பாரிய கடன் தொகையிலிருந்து இலங்கையால் வெளிவர முடியவில்லை. இதுவே மேலும் இலங்கையில் சீனா பிரசன்னமாவதைத் தடுக்க முடியாமைக்கான காரணமாக அமைந்துள்ளது.

இந்தியாவின் பதிலானது பொருத்தமான வகையில் அளவீடு செய்யப்பட்டுள்ளது. இலங்கை தன் மீதான கடன் சுமையைக் குறைப்பதற்கு உதவுவதில் இந்தியா தயக்கம் காண்பித்துள்ளது. ஆனால் இலங்கை மீதான கடன்சுமைக்கு அப்பால், இந்த நாடு வளர்ச்சியடைவதற்கான சில திட்டங்களையும் முதலீடுகளையும் மேற்கொள்வதற்கான உடன்பாடுகளில் இந்தியா கைச்சாத்திட்டுள்ளது.

சீனாவின் கடன் சுமையைக் குறைப்பதற்காக தனது நிலப்பரப்பை சீனாவிற்கு நீண்டகால குத்தகைக்கு வழங்குவதற்கு இலங்கை தீர்மானித்த போது அதனை மக்கள் எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

சீனாவின் பட்டுப்பாதைத் திட்டத்தை மேற்கொள்வதற்கு உடன்பட்ட ஏனைய நாடுகளுக்கு இலங்கை தற்போது எதிர்கொண்டுள்ள பிரச்சினைகள் எச்சரிக்கை மணியை எழுப்பியுள்ளது.

இலங்கைக்கு அண்மையில் உத்தியோகபூர்வ பயணத்தை மேற்கொண்ட இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி, பௌத்த மாநாடு ஒன்றில் கலந்து கொண்டிருந்தார். அதன் பின்னர் இவர் இந்திய வம்சாவளி தோட்டத் தொழிலாளர்களுடன் சந்திப்பை மேற்கொண்டிருந்தார்.

பிரதமர் மோடி இவ்விரு சமூகங்களிடமிருந்தும் நற்பெயரை எடுப்பதற்காகவே இவ்விரு சந்திப்பையும் மேற்கொண்டிருந்தார். இலங்கையில் தொடரப்பட்ட உள்நாட்டு யுத்தமானது முடிவிற்குக் கொண்டு வரப்பட்ட பின்னர் தற்போது தமிழ் மற்றும் சிங்கள சமூகங்களிற்கு இடையிலும் நல்லிணக்கம் உருவாக்கப்படுகிறது.

ஆகவே மூன்றாம் நாடுகளை அங்குள்ள இன வேறுபாடுகளை வைத்து நோக்காது அந்த நாடுகள் மீது நன்மை பயக்கும் கோட்பாடுகளைப் பிரயோகிக்க வேண்டும் என்பதை இலங்கையில் இடம்பெற்று முடிந்த கசப்பான உள்நாட்டு யுத்தம் சுட்டி நிற்கிறது.

ஆகவே இலங்கையுடன் இந்தியா பரஸ்பர உறவுகளை மேலும் பலப்படுத்திக் கொள்வதற்கு இவ்வாறான பல்வேறு உத்தியோகபூர்வ பயணங்கள் மேற்கொள்ளப்படுவதுடன் இலங்கை மீது இந்தியா கணிசமானளவு கவனத்தைக் குவிக்க வேண்டிய தேவையேற்படும்.

ஹிந்துஸ்தான் ரைம்ஸ்

# சிங்கள - முஸ்லிம் மோதலை ஏற்படுத்துவதற்கு சிலர் சூழ்ச்சி

## அதாவுல்லா குற்றச்சாட்டு

சிங்கள - முஸ்லிம் மோதல் ஒன்றை ஏற்படுத்தும் சூழ்ச்சிகள் இடம்பெற்று வருவதாக முன்னாள் அமைச்சர் ஏ.எல்.எம். அதாவுல்லா தெரிவித்துள்ளார்.

மல்வத்து மாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கள தேரரை சந்தித்த பின்னர் கண்டியில் நேற்று முன்தினம் ஊடகவியலாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அதாவுல்லா இதனை கூறியுள்ளார்.

பள்ளிவாசல்கள் மீது கல் வீச்சுத் தாக்குதல் நடத்தப்படுகிறது. ஏழை முஸ்லிம் மக்களின் வீடுகள் உடைக்கப்படுகின்றன. இதற்கு முன்னரும் இப்படியான சம்பவங்கள் நடந்துள்ளன.

சிங்கள மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்கும் இடையில் பகையை ஏற்படுத்தி, சிங்கள மக்களுடன் வாழ்வதை விட தமிழ் மக்களுடன் வாழ்வது சிறந்தது என்ற நிலைமையை உருவாக்கி, வடக்கு-கிழக்கை இணைக்கும் சதித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அரசாங்கம் ஒன்றை மாற்ற சிங்கள, முஸ்லிம் மோதலை ஏற்படுத்துவதே இதன் நோக்கம்.

பொதுபலசேனா அமைப்பின் பொதுச் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரின் செயற்பாடுகள் சம்பந்தமாக மாநாயக்க தேரருக்கு தெளிவுப்படுத்தினேன்.

ஞானசார தேரர் எந்த உடன்பாட்டின் அடிப்படையில் இவற்றை செய்கின்றார் என்பது எனக்கு தெரியாது. அவர் அல்லாஹ் மற்றும் நபியை விமர்சித்து வருகிறார்.

இவ்வாறு சட்டத்தை தன் கையில் எடுத்துக்கொண்டு ஞானசார தேரர் செயற்பட முடியாது எனவும் தெரிவித்தார். (இ-7)

# இந்தியாவின் கைது நடவடிக்கையை எதிர்த்து

## மத போதகர் சாகிர் நாயக்கிற்கு சவுதி அரேபியாவில் குடியுரிமை



பிரபல இஸ்லாமிய மதபோதகர் சாகிர் நாயக்கிற்கு, சவுதி அரேபிய அரசு குடியுரிமை வழங்கியுள்ளது. இஸ்லாமிய மத போதகர் சாகிர்நாயக் 'இஸ்லாமிய ஆராய்ச்சி மையம்' என்ற அறக்கட்டளையை இந்தியாவில் நடத்திவந்தார். அவர் அந்த அறக்கட்டளையின் மூலம் இளைஞர்களிடம் தீவிரவாதத்தைத் தூண்டுவதாக குற்றம் சுமத்தி அவரது தொண்டு நிறுவனத்தை இந்திய அரசு தடைசெய்தது.

இதனையடுத்து தேசியப் புலனாய்வு அமைப்பு கடந்த டிசெம்பர் மாதம் அவரது வீடு மற்றும் அலுவலங்களில் சோதனை நடத்தியது. பின்னர் சாகிர்நாயக் விசாரணைக்காக நேரில் ஆஜராக வேண்டும் என்று தேசியப் புலனாய்வு அமைப்பு கடந்த மார்ச் மாதம் அழைப்பாணை அனுப்பியது.

எனினும் அவர் இது வரை ஆஜராகாமல் சவுதி அரேபியாவில் தங்கி இருப்பதன் காரணமாக அவரை கைதுசெய்யும் நடவடிக்கையில் இந்திய அரசாங்கம் ஈடுபட்டு வருகின்றது. இந்நிலையில் சவுதி அரேபிய அரசு சாகிர்நாயக்கிற்கு குடியுரிமை வழங்கியுள்ளது.

இன்டர்போல் அதிகாரிகளின் கைது நடவடிக்கையைத் தவிர்ப்பதற்காக அவருக்கு குடியுரிமை வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (இ)

# கொழும்பில் கட்டடங்களை அமைக்க புதிய நடைமுறை

(கொழும்பு)

கொழும்பு உள்ளிட்ட மேல் மாகாணத்தில் நிர்மாணிக்கப்படும் புதிய கட்டடங்கள் தொடர்பில் புதிய நடைமுறை அறிமுகம் செய்யப்படவுள்ளது.

இனி வரும் காலங்களிலும் நிர்மாணிக்கப்படும் கட்டடங்களை மாநகர மற்றும் மாகாண அபிவிருத்தி அமைச்சு மற்றும் பொறியாளர்கள் முழுமையாக கண்காணிக்கவுள்ளனர்.

இதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மாநகர மற்றும் மாகாண சபை அமைச்சின் பொறியியல் செயலாளர் நிஹால் ரூபசிங்க தெரிவித்துள்ளார்.

பொதுவாக சட்டத்திற்கமைய மாடி கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு முன்னர், இலங்கை பொறியியல் நிறுவனத்தின் பொறியியலாளர் அனுமதிக்கமைய நிர்மாணிக்க வேண்டும்.

வெள்ளவத்தையில் இடிந்து விழுந்த கட்டடம் அவ்வாறான அனுமதிக்கமைய நிர்மாணிக்கப்பட்டதல்ல என செயலாளர் தெரிவித்தார்.

இதேவேளை இலங்கையில் மாடி கட்டடங்கள் நிர்மாணிப்பதற்கு பொறியியலாளர் நிறுவனத்தில் அங்கத்துவம் கொண்ட பொறியியலாளரின் அனுமதி அவசியமாகும் என அவர் தெரிவித்தார்.


அதற்கமைய அந்த பொறியியலாளர்கள் தொடர்பிலான தகவல்கள் கொழும்பு நகர சபையில் கோரப்பட்டுள்ளது.

அதற்கமைய தவறாக அனுமதி வழங்கியவர் இருந்தால் அவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இனி வரும் காலங்களில் இந்த நாட்டில் கட்டட பாதுகாப்பு நவீன பொறியியல் தொழில்நுட்பத்தில் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# இலங்கையின் நற்பெயர், கௌரவம் சர்வதேச ரீதியில் மேலோங்கியுள்ளது

## ஊடகத்துறை அமைச்சர் கயந்த மகிழ்ச்சி



(கொழும்பு)

தகவல் அறியும் உரிமை சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதன் மூலம் இலங்கையின் நற்பெயர் சர்வதேச ரீதியில் மேலோங்கி இருப்பதுடன் நாட்டின் மீதான கௌரவமும் அதிகரித்திருப்பதாக பராளுமன்ற மறுசீரமைப்பு மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக தெரிவித்தார்.

தகவல் அறியும் உரிமை சட்டம் குறித்து கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்ட ஆசிரிய ஆலோசகரர்களுக்கு தெளிவுபடுத்தும செயலமர்வு கொழும்பில் அரச தகவல் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. இதன் ஆரம்ப நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அமைச்சர் கயந்த கருணாதிலக உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆகிய தொடர்பிலான ஒழுக்க முறைகளும் இதன் மூலம் ஏற்பட்டுள்ளது. தற்பொழுது அரச நிறுவனங்களின் அதிகாரிகளுக்கு சட்டம் பற்றி தெளிவுபடுத்தப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் கயந்த கருணாதிலக மேலும் தெரிவித்தார். (இ-7)

# துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த சிறுமியின் வீட்டில் மகிந்த



பிலியந்தலை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் சிறுமி ஒருவர் உயிரிழந்தார்.

துப்பாக்கி சூட்டுச் சம்பவம் காரணமாக காயமடைந்த சிறுமி, வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் உயிரிழந்திருந்தார்.

சமாதிரன்சிக்கா பத்திரண என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த சிறுமியின் உடலுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அவரின் வீட்டுக்கு சென்றுள்ளார்.

11 வயதான குறித்த சிறுமி பொரளை, ரத்னாவலி பாலிக்கா வித்தியாலயத்தில் கல்வி கற்று வந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# கட்டட சரிவு அனர்த்தம் குறித்து அதிகாரிகள் அசமந்தப்போக்கு





(கொழும்பு)

கொழும்பு, வெள்ளவத்தை பகுதியில் இடம்பெற்ற கட்டட சரிவு அனர்த்தத்தில் சிக்குண்டுள்ளதாக தெரிவிக்கப்படும் பத்தனை கிறேக்கிலி பகுதியைச் சேர்ந்த இளைஞனை மீட்பதில் அதிகாரிகள் அசமந்த போக்கினை காட்டுவதாக தெரிவித்து நேற்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளவத்தை பகுதியில் ஏற்பட்ட கட்டட சரிவில் பத்தனை கிறேக்கிலி தோட்டத்தைச் சேர்ந்த 20 வயதுடைய ராமர் நிரோஷன் என்பவர் சிக்கியுள்ளதாக தெரிவீக்கப்படுகிறது.

இந்த நிலையிலேயே குறித்த தோட்டத்தைச் சேர்ந்த கொழுந்து நிறுக்கும் பொது இடத்தில் இளைஞனின் தாய் மற்றும் தோட்ட தொழிலாளர்கள் ஒன்றுகூடி கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த போராட்டத்தை 150 இற்கும் மேற்பட்ட தோட்ட தொழிலாளர்கள் பதாகைகளை தாங்கியும் மற்றும் கோஷங்களை எழுப்பியும் முன்னெடுத்துள்ளனர்.


இதேவேளை கட்டட சரிவு சம்பவம் இடம்பெற்று மூன்று நாட்கள் கடந்துள்ள நிலையில் இளைஞனை மீட்பதில் அதிகாரிகள் கவனக்குறைவுடன் செயற்படுகின்றனர்.

மேலும், மீட்டு தருவதாக கூறுகின்றார்களே தவிர அதற்கான ஏற்பாடுகளை இன்னும் செய்யவில்லை என புகார் தெரிவித்து இந்த போராட்டத்தை மேற்கொண்டுள்ளனர்.

அதேவேளை, கட்டட சரிவு அனர்த்தத்தில் சிக்குண்டதாக கூறப்படும் இளைஞன் உயிரோடு இருக்க வேண்டும் என கிறேக்கிலி தோட்ட காளியம்மன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகளும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# படையினரின் தியாகத்தை பயனற்றதாக்கும் அரச தரப்பு

## மகிந்த கடும் விசனம்



(கொழும்பு)

பயங்கரவாதத்தை முடிவுக்கு கொண்டு வந்த யுத்தத்தை பயனற்றதாக்கும் செயற்பாட்டினையே ஆளும் அரசாங்கம் மேற்கொள்ளும் சகல செயற்பாடுகளும் வெளிக்காட்டுவதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பிலியந்தலை பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார்.

பயங்கரவாதத்தின் கோரப்பிடியில் இருந்த நாட்டை விடுவிக்க பல தியாகங்கள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும் தற்போதைய அரசாங்கம் அதன் மதிப்பை இழக்கச் செய்யும் செயற்பாட்டினையே மேற்கொண்டு வருவதாகவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (இ-7)

# களவாடப்பட்ட அமெரிக்க இராணுவ வாகனங்கள் இலங்கைக்கு விற்பனை

களவாடப்பட்ட அமெரிக்க இராணுவ வாகனங்கள் இலங்கைக்கு விற்பனை செய்ய முயற்சிக்கப்பட்டுள்ளது. அமெரிக்கப் படைவீரர் ஒருவரும் ஆறு தென்கொரியப் பிரஜைகளும்கூட்டாக இணைந்து இவ்வாறு இராணுவ வாகனங்களை விற்பனை செய்ய முயற்சித்துள்ளனர்.

தென்கொரியாவில் நிலைகொண்டுள்ள அமெரிக்கப் படையினரின் பயன்பாட்டுக்கான ஹம்வீஸ் (Humvees) ரக இராணுவ வாகனங்களே இவ்வாறு விற்பனை செய்ய முயற்சிகப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு ஜூன் மற்றும் செப்டெம்பர் மாதங்களில் குறித்த ரக வாகனங்கள் இராணுவ முகாமிலிருந்து களவாடப்பட்டுள்ளன. இந்த வாகனங்களில் சிலவற்றை இலங்கைக்கு விற்பனை செய்ய முயற்சிக்கப்பட்டுள்ளமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. இந்த சம்பவம் தொடர்பில் தொடர்ந்தும் விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

# ரெம்சன் வைரஸால் இலங்கைக்கும் ஆபத்து

உலகின் பல நாடுகளுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ள ரெம்சன் (Remson) வைரஸ் இலங்கைக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் அச்சுறுத்தல் தொடர்ந்தும் காணப்படுகின்றது.

கணனி அவசர நடவடிக்கை பிரிவு இதனை தெரிவித்துள்ளது.

99 நாடுகளின் கணனி வலையமைப்பில் தாக்கம் செலுத்தியுள்ள இணைய மென்பொருள் தாக்குதலால் இலங்கையின் கணனி வலைய்மைப்பில் இதுவரை பாதிப்பு ஏற்படவில்லை.

எனினும் அந்த வைரஸ் இலங்கைக்கும் தாக்கத்தை ஏற்படுத்தும் அச்சுறுத்தல் தொடர்ந்தும் காணப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறிருப்பினும், இந்த இணைய மென்பொருள் தாக்குதல் எச்சரிக்கை காரணமாக, மின்னஞ்சல் தகவல்களை திறந்து பார்வையிடும் போது அவதானமாக இருக்குமாறு கணனி அவசர நடவடிக்கை பிரிவு ஆலோசனை வழங்கியுள்ளது. (இ-7)

# அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய அமைப்பாளர் உள்ளிட்ட ஐவருக்கு பிடியாணை

(கொழும்பு)

அனைத்துப் பல்கலைக்கழக மாண்வர்கள் ஒன்றியத்தின் அமைப்பாளர் உள்ளிட்ட ஐவருக்கு, கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்ற நீதிபதி லால் ரணசிங்க பண்டார, பிடியாணை பிறப்பித்துள்ளார்.

இந்த மாணவர்களுக்குள் பிக்கு ஒருவரும் உள்ளடங்குகின்றார்.

கடந்த 2015ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கு முன்னால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்தின் போது, பொது மக்களுக்கு தொல்லை கொடுத்தார்கள் என்று, சினமன் கிரான் பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது:

குறித்த வழக்குடன் தொடர்புடைய வழக்கு, நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது, அமைப்பாளரும் நான்கு மாணவர்களும், நீதிமன்றத்தில் ஆஜராகி இருக்கவில்லை.

இதையடுத்து, ஐவருக்கும் பிடியாணை பிறப்பித்த நீதவான், வழக்கை ஓகஸ்ட் மாதம் 25ஆம் திகதி வரை ஒத்திவைத்து தீர்ப்பளித்தார். (இ-7)

# மாத்தளை மாவட்டத்தில் மட்டும் 1292 சிறுநீரக நோயாளர்கள்

மாத்தளை மாவட்டத்தில் ஆறு பிரதேச செயலகப் பிரிவுகளில் கடந்த மார்ச் 31 வரையான காலப்பகுதியில் 1292 பேர் சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாக சுகாதார சேவை அத்தியட்சகர் டி.எம். விஜேகோன் தெரிவித்தார்.

இதில் வில்கமுவ பிரதேச செயலகப் பிரிவில் மாத்திரம் 20 மரணங்கள் சம்பவித்துள்ளதாக அறியப்படுகின்றது.


இவர்களில் லக்கல பிரதேச செயலாளர் பிரிவில் 187 பேரும் கலேவல செயலாளர் பிரிவில் 130 பேரும் நாவுல செயலாளர் பிரிவில் 117 பேரும் தம்புள்ளை செயலாளர் பிரிவில் 73 பேரும் மீதமுள்ளோர் வில்கமுவ பிரதேச செயலாளர் பிரிவைச் சேர்ந்தவர்கள் எனவும் இப்பகுதி குடியிருப்பாளர்களிடம் மேற்கொண்ட இரத்தப் பரிசோதனையின் போது கண்டறியப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

சுத்தமான குடிநீரைப் பெற்றுக் கொள்ள முடியாமையே மேற்படி நோய்த் தாக்கத்திற்கு காரணம் எனவும் சுகாதார அத்தியட்சகர் சுட்டிக்காட்டினார். (இ-7)

# அடுத்தவாரம் அமைச்சரவை மாற்றம்

# ஐ.தே.க. அமைச்சை சு.க. பறிக்க முடியாது

## அமைச்சர் நவீன் எதிர்ப்பு



அமைச்சரவை அடுத்த வாரம் நிச்சயமாக மாற்றம் அடையும். அமைச்சரவையை மாற்றம் செய்வதில் எமக்கு ஆட்சேபனை இல்லை. எனினும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு தற்போது உரித்தாகியுள்ள அமைச்சுப் பதவிகளை சுதந்திரக் கட்சியினர் பறித்தெடுப்பார்களாயின் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினரும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சருமான நவீன் திசாநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை நிதி அமைச்சராக செயற்படுவதாயின் பூரண சுதந்திரம் வழங்க வேண்டும். எனக்கு நிதி அமைச்சு கிடைக்கபெறாது. நான் பதவி மோகம் கொண்டவன் அல்ல. தற்போது சிறந்த நிதி அமைச்சர் உள்ளார். அத்துடன் எந்த அமைச்சு மாற்றம் காணும் என்பது தொடர்பில் ஜனாதிபதியும் பிரதமருமே அறிவர். தற்போதைக்கு வெளியாகியுள்ள தகவல் முற்றிலும் தவறாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறி கொத்தவில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சரவை மாற்றம் குறித்து அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அமைச்சரவை மாற்றம் இடம்பெறுவது நிச்சயமாகும். அடுத்த வாரமளவில் நிச்சயமாக அமைச்சரவை மாறும். அமைச்சரவை மாற்றம் குறித்து எமக்கு எதுவும் தெரியாது. எந்த அமைச்சு வேண்டுமானாலும் மாற்றம் அடையலாம். அது ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் மாத்திரமே தெரியும். இதற்கு முன்னரும் அமைச்சரவை மாற்றங்கள் இடம்பெற்றன. 1990 ஆம் ஆண்டு கூட அமைச்சரவை மாறியது. அதன் போது ரணசிங்க பிரேமதாச எனது தந்தையை அமைச்சு பதவியில் இருந்து நீக்கினார்.

அமைச்சரவை மாற்றம் நட்புறவின் பிரகாரமே முன்னெடுக்கப்படும். எனவே ஜனாதிபதியும் பிரதமரும் மிகவும் நட்புறவுடன் அநீதி ஏற்படாமல் முன்னெடுப்பர். தற்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு எத்தனை அமைச்சு பதவிகள் உள்ளன. சுதந்திர கட்சிக்கு எத்தனை அமைச்சு பதவிகள் உள்ளன என்பதனை நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும்.

எனவே அமைச்சரவை மாற்றத்தின் போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு தற்போதுள்ள அமைச்சு பதவிகளில் மாற்றம் ஏற்படக்கூடாது. அதே போன்று சுதந்திரக் கட்சிக்கு தற்போது ஒதுக்கப்பட்டுள்ள அமைச்சு பதவிகளில் மாற்றம் ஏற்படக் கூடாது. ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சு பதவிகளை சுதந்திரக் கட்சி பறிக்க கூடாது. அதே போன்று சுதந்திரக் கட்சியின் அமைச்சுப் பதவிகளை ஐக்கிய தேசியக் கட்சி பறிக்க கூடாது. அமைச்சரவை மாற்றத்தின் போது ஒவ்வொரு கட்சியும் தன்னுடைய கட்சியை பலப்படுத்துவதிலேயே கண்ணும் கருத்துமாக இருக்கும்.

ஆகவே அமைச்சரவை மாற்றம் நீதியான முறையில் நடக்க வேண்டும். கட்சியின் கொள்கைக்கு மாறாக எம்மால் செயற்பட முடியாது என்றார்.

இதன்போது ஊடகவியலாளர் ஒருவர் கேள்வி எழுப்பும் போது,

கேள்வி:- உங்களுக்கு நிதி அமைச்சு கிடைக்க போவதாக தகவல்கள் கூறுகின்றன. அது உண்மையா?

பதில்:-நிதி அமைச்சு எனக்கா? இல்லை. நான் பதவி மோகம் பிடித்தவன் அல்ல. நிதி அமைச்சு என்பது சாதாரண விடயமல்ல. தற்போதைய் நெருக்கடியில் நிதி அமைச்சினை பெறாமல் இருப்பது சிறந்தது. அத்துடன் நிதி அமைச்சினை எனக்கு தந்தாலும் அதனை செயற்படுத்துவதற்கு பூரண சுதந்திரம் கிடைக்க வேண்டும். முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவின் ஆட்சியின் போது நிதி அமைச்சராக செயற்பட்ட சிறினால் டி மேல் சுதந்திரமாக செயற்பட்டார். எனினும் பிற்பட்ட காலப்பகுதியில் நிலைமை மாறியது. மேலும் முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் நிதி அமைச்சை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அது தவறாகும். எனினும் தற்போது ஜனாதிபதியும் பிரதமரும் அந்த நிலைமையை மாற்றி திறமையான நிதி அமைச்சர் ஒருவரை தெரிவு செய்துள்ளனர். ரவி கருணாநாயக்க அமைச்சு பதவியை பொறுப்பேற்கும் போது பல நெருக்கடிகள் இருந்தன. எனினும் தற்போது சாதகமான நிலைமைக்கு நாட்டின் பொருளாதாரத்தை மாற்றியுள்ளார்.

கேள்வி: - நிதி அமைச்சருக்கும் உங்களுக்கும் முரண்பாடு காணப்பட்டதே?

பதில்:-எமக்கு பிரச்சினை இருந்தது. கொள்கை ரீதியாக நாம் பிளவுப்பட்டோம். எனினும் அதனை நாம் அமைச்சரவைக்குள்ளே தீர்த்துக் கொண்டோம். அமைச்சரவையின் கூட்டு பொறுப்புக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் நாம் செயற்படவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

# இலங்கையரை நாடு கடத்திய இத்தாலி

(ரோமில்)

இத்தாலி தலைநகர் ரோமில் சட்டவிரோதமான முறையில் வசித்த இலங்கையர் ஒருவர் நாடு கடத்தப்பட்டுள்ளார். காலாவதியான குடியிருப்பு விசாவை வைத்திருந்த நபரே இவ்வாறு நாடு கடத்தப்பட்டுள்ளார் என இத்தாலிய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இத்தாலியில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது இலங்கையர் கைது செய்யப் பட்டுள்ளார். அவரது விசா காலாவதியானதை கண்டறிந்த பின்னர் அவர் இலங்கைக்கு நாடு கடத்தப்பட்டுள்ளார்.

ஏற்கனவே நாட்டை விட்டு வெளியேறும்படி இலங்கையருக்கு கூறப்பட்டிருந்தபோதிலும் அவர் அதனை செய்ய தவறிவிட்டார் என விசாரணைகளில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக குறித்த ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (இ-7)

# வெளிவிவகார அமைச்சு மங்களவிடமிருந்து பறிமுதல்



(கொழும்பு)

அமைச்சரவை நாளை திங்கட்கிழமை மாற்றியமைக்கப்படவுள்ளதாகவும், வெளிவிவகார அமைச்சர் பதவியில் இருந்து மங்கள சமரவீர நீக்கப்படவுள்ளதாகவும் கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 2015 ஓகஸ்ட் மாதம் பதவியேற்ற இலங்கையின் கூட்டு அரசாங்கத்தின் அமைச்சரவை முதல் முறையாக மாற்றியமைக்கப்படவுள்ளது.

அமைச்சரவை மாற்றம் பற்றிய செய்திகள் பல மாதங்களாகவே வெளிவந்து கொண்டிருந்தாலும், இரண்டு பிரதான கட்சிகளுக்கும் இடையில் இந்த விடயத்தில் இணக்கப்பாட்டை எட்டுவதில் பிரச்சினைகள் காணப்பட்டு வந்தன.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட பேச்சுக்களை அடுத்து இந்த இழுபறிக்கு முடிவு காணப்பட்டுள்ளது. இதையடுத்து நாளை திங்கட்கிழமை அமைச்சரவை மாற்றியமைக்கப்படவுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர அந்தப் பதவியில் இருந்து நீக்கப்பட்டு, நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார்.

நிதியமைச்சராகப் பதவி வகிக்கும் ரவி கருணாநாயக்க வெளிவிவகார அமைச்சராக நியமிக்கப்படவுள்ளார்.

பொது நிர்வாக அமைச்சராக கயந்த கருணா திலகவும், காணி அமைச்சராக மத்தும பண்டாரவும் நியமிக்கப்படவுள்ளதாகவும் கொழும்பு ஆங்கில நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மருதனார் மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 150 | 80 | 100 | 120 | 120 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 85 | 120 | 120 | 120 | 110 |
| பச்சைமிளகாய் | 240 | 300 | 150 | 160 | 120 | 200 | 140 |
| தக்காளி | 100 | 100 | 70 | 80 | 120 | 120 | 120 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 70 | 80 | 80 | 60 |
| கோவா | 180 | 200 | 120 | 150 | 160 | 200 | 160 |
| கரட் | 200 | 400 | 150 | 300-320 | 220 | 320 | 200 |
| பூசணி | 60 | 60 | 40 | 60 | 80 | 80 | 60 |
| புடோல் | 80 | 120 | 50 | 80 | 60 | 80 | 100 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 50 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 240 | 280-300 | 180 | 220 | 280 | 300 | 200 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 | 95 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 200 | 200 | 140 | 180 | 200 | 160 | 180 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 80 | 80 | 100 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | — | 100 | 100 | 120 | 100 |
| பயற்றங்காய் | 140 | 100 | 120 | 120 | 120 | 120 | 140 |
| லீக்ஸ் | 80 | 100 | 80 | 100 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 130 | 100 | 100 | 120 | 120 | 160 | 140 |
| கறிமிளகாய் | 160 | 200 | 100 | 140 | 160 | 200 | 140 |
| முருங்கைக்காய் | 200 | 100 | 110 | 120 | 80 | 120 | 100 |
| போஞ்சி | 150 | 250 | 140 | 200 | 180 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 120 | 60 | 60 | 80 | — | 120 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 20 | 150 | 30 | 30 | 40 | 30 |
| தேசிக்காய் | 60 | 60 | 40 | 80 | 60 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 50 | 70 | 70 | 65 | 40-60 | 70 |
| இராசவள்ளி | 200 | 300 | — | 200 | 200 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 150 | 150 | 200 | 200 | 280 | — |
| முள்ளங்கி | 80 | 100 | 140 | 80 | 80 | 120 | 100 |
| பொன்னாங்காணி | 30 | 60 | 10 | 30 | 30 | 40 | 20 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | — | 60 | — | 100 | — | — | — |

எதிர்காலத்தைப் பற்றி கவலைப்படாதவனுக்கு நிகழ்கால வாழ்க்கை இனிக்காது.

~ ஓர் அறிஞர்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அனைத்து சிங்கள மக்களுக்கும் நிலைமையை புரிய வையுங்கள்

இலங்கையில் நிரந்தர சமாதானம் ஏற்பட வேண்டுமாயின் அது மக்கள் மத்தியில் மாற்றம் ஏற்படுவதன் மூலமாகவே சாத்தியப்பட முடியும்.

பொதுவில் பேரினவாத சக்திகள் தமிழ் மக்களுக்கு எதிரான பிரசாரங்களைத் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்கின்றன.

கூடவே சிங்கள ஊடகங்களும் இதற்குத் துணை போகின்றன. இதனால் உண்மைகள் மறைக்கப்பட்டு தமிழ் மக்கள் சிங்களவர்களுக்கு எதிரானவர்கள் என்ற பிரசாரமே தென் பகுதியில் மேற்கொள்ளப்படுகின்றது.

இதனால் தமிழ் மக்கள் தொடர்பான சிங்கள மக்களின் நிலைப்பாடு எதிர்மறையாக அமைந்து போகிறது.

இவ்வாறு தமிழ் மக்களை சிங்களவர்களின் எதிரிகளாகக் காட்டப்படுகின்ற மிக மோசமான பிரசாரங்கள் முறியடிக்கப்படுவது மிகவும் அவசியமாகும்.

இந்தப் பிரசாரங்களை முறியடிப்பதாயின் தமிழ் மக்களின் பிரச்சினைகளை உணர்ந்து கொண்ட சிங்கள மக்களின் ஒத்துழைப்பை பெற்றாக வேண்டும்.

மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் என்பதைக் கூட இந்த நாட்டுக்கு எதிரான ஒரு நிகழ்வாக பேரினவாதிகள் தென்பகுதியில் காட்டி வருகின்றனர்.

வன்னி யுத்தத்தில் தாயை, தந்தையை, பிள்ளைகளை, கணவனை, மனைவியை, சொந்தங்களை இழந்தவர்கள் யுத்தம் முடிந்ததாக அறிவிக்கப்பட்ட மே 18இல் தங்கள் உறவுகளை நினைவுகூருகின்றனர்.

வன்னிக் கொடும் போரில் உயிரிழந்த தங்கள் உறவுகளை நினைவுகூருவது கூட தமக்கு எதிரான செயல் என்று சிங்கள் மக்கள் நினைக்கும் அளவில் நிலைமை உள்ளதெனில்,

புரிந்துணர்வு – நிலைத்த சமாதானம் என்பன எப்போது சாத்தியமாவது என்பது கேள்விக்குரியது.

வவுனியாவில் உள்ள பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த ஒருவருக்குச் சொந்தமான தனியார் நிறுவனமொன்றில் பணி புரியும் தமிழ் இளைஞன் ஒருவன் வன்னிப் போரில் உயிரிழந்த தன் தாயின் நினைவாக மே 18 இல் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தியுள்ளான். இவரோடு அவரது சக நண்பர்கள் ஏழு பேர் சேர்ந்து கொண்டனர்.

வன்னிக் கொடும் போரில் உயிரிழந்த தன் தாயின் உருவப்படத்தை வைத்து தீபம் ஏற்றி நினைந்துருகிய சம்பவத்தை அறிந்த அந்தத் தனியார் நிறுவனம், நினைவேந்தல் செய்த எட்டுப் பேரையும் பணி நீக்கம் செய்துள்ளது.

வன்னிப் போரில் உயிரிழந்த தன் தாய்க்கு அஞ்சலி செலுத்துவது தவறானது என அந்த நிறுவனம் கருதுகிறதா? என்பதுதான் நம்மிடம் எழக்கூடிய கேள்வி.

பெற்ற தாயை நினைப்பதற்குக்கூட இந்த நாட்டில் தமிழர்களுக்கு உரிமை இல்லை என்றால் நீங்கள் மட்டும் தமிழர் தாயகத்தில் இறந்து போன படையினருக்கு நினைவுத் தூபி அமைப்பதும் அந்த நினைவுத் தூபிக்கு சிங்கள மக்கள் அஞ்சலி செலுத்துவதும் எந்த வகையில் நியாயமாகும்?

தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளை மீறிக்கொண்டு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவோம் எனக் கூறுவதை விடுத்து தமிழ் மக்களின் மனநிலையைப் புரிந்து கொண்டு செயற்படுவதே முதற்பணியாக இருக்க வேண்டும்.

# மகிந்த அணியை மைத்திரி அணியில் இணைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பம்

கூட்டு எதிர்க்கட்சி தரப்பில் இருந்து வடமத்திய மாகாண முதலமைச்சர் பேஷல ஜயரத்னவுக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தில் கையெழுத்திட்ட சரத் இலங்க சிங்கள, சுசில் குணரதன் உட்பட மூன்று பேர் மைத்திரி தரப்பின் நிலைப்பாட்டுக்கு இணங்கியுள்ளனர்.

இவர்கள் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மைத்திரி நிலைப்பாட்டுக்கு இணங்கியதன் ஊடாக சுதந்திரக் கட்சியை ஒன்றிணைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

கூட்டு எதிர்க்கட்சியில் அங்கம் வகிக்கும் வடமத்திய மாகாண சபையின் உறுப்பினர்கள் மாகாண முதலமைச்சருக்கு எதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தில் கையெழுத்திட்டு, அவரை பதவியில் இருந்து நீக்க முயற்சித்தனர்.

இதனையடுத்து கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள், இந்த மோதலை முடிவுக்கு கொண்டு வந்து அவர்களை மீண்டும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மைத்திரி அணியில் இணைத்துள்ளனர்.

இந்த நடவடிக்கைகளை ஏனைய மாகாணங்களிலும் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் மேற்கொள்ளும் தூண்டி விடும் நடவடிக்கை தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்ளுக்கு தெளிவுபடுத்தும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்களுடன் இப்படியான பேச்சுவார்த்தைகளை நடத்தி கட்சியை வலுப்படுத்தி, தாமரை மொட்டு சின்னத்தில் அரசியலுக்கு வர முயற்சிக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆதரவு அணியின் ஊக்கத்தை சிதைக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர், எந்த வகையிலும் கட்சி இரண்டாக பிளவுபட இடமளிக்க போவதில்லை.

சதித்திட்டத்தின் மூலம் வடமத்திய மாகாண முதலமைச்சரை பதவியில் இருந்து நீக்க கூட்டு எதிர்க்கட்சி மேற்கொண்ட முயற்சியை வெற்றிகரமாக தோற்கடித்தது, இதன் ஆரம்ப கட்ட நடவடிக்கை எனவும் தெரிவித்தார். (இ-7)

## பொதுச்சபைக் கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். நீர்வேலி அருள் மிகு செல்லக்கதிர்காம ஆலய அறங்காவலர் சபையின் பொதுச்சபைக்கூட்டம் இன்று 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு ஆலய மண்டபத்தில் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் இ.தயாகரன் தலைமையில் இடம் பெறும்.

ஆலயத்தின் அனைத்து அடியார்களையும் உபயகாரர்களையும் கலந்து சிறப்பிக்குமாறு அறங்காவலர் சபைச் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார். (இ-7)

## சுழல் காற்று; வீடு சேதம்

(பரந்தன்)

கிளிநொச்சி விஸ்வமடு நாதன்திட்டம்பகுதியில்நேற்று மதியம் வீசிய சுழல் காற்றினால் அப்பகுதியில் உள்ள தற்காலிக வீடு ஒன்றின் கூரை சேதமடைந்துள்ளது.

வீட்டின் மீது போடப்பட்டிருந்த தகரம் காற்றினால் பிடுங்கப்பட்டுச் செல்லும் போது குறித்த வீட்டில் தாயும் இரண்டு பிள்ளைகளும் இருந்துள்ளனர்.

இருப்பினும் தெய்வாதீனமாக யாருக்கும் காயங்கள் எவையும் ஏற்படவில்லை.

நாதன் திட்டம் கிராமத்தைப் பொறுத்த வரையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டது தொடக்கம் மக்கள் தற்போது வரை தற்காலிக வீடுகளிலேயே வசித்து வருகின்றனர்.

சென்ற மாதம் அளவிலேயே தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான நிரந்தர வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டு அதற்கான கட்டிட பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-312)

## தமிழ் இணையத்தளத்தை ஆரம்பித்த இராணுவம்

(கொழும்பு)

ஆங்கில மற்றும் சிங்கள இணையத்தளங்களுக்கு இணையாக இந்த தமிழ் இணையத்தளம் ஒன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக இராணுவ ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

உள்ளூர் மற்றும் உலகளாவிய ரீதியில் உள்ள தமிழ வாசிப்பாளர்களின் நலன் கருதி இது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக இராணுவம் தெரிவித்துள்ளது. (இ-7)

## நகரசபை முன்னாள் தலைவர்மீது சட்டத்தரணிகள் சிலர் தாக்குதல்

ஹற்றன்- டிக்கோயா நகரசபையின் முன்னாள் தலைவர் அழகமுத்து நத்தகுமார் மீது, ஹற்றன் நீதவான் நீதிமன்றில் கடமையாற்றும் சட்டத்தரணிகள் சிலர் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன், தாக்குதலுக்கு உள்ளான அவர், டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

ஹற்றன் நகரில் உள்ள விழா மண்டபமொன்றில் நேற்று முன்தினம் இரவு சட்டத்தரணிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வில் முன்னாள் தலைவர் கலந்து கொண்டுள்ளார்.

இதன்போது, சட்டத்தரணிகளுடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் முற்றியதில் தன்மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக முன்னாள் தலைவர் பொலிஸில் முறையிட்டுள்ளார். (இ-7)

## அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**திருமணத்திற்கான விதிமுறைகள் என்ன?**

பிராமணன் வேதங்களைக் கற்றுத் தேர்ந்து பிரமச்சரியத்தைக் கடைப்பிடித்து குரு தட்சணை கொடுத்து, குருவைத் திருப்திப் படுத்தி பிரமச்சரிய வைதீகக் கர்மங்களைக் கற்றுத் தேர்ந்து ஒரே சாதியைச் சேர்ந்த, மங்களகரமான, நல்லொழுக்கமுள்ள, சுந்தரியான கன்னியை திருமணம் முடிக்கலாம்.





பிராமணனும் சத்திரியனும் வைசியனும் ஒரே சாதியைச் சேர்ந்த, யோக்கியமான பெண்ணைத் திருமணம் செய்யலாம். அதன்மூலம் பிறக்கும் வாரிசுகள் மட்டுமே புத்திரர்களாகக் கருதப்படுவார்கள். வேறு சாதிப் பெண்களைத் திருமணம் முடித்தால் குலப் பெருமையை இழந்தவனாவான் என்றும் அந்தப் பெண் ஹோமம் போன்ற பூஜை வேளைகளில் கணவனுடன் இருக்க அருகதையில்லை என்றும் கூறப்பட்டுள்ளது.

அவள் மூலம் உண்டாகும் புத்திரன் முன்னோர்களுக்காகச் செய்யப்படும் பலி கர்மங்களில் பங்கேற்கத் தகுதியில்லாதவனாவான். அந்தப் பிராமணன் பாவியாகிப் போவான்.

எந்தக் குலத்தில் பிறந்தவர்களும் அந்தந்தக் குலத்தில் பிறந்த பெண்களையே திருமணம் செய்ய வேண்டும் என்பது விதியாகும். ஆண்கள் யோக்கியவதியான, நல்லொழுக்கமுள்ள பெண்களைத் திருமணம் செய்யவேண்டும்.

பெண்கள் யோக்கியவான்களை மட்டுமே வாழ்க்கைத் துணையாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

(தொடரும்)




ஆதிசேஷா வாயுதேவனின் வலிமை ஆதிசேஷனை அசைக்க இயலாமல் போகலாம். ஆனால் அனைத்து உலகங்களும் அவன் கோபத்திற்கு ஆளாகி அழியத்தான் வேண்டுமா? இது தருமமா? தகுமா?

அவர்கள் கேள்வியில் இருந்த நியாயம்ஆதிசேஷன்மனதை அசைத்தது. ஆனந்த பர்வதத்தின்மேல்இருந்த தன் பிடியைத் தளர்த்தினான்.

இதுதான் தருணம் என்று வாயுதேவன் ஆனந்த பர்வதத்தை அடியோடு பெயர்த்து வீசினான். அதுபூமியில் வந்து வீழ்ந்தது.

அவனின்றி ஓர் அணுவும் அசையாது. தான் புலம்பெயர்ந்ததும் அந்த ஆண்டவன் விருப்பப்படியே என்று ஆனந்த பர்வதமும் அங்கே காத்திருந்தது. (தொடரும்)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ அழுத்த மின் விநி யோக மார்க்கங்களின் கட்டமைப்பு மறறும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை திங்கட்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5மணி வரை யாழ். பிரதேசத்தில தவசிக்குளம் பிரதேசத்திலும் கிளிநொச்சி பிரதேசத்தில வேரவில, கிராஞ்சி ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும் (இ-9)

## நீர் வெறுப்பு நோயிலிருந்து எம்மைப் பாதுகாப்போம்!

தடிகளையோ கற்களையோ நாய் மீது எறியக்கூடாது. பயம் காரணமாக நாய் கடிக்க முற்படலாம்.


கடியுண்டால் உரிய முதலுதவியையும் உரிய சிகிச்சையையும் பெற்றுக் கொள்வோம்

தகவல்: சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை, யாழ். மாநகரசபை.

# ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ண கிரிக்கெட் இறுதிப் போட்டி இன்று

## சென்றலைட்ஸ் - ஹாட்லியைற்ஸ் பலப்பரீட்சை





ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்திற்கான கிரிக்கெட் இறுதிப் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமையன்று யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் சென்றலைட்ஸ் அணியை எதிர்த்து ஹாட்லியைற்ஸ் அணி மோதவுள்ளது. மேற்கூறப்பட்ட வெற்றிக் கிண்ணத்திற்கான சுற்றுப் போட்டி யாழ். நகரில் முதல் முதலாக கடினப்பந்து சுற்றுப்போட்டி என்பது குறிப்பிடத்தக்கது. இச் சுற்றுப் போட்டி முதன் முதலாக 1983 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி ஹெற்றிக் கிண்ணத்தை முதன் முதலில் (1983)சென்றலைட்ஸ் அணியினர் கைப்பற்றியமை குறிப்பிடத்தக்கது. (கு)

## றிபேக்ஸ்ராரை வீழ்த்தியது அரியாலை சென்றல் அணி



சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III சுற்றுப்போட்டியில் இருந்து இரு அணிகளைத் தெரிவு செய்வதற்கான தகுதி காண் போட்டிகள், வரிசையில் அரியாலை சென்றல் அணி றிபேக்ஸ்ரார் அணியை 23 ஓட்டங்களாக வெற்றி பெற்றுள்ளது. முதலில் துடுப் பெடுத்தாடிய றிபேக்ஸ்ரார் அணி 33 ஓவர்கள் சகல இலக்குகளையும் இழந்து 121 ஓட்டங்களை பெற்றது. தர்ஸன் - 15, தசிந்தன் -35 ,பார்த்தீபன் -22 , அகிலன் ஆட்டமிழக்காது -13 ஓட்டங் களை பெற்றனர். ஏகநாதன் -02 ,ஜனகன் -03,லினோர் தன் -2, சதீஸ்-2 , கவின்தன் -1 இலக்கினை கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத் தாடிய அரியாலை சென்றல் அணி 21.5 ஓவர்களில் 5 இலக்குகளை இழந்து 95 ஓட் டங்களை பெற்ற நிலையில் மழை குறுக்கிட்ட படியால் பர போலா விதிகளுக்கமைவாக அரியாலை சென்றல் அணி 23 ஓட்டங்களால் வெற்றி பெற் றது. நிரோஸன் -20 , ஜெரோஸன் -32 ஆகிய ஓட் டங்களை பெற்றனர். சுஜின் தன் -2, தசின்தன் -1, பிர வீன்-1,மாக்சிங்-1 ஆகி யோர் இலக்கினை கைப்பற்றினர். (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## சிறிலங்கா கிரிக்கெட் பிரிவு III ஓல்ட்கோல்ஸ் அணி வெற்றி



சிறிலங்கா கிரிகெட் சுற் றுப் போட்டியில் இருந்து இரு அணிகளை தெரிவு செய்வ தற்கான தகுதிகாண் போட்டி வரிசையில் ஓல்ட்கோல்ஸ் அணி, ஹாட்லியைற்ஸ் அணியை 3 இலக்குகளால் வெற்றிபெற்றது. முதலில் துடுப் பெடுத்தாடிய ஹாட்லியைற்ஸ் அணி 43.1 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 186 ஓட்டங்களை பெற்றது.

மணிமாறன் -39, நிதர்சனன் -25, தீபன் -15, அஜன்தன் -23,நிஸாந்தன் -35 ஓட்டங்களைப் பெற்ற னர். சிறிகுகன் -2, விமலேந் திரா -1, திலீபன் -3, பிரியலக் ஸன்-2, நிரோஸன் -2 ஆகி யோர் இலக்குகளை வீழ்த்தி னர். பதிலுக்குத் துடுப் பெடுத் தாடிய ஓல்ட்கோல்ஸ் 29 ஓவர் களில் 7 இலக்குகளை இழந்து 188 ஓட்டங்களை பெற்றது.

திலீபன் -40, நிர்மலேந் திரா -18, நிரோஸன் -51, பிரியலக்ஸன்-14, குகன் - 25 ஆகியோர் ஓட்டங் களைப் பெற்றனர். நிஸாந் தன்-1, செயோன்-2, அஜந் தன்-4 இலக்குகளை கைப் பற்றினர். (கு)



## கலைமதி வி. கழகம் நடத்தும் மாவட்ட ரீதியிலான உதைபந்தாட்டம்

### அடுத்த சுற்றில் றேஞ்சர்ஸ்

நவிண்டில் கலைமதி வி. கழகத்தால் நடத்தப்படும் யாழ். மாவட்ட ரீதியிலான 11நபர் கொண்ட உதைப்பந்தாட்ட தொடரில் (18.05.2017) அன்று இமையாணன் மத்தி வி.கழக மைதானத்தில் இடம் பெற்றது.

முதலாவது போட்டியில் நவசக்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொற்றா வத்தை றேஞ்சஸ் விளை யாட்டுக் கழகம் மோதிக் கொண்டது.

ஆட்ட நேர முடிவின் போது இரு அணிகளும் எவ்வித கோல்களும் பெறப்படாது ஆட்டம் சமநிலையானது. வெற்றியை தீர்மானிப்பதற்காக வழங்கப்பட்ட சமநிலை தவிர்ப்பு உதை மூலம் றேஞ்சர்ஸ் 3:2 என்ற கோல் அடிப்படையில் நவசக்தியை வீழ்த்தி அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது. (க)

## வடக்கு அபிவிருத்தி...

வடக்கின் அபிவிருத்தி தொடர்பாக ஆராய் வதற்காக நேற்று முன்தினம் யாழ்ப்பாணத் துக்குப் பயணம் மேற்கொண்டிருந்த பிரதமர ரணில் விக்கிரமசிங்க நேற்று பருத்தித்துறை துறைமுகத்தை பார்வையிட்டார்.

பருத்தித்துறை துறைமுகத்தை அபிவிரு த்தி செய்வது தொடர்பாக ஆராய்வதற்கு பிர தமர் நேற்று காலை 9 மணியளவில் அங்கு சென்றிருந்தார்.

பிரதமருடன் அமைச்சர் சாகல ரத்நாய க்க, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்தி ரன், மாகாண சபை உறுப்பினர் சுகிர்தன் ஆகியோரும் பருத்தித்துறை துறைமுகத்தை பார்வையிட்டிருந்தனர்.

இதன்போது, துறைமுகத்தை அபிவிருத்தி செய்யும் திட்டங்கள் தொடர்பாக அரச அதி காரிகளுடன் பிரதமர் கலந்துரையாடினார்.

பருத்தித்துறை இறங்குதுறையினை பார்வையிட்டதைத் தொடர்ந்து பிரதமர் உல ங்குவானூர்தி மூலமாக மணற்காடு கிராம த்தை வந்தடைந்து அங்குள்ள சவுக்கம் தோப்பைப் பார்வையிட்டார். தொடர்ந்து மீண்டும் வடமராட்சி கிழக்கு பிரதேச கிரா மங்களை உலங்குவானூர்தி மூலமாக தாழப்பறந்து பார்வையிட்டார், பின்னர் வடமராட்சி கிழக்கு பிரதேசத்தின் இயற்கை யோடு ஒத்த உல்லாசத்துறையினை அபிவி ருத்தி செய்வது தொடர்பாக இயற்கை வனம் பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள சுண் டிக்குளத்தை சூழவுள்ள பகுதிகளை மிகவும் தாழப்பறந்து பார்வையிட்டார்.

அடுத்து கட்டைக்காடு சென் மேரிஸ் கடற் றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினால் குமார் வாடியில்(கட்டைக்காடு) பிரத்தியேகமாக ஒழு ங்கு செய்யப்பட்ட இடத்தில் மதிய விருந்துபசா ரத்தில் கலந்துகொண்டார்.

பிரதமரது வடமராட்சி கிழக்கின் விஜயம் பாரிய அபிவிருத்தியோடு தொடர்புடையது என தெரிவிக்கப்பட்டிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (செ-64)

## கடவுள் கருணை...

'என்று கருணை கூருகின்றாரோ அன் றைக்குதான் தீர்வு. எங்களுடைய தீர்வு என் றைக்கோ ஒரு நாள் கடவுளால் எழுதியிருந் தால் அது அன்றைக்கு கிடைக்கும் இல் லையோ நாங்கள் இப்படியே வீதியில் நிற்க வேண்டிய ஒரு நிலை இருக்கிறது. நாங்கள் தீர்வு தீர்வு என்று நினைத்துக்கொண்டிருக் காமல் யுத்தத்தின் வடுவில் இருந்து வெளியே வரவேண்டும் என இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று கிளிநொச்சி கண்டாவளை பிர தேச செயலக பிரிவில் இடம்பெற்ற நிலமெ ஹெவர ஜனாதிபதி மக்கள் சேவை தேசிய நிகழ்ச்சி திட்டத்தில் கலந்துகொண்டு உரை யாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டு ள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

கடந்த கால நினைவுகளை நினைத்து பார்த்தால் மீண்டும் அதிலிருந்து மீளவே முடியாது என்ற நிலைமையே இருந்தது. கடந்த கால முப்பது வருட யுத்தத்திற்கு முகம் கொடுத்து இன்று வெளியில் வந்திருக்கி ன்றோம். யுத்தத்திற்கு பிறகு அடிப்படை வசதி களை நாங்கள் கட்டாயம் மேற்கொள்ள வேண்டும். அபிவிருத்தியை கட்டாயம் மேற் கொள்ள வேண்டும்.

ஏனைய மாகாணங்களோடு ஒப்பிடுகை யில் எங்களுடைய வடக்கு, கிழக்கு மாகாண ங்கள் யுத்தத்திற்கு முகம் கொடுத்திருக்கிறது. இந்த மாகாணங்களில் உள்ள ஒவ்வொரு குடும்பங்களும் ஏதோவொரு வகையில் யுத் தத்தினால் பாதிப்படைந்தும் உள்ளாகியிருக்கி றார்கள். வடக்கு மாகாணத்தில் முப்பதாயிரம் பேர் அங்கவீனர்களாக உள்ளனர். யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் நல்லாட்சி அரசு அங்கவீனர்களுக்கு பல உதவிகளை வழங்கி வருகிறது.

அமைச்சர் வஜிர அபேயவர்த்தன எங்க ளுடைய விடுதலைப்புலிகளின் காலத்திலும் கூட இங்கு வந்து சென்றிருக்கின்றார். அவர் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளை நன்கு தெரிந்தவர். ஒவ்வொரு நிமிடமும் கதைக்கும் போது எங்களுக்கே உதாரணம் சொல்லிக் கதைக்க கூடியவர். அப்படியான ஒரு அமைச்சர் எங்களுக்கு கிடைத்திருக்கி ன்றார் எனத் தெரிவித்த அமைச்சர் விஜயகலா, எதிர்காலத்தில் நாளைய அரசியல் தலைவர் களை தெரிவு செய்கின்ற போது மக்கள் நிதா னமாக தெரிவு செய்ய வேண்டும். இல்லையெனில் மீண்டும் வீதிக்கு செல்ல வேண்டிய நிலை உருவாகும். எனவே நல்லாட்சி அரசியல் துரோ கிகளுக்கும் இனவாதிகளுக்கும் இடம்கொடு க்க கூடாது என்றும் குறிப்பிட்டார். (செ-312)

## அமைச்சரவை...

யாகியுள்ளன.

கடந்த மாதம் 20ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்ற பத்திரிகை மற்றும் இலத்திரனில் ஊடக பிரதம செய்தியாசிரியர்களுடனான மாநாட்டின் போது விசாக பௌர்ணமி தின த்திற்கு முன்பாக அமைச்சரவையில் மாற் றம் செய்வது தொடர்பாக ஜனாதிபதி சூசக மாக கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

நிதி அமைச்சர் பொறுப்பை வகிக்கும் அமைச்சர் ரவி கருணாநாயக்கவினதும் வெளிவிவகார அமைச்சர் பொறுப்பை வகிக் கும் அமைச்சர் மங்கள சமரவீரவினதும் செயற்பாடுகள் நாட்டை காட்டிக்கொடுப்பதாக அமைந்துள்ளதாகக்கூறி அவர்களது பொறு ப்புக்களை மாற்றவேண்டும் என்ற கருத்துக் கள் நீண்டகாலமாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட் சியின் உள்வட்டாரங்களில் முன்வைக்கப் பட்டிருந்தன.

ஜெனிவாவில் இலங்கை தொடர்பான தீர மானத்திற்கு இணை அனுசரணை வழங்க முன்னின்றமை அதனைத் தொடர்ந்து காணாமற்போனோர் அலுவலகம் அமைப்ப தில் அக்கறை காண்பித்தமை ஆகியன மகி ந்த தரப்பினரை மட்டுமன்றி மைத்திரி தலை மையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின ரது விமர்சனங்களுக்கும் உள்ளாகியிருந் தன.

கடந்த ஒகஸ்ட் மாதம் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட காணாமற்போனோருக் கான சட்டத்தை வர்த்தமானியில் பிரகடனப் படுத்தாது ஜனாதிபதி இழுத்தடித்துவரும் நிலையில் அதற்கு முன்னின்ற அமைச்சர் மங்கள சமரவீரவை அமைச்சுப்பதவியிலி ருந்து மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கூறப்படுகிறது.

தற்போதைய அரசாங்கத்தின் உயர் மட்ட அமைச்சுப் பொறுப்புக்களை வகிப்பவர்களில் நிலைமாற்றுகால நீதிப் பொறிமுறைகளை அமுல்படுத்த வேண்டும் என்பதில் சற்றே னும் அக்கறையாக செயற்படுபவர் என கருத ப்படும் மங்கள சமரவீரவை வெளிவிவகார அமைச்சுப்பொறுப்பில் இருந்து நீக்கிவிட்டு அவருக்கு நிதியமைச்சர் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பொறுப்புக்களை வழங்க நடவடி க்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

இதேவேளை தற்போதைய நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவிற்கு வெளிவிவகார அமைச்சுப் பொறுப்பு வழங்கப்படவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீனாவி ற்கு செல்லும் முன்பாக இந்த அமைச்சரவை மாற்றம் இடம்பெறுவதாக முன்னர் கூறப்பட் டது. பின்னர் பிரதமர் சீனாவில் இருந்து திரு ம்பியதும் அமைச்சரவை மாற்றம் இடம்பெறும எனக்கூறப்பட்டது. சீனாவில் இருந்து நாடு திரும்பிய பிரதமர், அமைச்சரவையில் ஐக் கிய தேசியக்கட்சியினர் வகிக்கும் பொறுப்பு க்களில் எவ்வித மாற்றமும் செய்யக்கூடாது என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவி டமும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்கவிடமும் அழுத்தமாக கூறியதாக தகவல்கள் வெளியாகியிருந்தன.

இந்நிலையிலேயே ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன அவசரமாக நாளை திங் கட்கிழமை விசேட அமைச்சரவைக் கூட்டத்தி ற்கு அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்வரும் சில நாட்களில் பிரதமர் ரணில் விக் கிரமசிங்க அமெரிக்காவிற்கும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவுஸ்திரேலியாவி ற்கும் உத்தியோக பூர்வ விஜயங்களை மேற் கொள்ளவுள்ளமையால் அடுத்துவரும் சில நாட்களில் அமைச்சரவை மாற்றம் தொடர் பான இறுதித்தீர்மானம் எடுக்கப்படும் என அரசியல் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவி க்கின்றன. (செ-11)

## கணவன் குறித்து...

உயிருடன் இருப்பதாகவும் ஆனால் கட த்தப்பட்ட தனது கணவன் தொடர்பில் இது வரை எந்தவொரு தகவலும் இல்லை என மனைவி ஒருவர் கவலை வெளியிட்டுள்ளார்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டுள்ள தமது உறவுகள் தொடர்பில் உரிய பதிலை வழங்குமாறுகோரி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு முன்னால் காணாமல் ஆக் கப்பட்டுள்ளோரின் உறவுகள் முன்னெடுத்து ள்ள தொடர் போராட்டம் நேற்றுடன் 75ஆவது நாளை எட்டி தொடர்ந்து வருகின்றது.

இதில் முல்லைத்தீவு மாவட்டத்தில் காணா மல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் தமது தொடர் கவனயீர்ப்பு போராட்டத்தில் உறுதி யாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில் தனது கணவன் கடத்த ப்பட்டு காணாமல்ஆக்கப்பட்டுள்ள நிலையில் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகவும் தனது கணவனை கடத்திய வர்கள் உயிருடன் உள்ளார்கள் எனவும் மனைவி ஒருவர் கவலை வெளியிட்டார்.

இதேவேளை தனது கணவர் உயிருடன் உள்ளதாக இராணுவத்தினர் தெரிவித்த போதும் இதுவரை விடுவிக்கப்படவில்லை என கணவனை தேடிவரும் மற்றுமொரு வரும் கவலையுடன் குறிப்பிட்டார். (செ-11)

## அரசியல் சாசனம்...

வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கை துறை முகத்துவாரத்தில் நிர்மாணி க்கப்பட்ட பாலம் சம்பூர் வைத்தியசாலை மற் றும் சம்பூர் கலாசார நிலைய திறப்பு விழாக் கள் ஆகியன ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தலைமையில் நேற்று நடைபெற்றன.

இந்த நிகழ்வுகளில் ஜனாதிபதியுடன் கல ந்து கொண்டபோதே எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

மக்களுக்கு சொந்தமான காணியை மக் களுடைய சம்மதம் இல்லாமல் முதலீட்டுச் சபையினால் ஒரு தனியார் நிறுவனத்துக்கு கொடுக்கப்பட்டு அவர்கள் இங்கு ஒரு பாரிய தொழிற்சாலையை அமைப்பதற்கு ஒழுங்கு செய்திருக்கின்றார்கள்.

அந்த நேரத்தில்தான் அவ்விதமான ஒழு ங்குகள் இரத்துச் செய்யப்பட்டு இந்தக் காணி மக்களிற்கு கொடுக்கப்பட்டது. ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு மக்கள் சார்பாக மண்டும் நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். நான் விசேடமாக ஜனாதி பதிக்கு என்னுடைய கவனத்திற்கு இதை முன் வைக்க விரும்புகின்றன.

முல்லைத்தீவு கிராமத்துக்கு நான் சென் றிருந்தேன். கேப்பாப்பிலவு மக்கள் இன்றை க்கும் தங்களுடைய காணியை பெறவதற் காக போராடிக்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி கிராமத்தில் மக்கள் போராடு கின்றார்கள். யாழ்ப்பாணத்திலும் மக்கள் போராடுகின்றார்கள். நான் அரசாங்கத்திடம் மிகவும் விநயமாக கேட்டுக்கொள்ள விரும்பு வது என்னவென்றால், மக்களுடைய காணி களை மக்களுக்கு நீங்கள் திரும்பிக்கொடு க்க வேண்டும்.

காணிகள் கொடுபடவில்லை என்று நாங் கள் கூறவில்லை. காணிகள் கொடுக்கப்பட்டு இருக்கின்றன. ஆனால் மேலதிகமான பல காணிகள் கொடுக்கப்பட வேண்டி இருக்கி ன்றன.

நாங்கள் ஒரு புதிய அரசியல் சாசனத்தை உருவாக்குவதில் தற்போது ஈடுபட்டு இருக்கி ன்றோம். அந்த அரசியல் சாசனம் விரைவில் உருவாக்கப்படவேண்டும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். நாட்டினுடைய எதிர்காலம் அந்தக் கருமம் வெற்றியடைவதில்தான் தங்கி உள்ளது. ஆன படியால் தாமதம் இல்லாமல் நாங்கள் எல்லோரும் ஒத்துழைத்து ஒரு புதிய அரசியல் சாசனத்தை உருவாக்க வேண் டும். இந்த நாட்டில் விரைவில் தேசிய பிரச்சி னைக்கு ஒரு தீர்வை காணக்கூடிய வகை யில் அது ஏற்படுத்த வேண்டும் என்றார் சம் பந்தன். (செ)

## காணாமல் போனவர்...

சம்பூர் கிழக்கு, சம்பூர் மேற்கு, நவரத் தின புரம், கூனித்தீவு, கடற்கரைச்சேனை ஆகிய ஐந்து கிராம அலுவலர் பிரிவுகளிலு ள்ள 4,253 மக்களுக்கு சேவையாற்றுவதற் காக புதிதாக நிர்மாணிக்கப்பட்ட சம்பூர் மாவ ட்ட வைத்தியசாலை நேற்று முற்பகல் ஜனா திபதியினால் மக்களுக்கு உரித்தாக்கப்பட் டது.

56 மில்லியன் ரூபாய் செலவில் அனை த்து வசதிகளுடனும் இந்த நிர்மாணிக்கப் பட்டுள்ள வைத்தியசாலையின் நினைவு படி கத்தை திறந்து வைத்த ஜனாதிபதி கண் காணிப்பு விஜயத்திலும் ஈடுபட்டார்.

வைத்தியசாலையில் முதலாவதாக அனு மதிக்கப்பட்ட நோயாளியை பதிவு செய்த ஜனா திபதி பொதுக் கூட்டத்தில் விசேட உரையாற் றினார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன காணாமற்போனவர்கள் தொடர்பான விடய ங்களை முன்வைத்து, எங்காவது அவர்கள தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக கூறப்படு மாயின் அந்த இடங்களை பரிசீலிப்பதற்கான திட்டத்தை அரசாங்கம் உருவாக்கும், இத ற்கு முன்னர் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு அறிக்கை மற்றும் அதன் விதந்துரைகளை கருத்திலெடுத்து காணாமற்போனோர் தொட ர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்கு விசேட குழு விரைவில் நியமிக்கப்படும்.

2015ஆம் ஆண்டில் நான் யாழில் உள்ள பாடசாலை மாணவ மாணவியருடன் தோன் றும் புகைப்படத்தை இணையத்தளங்களில் வெளியிட்டு தன்னுடன் இருந்த இந்த பிள்ளை காணாமல் போயுள்ளதாக முன்னெடுக்கப்ப டும் பிரசாரம் பிற்போக்குவாதிகளின் அரசி யல் சதியாகும். அவ்வாறு அந்த பிள்ளைகள் காணாமற் போயிருந்தால் அவர்களை தேடு வதற்காக நானும் உயர்ந்தபட்ச ஒத்துழை ப்பை வழங்குவேன்.

கடந்த 18 ஆம் திகதி நான் கிளிநொச்சிக்கு விஜயம் செய்ய இருந்ததாகவும், தன்னை வர விட முடியாதென வடக்கில் எதிர்ப்பு தெரி வித்து பிரசாரம் முன்னெடுக்கப்பட்டதாக செய் திகள் வெளியாகியிருந்தன. அன்றைய தினம் அவ்வாறு விஜயம் மேற்கொள்வதாக இருக்கவில்லை. பெற்ற சுதந்திரம் மற்றும் சமா தானத்தின் பெறுமதியை புரிந்து கொண்டு அனைவரும் செயற்பட வேண்டும். பெற்ற சமாதானத்தை மக்களை தவறாக வழிநட த்தி சீர்குலைக்க முன்னெடுக்கப்படும் பிற் போக்குவாதிகளின் சதிகளை தோற்கடிப்பத ற்கு அனைத்து மக்களும் ஒன்றிணைய வேண்டும்.

அத்துடன் காணாமல் போனோர் தொடர் பான அலுவலகத்தை நிறுவுவதற்காக நாடா ளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட சட்டத்தில் திருத்தங்கள் மேற்கொள்ள வேண்டுமெனக் கூறப்பட்டதன் பின்னர் அதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நானும் பிரதமரும் அமைச்சரவைக்கு ஆலோ சனை வழங்கியிருக்கின்றோம். தெற்கைப் போன்றே வடக்கிலும் அபிவிருத்தியை நான் தாமதப்படுத்தவில்லை. பெற்ற சுதந்திரத்தை பாதுகாத்து தேசிய ஐக்கியம் மற்றும் நல்லி ணக்கத்தை நல்ல நிலைக்கு கொண்டுவர அனைத்து அரசியல் தலைவர்களும் பாடுபட வேண்டும் என ஜனாதிபதி தனது உரையில் குறிப்பிட்டார். (செ-11)

## இலவசக் கல்வியை...

செய்யப்படுமென மக்கள் விடுதலை முன் னணி எச்சரித்துள்ளது.

பத்தரமுல்லையில் அமைந்துள்ள கட்சி யின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் பங்கேற்று கரு த்து வெளியிட்ட கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா, இலவசக் கல்வியை இல்லா தொழிக்கும் செயற்றிட்டத்தின் முதற்படியே சைட்டம் கல்வி நிறுவனம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர்,

சைட்டத்திற்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்களை அரசாங்கம் பொலி ஸாரைக் கொண்டு அடக்கியுள்ளது. மாண வர்களின் குரலுக்கு செவி சாய்க்க வேண்டிய அரசாங்கம் அதனைவிடுத்து அவசியமற்ற நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. மாணவர்கள் பொலிஸாருடனோ அல்லது அர சாங்கத்துடன் மோதலில் ஈடுபட இங்குவர வில்லை.

அரசாங்கம் பொதுமக்களின் பிரச்சினை களுக்கு தீர்வு வழங்குவதைவிடுத்து அவர்க ளின் குரலை அல்லது அவர்களின் நியாய மான கோரிக்கைகளை அடக்கும் நடவடிக் கைகளிலேயே ஈடுபட்டுள்ளது. இலவசக் கல் வியை ஒழித்து வசதிபடைத்தவர்களுக்கு மாத்திரம் கல்வியை மட்டுப்படுத்தும் நடவடி க்கைகளையே அரசாங்கம் முன்னெடுத்து ள்ளது. வெளிநாடுகளில் பணம் செலுத்தி உயர்கல்வியை கற்கும் பெண்கள் பணம் செலுத்த முடியாத நிலையில் தமது உடலை விற்று பணம் சம்பாதிக்கின்றார்கள்.

ஆண்கள் திருடுகிறார்கள். இங்கும் அதே நிலைமையே ஏற்படும். எமது நாட்டு மாண வர்களும் அந்த நிலைக்கு தள்ளப்படுவார் கள். அதன் பின்னர் சைட்டம் வைத்தியர் களை அல்ல குற்றவாளிகளையே உருவாக் கும். அதனாலேயே இலவசக் கல்வியை இல்லாதொழிக்க வேண்டாமென வலியுறு த்துகின்றோம்.

சைட்டத்தை இந்த அரசாங்கம் இல்லா தொழிக்க வேண்டும். இல்லையேல் மக்க ளாட்சி ஏற்பட்டு சைட்டம் இல்லாதொழிக் கப்படும் என்றார். (செ-11)

## வட - கிழக்கு குடு...

நாம் கவலையடைகிறோம். போருக்குப் பின்னர் குடும்பங்கள் தமது வாழ்வை மீளக் கட்டியெழுப்புவதற்கு சவால்களை எதிர்கொண்டுள்ளன.

ஆய்வுகள் நடத்தப்பட்டு அதன் முடிவுகளுக்கு அமைய தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த 2009 மே மாதம் போர் முடிவுக்கு வந்த பின்னர், இடம்பெயர்ந்த குடும்பங்கள் தமது சொந்த நகரங்களுக்குத் திரும்பி வாழ்வை மீளக் கட்டியெழுப்புவதற்கு போராடி வருகின்றன.

மூன்று தசாப்தங்களாக இழப்புக்களைச் சந்தித்தவர்கள், தமது வாழ்வாதாரத்துக்காக கடுமையாக கடன்களைப் பெற வேண்டிய நிலையில் உள்ளனர்.

இலங்கை மத்திய வங்கியின் அண்மைய அறிக்கையில், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வறுமை மட்டம் அதிகமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விவசாயத்தை அதிகளவில் அடிப்படையாகக் கொண்ட வடக்கு மாகாணம் வரட்சியாலும் பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் இதன்போது கூறியுள்ளார். (செ-11)

## கொழும்பில் போரா...

கைதிகள் விடுதலை செய்வதற்கான அமைப்பின் ஏற்பாட்டில் கொழும்பில் மாபெரும் அறவழிப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அரசியல் தீர்வு, காணி விடுவிப்பு, தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்கு உடனடி தீர்வை வலியுறுத்தி இப்போராட்டம் நாளை மறுதினம் 23ஆம் திகதி கொழும்பு கோட்டை ரயில் நிலையத்திற்கு முன்னால் நடைபெறவுள்ளது.

அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையிலான இப்போராட்டத்தில் வடக்கு- கிழக்கிலுள்ள சிவில் அமைப்பினர், காணாமல் போனோர்கள், தமிழ் அரசியல் கைதிகள் ஆகியோரின் உறவினர்களும் கலந்து கொள்ள வேண்டும் என அரசியல் கைதிகள் விடுதலை செய்வதற்கான அமைப்பின் ஏற்பாட்டாளர் அருட்தந்தை மா.சக்திவேல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

போர் முடிவடைந்து எட்டு ஆண்டுகள் கடந்த நிலையிலும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் இன்னும் தீர்க்கப்படாத நிலையிலேயே அறவழிப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## ஆலய மண்டபம்...

கொண்டிருந்த கட்டடம் நேற்று மாலை இடிந்து வீழ்ந்ததில், 30 பேர் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மாலை 4.15 மணியளவில் இடம்பெற்றது. ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலைக்கு முன்னால் அமைந்துள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலின் மண்டப நிலைக் கட்டடப்பணிகள் நிறைவடைந்து அதற்காக கொங்கிரீட் தளம் இடும் பணிகளின் போதே கட்டடம் இடிந்து விழுந்துள்ளது.

இதில் கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களே காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் ஆரையம்பதி மாவட்ட வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து ஆறு பேர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளதாக வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.அல்மேரா தெரிவித்தார்.

மேலும்காயமடைந்த இன்னும் சிலர் கட்டட இடிபாடுகளுக்குள் சிக்கி இருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் தேடு[illegible] பணிகள் நேற்றிரவு வரை நடத்தப்பட்டிருந்தன. (செ-11)


விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்
● மேலதிக கட்டணமின்றி பொதிகள் வீடுகளில் வந்தே பெற்றுக்கொள்ளப்படும்.
● விடுமுறை நாட்களிலும் ஞாயிற்றுக்கிழமைகளிலும் அலுவலகங்கள் உண்டு.
● எம்மிடம் சேவைகளை பெற்றுக்கொள்பவர்களுக்கு தங்கப்பவுண், மோட்டார் சைக்கிள்கள் வெல்லும் வாய்ப்பு

UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS *(நிபந்தனைகளுக்குட்பட்டது)

V2 TRAVELS-0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி ● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை (சி-8564)

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள் சேவை
070 330 5500
அண்ணா அன் கோ
976,கே.கே.எஸ் வீதி,நாச்சிமார் கோவிலடி
021 221 5656 யாழ்ப்பாணம் annalk.com
லண்டனுக்கு (UK) 5kg க்கு மேல் மிகக் குறைந்த கட்டணம்
பொதிகள் மற்றும் கடிதங்களை துரிதமாகவும், நம்பிக்கையுடனும், குறைந்த கட்டணங்களுடனும் அனைத்து நாடுகளுக்கும் மிகக் குறுகிய நாட்களுக்குள் அனுப்பிட எம்மை நாடுங்கள்.
யாழ்ப்பாணம் | நவாலி | சாவகச்சேரி | மீசாலை | மல்லாவி
முல்லைத்தீவு | கிளிநொச்சி | திருகோணமலை | வவுனியா
(சி-8590)

Personal Class
Java, Dot.net, php, mysql, A/L ICT போன்ற பாடங்களும், ஏனைய ICT பாடங்களும் வீட்டில் வந்து கற்பித்து தரப்படும்.
தொடர்பு:
0755321510 (8690)

CNR எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை
உலகின் முதல் தர கூரியர் நிறு[illegible]த்தின் ஊடாக உங்கள் வீட்டில் இருந்தவாறே உள்நாட்டு, வெளிநாட்டு முக்கிய ஆவணங்கள் பொதிகளை துரித கதியில் அனுப்பிட நாடுங்கள்.

CNR World Wide Express
இல.401, மணிக்கூண்டு கோபுர வீதி, (பெருமாள் கோவில் அருகாமை) யாழ்ப்பாணம்.
தொடர்புகளுக்கு: 021 5674145, 077 2931062
follow us : cnrworldwideexpress
(சி-8615)

வீடு விற்பனைக்கு
திருநெல்வேலி பரமேஸ்வரா சந்திக்கு அருகாமையில் 1 1/4 பரப்புக் காணிக்குள் 3 அறைகள் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:
0769754410, 0769770175 (8655)

Organ, Guitar, புல்லாங்குழல் வகுப்புக்கள்
சினிமாப்பாடல்களின் இசைக் குறிப்புக்கள் (Notes) விற்பனைக்கு உண்டு.
கரவீணா இசை மன்றம்
4, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர்.
தொ.பே : 077 703 1293 (சி-8624)

வெளிநாடுகளுக்கான பொதிகள் சேவை
மிகக்குறைந்த கட்டணத்தில்
UK - 5Kg மேற்பட்ட பொதி 800/=
UK - 11 Kg மேற்பட்ட பொதி 500/=
மற்றைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள்
திருமுருகன் கொம்நெற் Pvt (Ltd)
T.P:- 077 755 4528
யாழ்ப்பாணம், திருநெல்வேலி, நெல்லியடி பருத்தித்துறை, சங்கானை, கிளிநொச்சி

காணி விற்பனைக்கு
உடுவில் கிழக்கு சபாபதிப்பிள்ளை வீதியில் வாழ்வகத்திற்கு அண்மித்ததாக 12 பரப்பு தோட்டக் காணி விற்பனைக்கு உண்டு. வீடு கட்டவும் உகந்தது.
தொடர்பு:
0763909732 (8674)

காணி விற்பனைக்கு
சிறிய முதலீடு - நிரந்தர வருமானம்
A9 வீதி, நுணாவில் சந்தி அருகே மட்டுவில் வீதியில் 300M தூரத்தில் 10 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. வீடு கட்ட, தென்னை, மா, பலா, தேசி போன்ற மரங்கள் வைத்து பலன்பெற உகந்த இடம். (8987)
தொடர்பு
077 873 0129

கோழிக்குஞ்சு பொரிக்கும் இயந்திரம் விற்பனைக்கு
சிறிய, நடுத்தர, பெரிய முதலீட்டாளர்களுக்கு ஏற்ற வகையிலான இயந்திரம் மற்றும் உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு உண்டு. பழுதடைந்த இயந்திரங்கள் திருத்திக் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: அ.பகீரதன்
077 660 0711 (8685)

பணிநிலை வேண்டுகை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நிறுவனத்துக்கு
01. Accounting Staff (MS Office, MS Excel, Quick Book) தெரிந்தவர்கள் தேவை. மேலதிக விபரங்களுக்கு:
KINGS ELECTRONICS (PVT) LTD
No.12, Point Petro Road, Jaffna.
(C-8619) T.P : 021 454 6699

German Institute
German, Swiss, Netherland, Ostria நாடுகளுக்கான மொழி வகுப்புக்கள்.
Embassyயின் A1 Examக்கு ஏற்றவாறு தமிழ் விளக்கத்துடன்.
தொடர்புகளுக்கு:
Mrs. P.Kajenthini
T.P : 077 160 4823
10, Palaly Road, Jaffna.
தொலைபேசியில் தொடர்பு கொண்டு வரவும். (8689)

காற்று வெற்றிடமாக்கி பொதியிடும் இயந்திரம் விற்பனைக்கு
மீன், மரக்கறி, பழவகை மற்றும் உலர் உணவுகளை காற்று நீக்கம் செய்து பொதியிடும் இயந்திரம் விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு: அ.பகீரதன்
077 660 0711 (8685)

காணி விற்பனைக்கு
யாழ்ப்பாணம், நல்லூர் கோவிலுக்கு 3 நி[illegible]டம் வாகன தூரத்தில் 90 பேர்ச்சஸில் அமைந்துள்ள இரு வீடுகளும் கராச்சும் கொண்ட காணியொன்று உடனடியாக விற்பனைக்கு உண்டு. வியாபார ஸ்தலமாகவும் பாவனைப் படுத்தலாம்.
விலாசம் : 235/2, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
தொடர்பு : 077 672 4477 (8686)

ARK என்ரபிறைசஸ் (பிறைவேட்) லிமிட்டெட்

பூட்றெஸ்ற் | ஸ்கொட்டிங் பான் | பச்சை கோஸ்
இப்பொழுது நாம் நேரடி இறக்குமதியாளர்
வியாபாரிகள் எம்மிடம் தொடர்பு கொண்டு விலைக்கழிவினைப் பெற்றுக்கொள்ளலாம்
மேலதிக தொடர்புகளுக்கு
இல. 150,152 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 312 7895 / 021 222 4021
071 855 6668 (தேவா)
(சி-8610)

காணி விற்பனை
இராசவீதியில் 6 பரப்பு, திப்பிலி விளையாட்டு அரங்கு வீதியில் 4 1/2 பரப்பு, சேரன் காச்சி இராசவீதிக்கு அருகாமையில் 10 பரப்பு, புலவனார் வீதி 2 ஆம் ஒழுங்கையில் 3 1/4 பரப்பு காணியுடன் இரண்டு வீடுகளும் விற்பனைக்குண்டு. மற்றும் வீட்டுத்தளபாடங்களும் விற்பனைக்குண்டு.
தரகர்கள் தேவையில்லை. நேரடியாகத் தொடர்பு கொள்ளலாம்.
தொடர்புகளுக்கு :
077 979 4505 (8668)

காணி விற்பனைக்கு
வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் மஹா வித்தியாலயத்துக்கு அருகாமையில் உள்ள மணல் காட்டில் 05 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு. (சி-8623)
தொடர்பு:
0785791423

காணி விற்பனைக்கு
நவக்கரி புத்தூர் நிலாவரைக் கிணற்றில் இருந்து உள்ளே 160 பரப்புக்காணி விற்பனைக்குண்டு. (சேர்த்தே விற்கப்படும்)
நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.
தரகர்கள் வேண்டாம்.
தொடர்புகளுக்கு
077 950 4123, 077 662 7047 (8670)

மணமகள் தேவை
யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 38 வயதுடைய வடமராட்சியை பிறப்பிடமாகவும், Bank இல் வேலை செய்யும் (5' 6" உயரம்) மணமகனுக்கு அழகான மெல்லிய மணமகள் தேவை.
தொடர்பு:
0774731429 (8662)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.05.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka
Viber 076 636 3378

வாரமலர்
# வலம்புரி
சங்குநாதம்

நாதம் 118

வள்ளுவர் ஆண்டு 2048 | 21.05.2017 | தொலைபேசி : 021 222 3378




# ஆறாத துயரம்

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. ஆ லடி மாநாட்டிற்கு அனைவரும் வருகை தந்திருந்தனர். இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் அறிவித்ததும் அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

**வாத்தியார்:** மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் எங்கள் தாய்மார் அழுது புலம்பினதைப் பார்த்து மனம் நொந்து போய்ச்சுது.

**கங்காணி:** இந்தத் துன்பியல் காட்சிகளை சிங்கள ஊடகங்கள் வெளிப்படுத்திறதில்லை போல. இந்தத் துன்பத்தைக் கண்டாலாவது சிங்கள மக்கள் மனம் மாறுவினம்.

**பண்டிதர்:** அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே செல்வத்தைத் தேய்க்கும் படை என்று வள்ளுவர் சொல்லியிருக்கிறார். எங்கட தாய்மார் விடுகிற கண்ணீருக்கு சம்பந்தப்பட்டவர்கள் என்றோ வருந்தித்தான் ஆக வேண்டும்.

**மூப்பர்:** சம்பந்தப்பட்டவர்கள் மட்டுமல்ல சம்பந்தப்பட்டவர்களுக்கு முண்டு கொடுக்கிறவர்களும் நிச்சயம் அனுபவிப்பினம்.

**விதானையார்:** அதுசரி, இந்த முறை சம்பந்தர் ஐயாவும் முள்ளிவாய்க்காலுக்குப் போயிருக்கிறார்.

**சாத்திரியார்:** ஏன் முந்தி அவர் போகல்லயோ?

**விதானையார்:** சாத்திரியார் கனடாவில இருந்தால இஞ்ச நடக்கிற சம்பவம் ஒன்றும் தெரியாது. முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு அவர் ஒருக்காலும் போறதில்லை.

**சாத்திரியார்:** அப்ப ஏன் இந்த முறை போனவராம்.

**கங்காணி:** கெடுகாலம் அங்க கொண்டு போய் விட்டிட்டுது. கூட இருந்தவர்கள் சொல்லியிருப்பினமாக்கும். ஐயா நீங்கள் எப்படியும் இந்த முறை முள்ளிவாய்க்காலுக்குப் போய் நினைவேந்தல் செய்யுங்கள் எண்டு.


**விதானையார்:** அங்க போகத்தானே தெரிஞ்சுது. சனங்கள் கொதித்துப் போய், சம்பந்தரை வெளியேற்றுங்கோ ; வெளிய போகச் சொல்லுங்கோ எண்டு கத்திக் கதறிச்சினம்.

**சாத்திரியார்:** என்ன ? இப்படியும் நடந்ததோ?

**விதானையார்:** சாத்திரியார் நீங்கள் இப்பவும் கனடா நாட்டில இருக்கிற மாதிரித்தான்...

**சாத்திரியார்:** சும்மா இருக்கோ. இருபது வருடமல்லோ அங்க இருந்தாச்சு. அப்ப அந்தப் பழக்கம் தானே இருக்கும். அது சரி முள்ளிவாய்க்காலில நினைவேந்தலுக்குப் போன சம்பந்தர் ஐயாவை ஏன் வெளிய போகச் சொன்னவியள்.

**வாத்தியார்:** சிலரைச் சிலகாலம் ஏமாற்றலாம். ஆனால் பலரைப் பலகாலம் ஏமாற்ற முடியாது என்றொரு தத்துவம் இருக்குது. அது தான் இப்ப வேலை



## சம்பந்தரை வெளியே போகச் சொன்னதன் பொருள்தான் யாதென அறிமினே!

செய்யத் தொடங்கிற்றுது.

**பண்டிதர்:** அப்ப இனி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்ர கொழும்புத் தலைமை தமிழ்மக்களைச் சந்திக்கிறதென்பது கடினமான காரியம் எண்டுதான் நினைக்கிறன்.

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா முள்ளிவாய்க்காலில வைத்து எங்கட முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவின்ர காலைப்பிடித்து ஐயா சம்பந்தரை வெளிய போகச் சொல்லுங்கோ, வெளிய போக்காட்டுங்கோ எண்டு தாய்மார் கூறியதற்கு இரண்டு அர்த்தம் உண்டு.

**கங்காணி:** வாத்தியார் என்ன இரண்டு அர்த்தம்?

**வாத்தியார்:** ஒன்று முள்ளிவாய்க்காலில இருந்து சம்பந்தரைப் போகச் சொல்லுறது. மற்றையது அரசியலில் இருந்து சம்பந்தரை வெளியேற்றுவது.

**மூப்பர்:** அதையேன் எங்கட முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஐயாவிட்டச் சொல்ல வேணும்.

**வாத்தியார்:** இப்ப எங்கட விக்னேஸ்வரன் ஐயாவைத்தான் தமிழ்மக்கள் தங்கட தலைவராக ஏற்றுக் கொண்டிருக்கினம். எனவே சம்பந்தரை வெளியேற்றக் கூடிய சக்தி அவரிட்ட மட்டும்தான் இருக்குது.

**பண்டிதர்:** அது சரி, செய்தியாளர் ஒருவர் சம்பந்தரைப் பார்த்து பயங்கர வாதம் ஒழிக்கப்பட்டது என்று நீங்கள் பாராளுமன்றத்தில பேசியிருக்கிறீர்கள் என்று கேட்டவராம்.

**விதானையார்:** அப்படிக் கேட்டால் அதற்குப் பதில் அளித்தால் போய்ச்சுது. பாராளுமன்றத்தில அப்படிச் சொல்லாவிட்டால் அப்படி நான் சொல்லவில்லை என்று பதில் சொன்னால் பிரச்சினை முடியுதுதானே!

**கங்காணி:** விதானையார் சொல்லுறது முற்றிலும் சரி. பாராளுமன்றத்தில் அப்படிச் சொல்லியிருந்தால் அதை அந்த ஊடகவியலாளர் நிரூபிப்பார்தானே!

**வாத்தியார்:** என்னவாக இருந்தாலும் தமிழ் அரசியல்வாதிகள் தமிழ் மக்களுக்கு விசுவாசமாக நடக்க வேணும். நடிப்பு, நாடகம், இரட்டை வேடம், விலாங்குக் கோலம் இவை எதுவும் மக்கள் மத்தியில் செல்லுபடியாகாது அவ்வளவு தான்.

**பண்டிதர்:** எதிர்வரும் காலங்களில் தமிழ் அரசியல் வாதிகள் மக்களைச் சந்திப்பது கூட ஆபத்தாக வரலாம் என்பதைத்தான் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில் நடந்த சம்பவம் காட்டுது.

**சாத்திரியார்:** இப்ப பாருங்கோ தமிழ் என்ற பேரில சமயத் திணிப்புக்கள், மதமாற்றங்கள் முன்னெடுக்கப்படுகின்ற திட்டங்கள் அமுலாகுவதைப் பார்க்க முடியுது.யாராக இருந்தாலும் தமிழ்ப் பற்றோடு நடந்து கொள்ள வேணும். தமிழ் மொழி என்று சொல்லிக் கொண்டு சமயத் திணிப்புக்களைச் செய்தால் அது பாரதூரமாக அமையும். இதைத்தான் நான் சொல்ல முடியும்.

**மூப்பர்:** என்ன? சாத்திரியார் திடீரென்று சமயம் பற்றிக் கதைக்கிறியள். ஏதேனும் சம்பவங்க்ள் நடந்ததோ...

**சாத்திரியார்:** யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தராக நியமனம் பெற்ற பேராசிரியர் விக்னேஸ்வரன் அவர்களுக்கு இணுவிலில ஒரு பாராட்டு விழா நடந்தது. அந்தப் பாராட்டு விழா வில சைவ சமயத் தலைவர் ஒருவர் கலந்து கொண்டு ஆசியுரை வழங்கி யிரு ந்தார். அதில யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை ஓர் இந்துப் பல்கலைக்கழகமாக ஆக்குகின்ற சிந்தனைதான் ஆரம்பத்தில இருந்தது என்று சொல்லியிருக்கிறார்.

இவருக்குப் பின்பாகப் பேசிய நொான் ஆர்.சி பேராசிரியர் ஒருவர் கடுப்படைந்து அந்தக் கருத்து ஒரு பைத்தியக்காரத்தனமானது என்று சொன்னது மட்டுமல்லாமல் ஒரு படித்தவர் என்ற நாகரிகம் கூட இல்லாமல் மேடையில கண்டபாட்டில பேசியிருக்கிறாராம்.

**வாத்தியார்:** அந்தாள் அப்பவே சைவ்சமயத்திற்கு எதிரான ஆள் தானே! அவரை ஆரு பேசிறதுக்கு அனுமதித்தது. இணுவில் மக்கள் பண்பாடு அறிந்தவர்கள். உயர்ந்த சைவசமய ஆசாரம் மிக்கவர்கள். அவர்களுக்கு அந்த பேராசிரியற்ற சுயகுணம் தெரியாமல் போயிற்றுது போல.

**பண்டிதர்:** யாழ்ப்பாணத்திற்கு ஒருமுறை தவத்திரு குன்றக்குடி அடிகளார் வந்திருந்தார். அவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உரையாற்றும்போது கற்றவர்கள் கயவர்களாக இருந்தால் இந்த உலகம் தங்களது என்று சொன்னவர்.

இப்படியானவர்களுக்குத் தான் அவர் சொன்னவர் எண்டு இப்ப நினைக்கத் தோன்றுது.

கற்றவர்கள் எப்பவும் எல்லா மக்களையும் எல்லா மதங்களையும் எல்லா மொழிகளையும் மதிக்கவும் மரியாதை செய்யவும் தெரிந்திருக்க வேணும்.

இதைவிட்டிட்டு நாட்டாமைத்தனம் காட்டினால் அதுக்குப் பெயர் படித்தவர் அல்ல.

**விதானையார்:** என்ன இருந்தாலும் பேராசிரியர் விக்னேஸ்வரன் அவர்களின்ர பாராட்டு விழாவில சைவசமயத்தவர்களை அசௌகரியப்படுத்தும் வகையில் உரையாற்றிய அந்த மதவெறி பிடித்த பேராசிரியருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம் தக்க பதில் கொடுக்கவேணும். இல்லையெண்டால் எங்கவும் தொடர்ந்து இப்படித்தான் பேசிக் கொண்டிருப்பார்.

இப்படி விதானையார் சொல்ல அதனை ஏற்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் மணியும் அடிக்க ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# முள்ளிவாய்க்கால் ஒரு நினைவுப் பகிர்வு



இழப்புக்களைத் தாங்கி அழுவது மட்டும்தான் தமிழர்களின் தலைவிதியாயிற்று. மே.18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் எழுந்த அழுகை ஒலத்தின் அதிர்வு இன்னமும் கேட்டபடியே இருக்கிறது.

2009 ஆம் ஆண்டு மே.18 இல் நடந்து முடிந்த வன்னிப் போரில் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் உயிரிழந்து போயினர். அவர்களின் நினைவாக முள்ளிவாய்க்காலில் ஒன்றுகூடி நினைவேந்தல் செய்வதற்குக் கூட பேரினவாதிகளும் படையினரும் முட்டுக்கட்டை போட்டபடியே இருக்கின்றனர்.

நினைவுக்கல் நாட்டினால் அதற்குத் தடை, தீபம் ஏற்றி இறந்தவர்களை வழிபட்டால் அது குற்றம். இவையெல்லாம் தேசத்தின் சமாதானத்திற்குப் பங்கம் என்பது பேரினவாதத்தின் கணிப்பு.

ஆக, வன்னிப் போரில் உயிரிழந்தவர்கள் அத்தனை பேரும் குற்றவாளிகள் என்பது போலவும் அவர்களை நினைவுகூர்ந்தால் அது இந்த நாட்டின் சமாதானத்தைப் பாதிக்கும் என்பது போலவும் ஒரு காட்டாப்பை பேரினவாதம் முன்வைக்கிறது.

வன்னி யுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் உயிரிழந்தது உண்மை. எனவே இறுதி யுத்தம் நடந்த முள்ளிவாய்க்காலில் நினைவாலயம் அமைத்து உங்கள் அகவணக்கத்தைச் செலுத்துங்கள். தென்பகுதியில் இருந்து, வெளிநாடுகளில் இருந்து வருகின்றவர்களும் முள்ளிவாய்க்கால் நினைவாலயத்திற்குச் சென்று தங்கள் அஞ்சலியை- அகவணக்கத்தைச் செலுத்த முடியும் என்று அறிவிப்பது தான் ஆட்சியாளர்களுக்கும் சிங்கள மக்களுக்கும் அழகு. இந்த அறிவித்தலே நாட்டின் சமாதானத்திற்கு மேலும் வலுச்சேர்க்கும்.

இதை விடுத்து தமிழ் மக்கள் என்பதால் அவர்கள் அகவணக்கம் செலுத்த முடியாது. தங்கள் உறவுகளை நினைவுகூர இயலாது என்று கூறுவதெல்லாம் தொடர்ந்தும் இன வன்மத்தை- முரண்பாட்டை வளர்ப்பதாகவே இருக்கும்.

பொதுவில் உலகம் முழுவதிலும் இருக்கக்கூடிய ஒரு நடைமுறை இறந்தவர்களை நினைவு கூருவதாகும். நினைவு கூருதல் என்பது ஒரு அடிப்படை உரிமை.

போர்ச்சூழலில் உயிரிழந்த மக்களை, அந்த மக்களின் உரிமைகளுக்காகப் போராடி மரணித்த வீரர்களை நினைவு கூருதல் என்பது அந்த இனத்திற்கு இருக்கக்கூடிய ஒழுக்கமாக- நன்றியுணர்வாக அமையும்.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை பெரும்பான்மை சிங்கள மக்களின் முடிவு சிங்கள மக்களுக்காகப் போராடியவர்கள் அல்லது அந்த இனம் சார்ந்தவர்களை மட்டுமே இலங்கையில் நினைவு கூர முடியும் என்பதாக உள்ளது.

## இறுதிப் போர் நடந்த முள்ளிவாய்க்கால் மௌன வழிபாட்டிற்குரிய நினைவிடம்

ஆனையிறவில் அமைக்கப்பட்டுள்ள, உயிரிழந்த படையினரின் நினைவாலயத்தில் தென்பகுதி மக்கள் அஞ்சலி செலுத்துவதை பார்க்க முடியும்.

போர்க்களத்தில் உயிரிழந்த படையினருக்கான நினைவிடம் மிகப் பிரமாண்டமாக அமைக்கப்பட்டு தென்பகுதியில் இருந்து வருகின்ற சிங்கள மக்கள் அங்கு சென்று அஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இதேபோன்று வன்னியின் பல இடங்களில் படையினருக்கான நினைவிடங்கள், நினைவுத் தூபிகள் என பலவற்றை நிறுவியுள்ளதைப் பார்க்க முடியும்.

அதேநேரம் கொடும் போரில் உயிரிழந்த அப்பாவித் தமிழ் மக்களுக்கு அஞ்சலி செலுத்தவோ அகவணக்கம் செலுத்தவோ முடியாது என்பது பேரினவாதிகளின் முடிவாக இருக்கிறது.

நினைவேந்தல் என்றவுடன் அது விடுதலைப் புலிகளுக்கானது என்று பேரினவாதிகள் முடிவுகட்டி விடுகின்றனர். விடுதலைப் புலிகளை நினைவுகூருவது மீண்டும் இந்த நாட்டில் ஆயுதப் போராட்டத்திற்கு வழிவகுக்கும் என்பதாக சட்டங்களை இயற்றி அதனைத் தமக்குச் சாதகமாக்கி நீதிமன்றங்களை நாடி நினைவேந்தல் நிகழ்வை தடை செய்கின்ற அளவிலேயே பேரினவாதத்தின் சிந்தனைப் போக்கு உள்ளது.



போரில் உயிரிழந்த பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்களுக்கான நினைவேந்தல் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அதற்காக முள்ளிவாய்க்காலில் நினைவாலயம் அமைக்கப்பட்டு அங்கு மக்கள் அகவணக்கம் செய்ய அனுமதிக்க வேண்டும் என்ற நினைப்புக்கள் `பெரும்பான்மை சமூகத்திடம் ஏற்படாத வரை இந்த நாட்டில் இனப் பிரச்சினைக்கான தீர்வு என்பது சாத்தியப்படாத ஒன்றாகவே இருக்கும்.

இது ஒருபுறம் இருக்க, எங்கள் தமிழ் அரசியல் தலைமையும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தொடர்பில் ஒரு இறுக்கமான கொள்கையைக் கொண்டிருக்கவில்லை.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மே 18 ஐ அரசியலுக்கான வியூகமாக அமைப்பதிலேயே தமிழ் அரசியல்வாதிகள் கரிசனை கொண்டுள்ளனர்.

உண்மையில் வன்னிப் போரில் உயிரிழந்த எங்கள் உறவுகள் மீது தமிழ் அரசியல்வாதிகளுக்கு (ஒரு சிலரைத் தவிர) விசுவாசமும் பற்றும் இருக்குமாயின் முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் மண்டபம் அமைக்கப்பட்டிருக்கும்.

உயிரிழந்த அத்தனை தமிழ் மக்களின் பெயர்களும் பொறிக்கப்பட்டு அந்த நினைவாலயம் வழிபாட்டிற்குரிய இடமாக- இறுதிப் போர் முடிவுற்ற இடம் புனித பிரதேசமாக ஆக்கப்பட்டிருக்கும். ஆனால் இதுபற்றி எல்லாம் சிந்திப்பதற்கு நம்மிடம் எவரும் இல்லை.

மாறாக மே 18 முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வில், நான் உரையாற்ற வேண்டும். எனக்கும் உரையாற்றச் சந்தர்ப்பம் தர வேண்டும் என்ற ஒரு போட்டி நிலை காணப்படுவதை அவதானிக்க முடிகிறது.

அதாவது உயிரிழந்த எங்கள் பல்லாயிரக்கணக்காண உறவுகளின் நினைவில் நாங்கள் முன்னிலை பெற நினைக்கின்றோம். முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்; உரையாற்றுவதற்கோ அல்லது அரசியல்வாதிக்ளை முன்னிலைப் படுத்துவதற்கோ உரியதான இடமன்று.

அது மௌன வழிபாட்டிற்குரிய இடம். உள்ளத்தால் எங்கள் உறவுகளை நினைத்து உருகுகின்ற நிகழ்வு. ஆனாலும் நாங்கள் அதனை மறந்து அவர் பேச வேண்டும், இவர் பேசவேண்டும் எனப் போட்டி போடுகின்றோம்.

வடக்கின் முதலமைச்சர் பேசினால் அது போதுமானது. அந்த, உரை அனைவரும் உரையாற்றியதற்குச் சமமானது. இருந்தும் நாம் போட்டி போடுகின்றோம். எங்களை முதன்மைப்படுத்துவதில் அதீதமாக அக்கறை கொள்கின்றோம். இவை தவிர்க்கப்பட வேண்டும்.

முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் மே 18 என்றால் மே 17 இல் ஆயத்தம் செய்வது என்ற மடமைத்தனத்தைக் கைவிட்டு முன்கூட்டியே திட்டமிடல்களைச் செய்தாக வேண்டும்.

2017 மே 18 இல் வடக்கின் முதலமைச்சர் ஆற்றிய உரையில் குறிப்பிட்டது போல் மே 18 முள்ளி வாய்க்கால் நினைவேந்தல் உலகத் தமிழினத்தை ஒன்றிணைக்கும் நாளாகட்டும். தமிழர்களை ஒன்றுபடுத்தும் இடமாகட்டும்.

இதுவே போரில் உயிரிழந்த எங்கள் உறவுகளுக்கு நாம் செய்யும் உன்னத மான அஞ்சலி ஆகும்.

விதுரன்




# திறமையான குள்ளன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

உங்கள் மகன் கண்டிப்பாக வந்து சேருவார்" என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

மந்திரச் செருப்பின் உதவியால் அண்ணன்கள் இருந்த இடத்தை அடைந்தான் அவன்.

அரக்கன் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டு இருந்தான்.

" இனி இந்த அரக்கனால் நம்மை ஒன்றும் செய்ய முடியாது.

மந்திரச் செருப்பை இழந்து விட்டான்.

அவன் தேடி வைத்த செல்வத்தையும் கொண்டு வந்து விட்டேன்.

எல்லோரும் என்னை இறுகப் பிடித்துக் கொள்ளுங்கள்" என்றான் குள்ளன்.

அண்ணன்கள் எல்லோரும் குள்ளனை நன்றாகப் பிடித்துக்



கொண்டார்கள்.

" மந்திரச் செருப்பே! நாங்கள் எங்கள் வீட்டை அடைய வேண்டும்" என்றான் அவன்.

சிறிது நேரத்தில் எல்லோரும் வீட்டை அடைந்தார்கள்.

அவர்கள் தந்தையும் தாயும், " மகன்களே! காட்டில் என்ன பாடுபடுகிறீர்களோ? வறுமையினால் தான் இந்தக் கொடுமையைச் செய்து விட்டோம்" என்று அழுது புலம்பிக் கொண்டிருந்தார்கள்.

கதவு தட்டும் ஓசை கேட்டு அவர்கள் கதவைத் திறந்தார்கள்.

ஏழு மகன்களும் நிற்பதைக் கண்டு அவர்களைக் கட்டித் தழுவிக் கொண்டார்கள்.

"அம்மா! இனி நமக்கு வறுமையே இல்லை. பல தலைமுறைக்குத் தேவையான பொற்காசுகளுடன் வந்து இருக்கிறோம்" என்றான் குள்ளன்.

சாக்கைப் பிரித்தான் விறகுவெட்டி. அதற்குள் ஏராளமான பொற்காசுகள் மின்னின.

எதிர்பாராமல் கிடைத்த இந்த நல்வாழ்வை எண்ணி எல்லோரும் மகிழ்ந்தார்கள்.

தூக்கம் கலைந்து எழுந்தான் அரக்கன்.

தன் காலில் மந்திரச் செருப்பு இல்லாததைக் கண்டு திடுக்கிட்டான்.

எப்படியோ துன்பப்பட்டு தன் வீட்டை அடைந்தான் அவன்.

வாசலிலேயே காத்திருந்த அவன் தாய், " மகனே! உன்னை விட்டு விட்டார்களா? நாம் சேர்த்து வைத்த பொற்காசுகளை அப்படியே கொடுத்து அனுப்பினேன்" என்றாள்.

" என்னம்மா சொல்கிறாய்? நாம் சேர்த்து வைத்த பொற்காசுகள் போய்விட்டனவா? என்ன நடந்தது?" என்று அதிர்ச்சியுடன் கேட்டான் அவன்.

நடந்ததை எல்லாம் சொன்னாள் அவள்.

" அம்மா! அந்தச் சிறுவர்கள் நம்மை நன்றாக ஏமாற்றி விட்டார்கள்.

நாமே நம் அருமைக் குழந்தைகளைக் கொன்று விட்டோம்.

என் மந்திரச் செருப்பை இழந்து விட்டேன்.

சேர்த்து வைத்த பொற்காசுகளும் போய்விட்டன. என்ன செய்வது?" என்று அழுதுகொண்டே கேட்டான் அவன்.

"மகனே! ஒரே ஒருநாள் அவர்கள் இங்கே இருந்தார்கள்.

நமக்கு எவ்வளவு இழப்பு ஏற்பட்டு விட்டது? இனி அவர்கள் வழிக்கே போகாமல் இருப்பது நமக்கு நல்லது" என்று அறிவுரை சொன்னாள் அவள்.


" நீ சொன்னபடியே நடக்கிறேன்" என்றான் அவன்.

பிறகென்ன, விறகுவெட்டி தன் குடும்பத்துடன் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தான்.

(முற்றும்)

ஹாய் குட்டீஸ்!

பசியில் இருக்கும் இந்த பனிக்கரடி வாழைப்பழத்தை உண்பதற்கு பாதை காட்டுங்க பார்க்கலாம்...



## சிந்தனை துளிகள்

★ மண்ணுக்குள் மறைந்தால்தான் செடியாக முளைக்க முடியும்.

-மு.வ.

★ மௌனமாக இருப்பது கோழைத்தனம் என்று நினைத்துவிடக் கூடாது.

-மொரார்ஜி தேசாய்

★ ஆற்றலை வெளிப்படுத்தும் ஆற்றல் இல்லாவிட்டால் அந்த ஆற்றல் மதிப்பற்று போய்விடுகிறது.

- நெப்போலியன்

★ இனிமையாக பேசுபவனுக்கு பகைவர்கள் இருக்கமாட்டார்கள்.

-கிருபானந்த வாரியார்.

★ துன்பமும் ஏழ்மையும் போதிப்பதுபோல் வேறொன்றும் போதிக்கமுடியாது.

-விவேகானந்தர்.

★ உங்களுக்கு அவசியமில்லாததை நீங்கள் வாங்கினால் சீக்கிரமே உங்களுக்கு அவசியமானவற்றை விற்க நேரிடும்.

-ரிச்சர்ட் சாண்டர்ஸ்.

★ ஒருமுறை அறிவாளியுடன் பேசுவது, ஒரு மாதம் நூல்களைப் படிப்பதைவிட அதிக நன்மை தரும்.

★ ஒழுக்கம் பிச்சைக்கார உருவில் இருந்தாலும் கௌரவிக்கப்படும்.

★ மனம் ஒரு நல்ல வேலைக்காரன், ஆனால் மோசமான எஜமான்.

-சோக்கிரட்டீஸ்.

★ உங்கள் எதிரிகளை கவனியுங்கள்,அவர்களே உங்கள் குற்றங்களை முதலில் கண்டுபிடிப்பவர்கள். வாழ்க்கையில் மகிழ்ச்சி என்பது பிறரை மகிழ்விப்பதில்தான் உள்ளது.


-மெஹர்பாபா.

★ ஒரு மனிதனின் தலைசிறந்த நண்பர்கள் அவனது பத்து விரல்கள்.

-ராபர்ட் கோலியர்.





இன்றைய தலை தாடி அலங் காரங்களுடன் மணமகன் வந்தால்?

இன்றைய அரசியலில் மக்களுக்காக உழைக்கும் உண்மையானவர்கள் யார்?

மோடியின் வருகை பற்றி?

**பாலசிங்கம் — சுழிபுரம்**

**இன்றைய அரசியலில் மக்களுக்காக உழைக் கும் உண்மையானவர்கள் யார்?**

மக்கள் குறை கேளா அரசியல்வாதிகள் உள்ள உண்டோ வாகனப் பேமிட் வாங்காதவர்கள். புள்ளடி வாங்கும் வரைக்கும் தான் வடக்கு-கிழக்கு. வாங்கி பாராளுமன்றம் சென்று விட்டால் தெற்கு தெற்கு. அடுத்த தேர்தல் மட்டும் வடக்குகெதற்கு.

**பிரணாப் — பருத்தித்துறை**

**கடவுள் இருக்கிறாரா?**

தூணிலும் இருக்கிறான் துரும்பிலும் இருக்கி றான் என்று பிரகலாதன் கூற கோபமுற்ற இரணியன் தூணை காலால் உதைத்தான். தூண் பிளந்தது.

அந்த தூணிலிருந்து நரசிம்மன் வந்து இரணியனை வதம் செய்தான் என்று சிறு வயதில் படித்திருக்கிறேன்.

இறைவன் தூணிலும் துரும்பிலும் இருக் கிறான் என்றால் முள்ளிவாய்க்காலில் எண் ணினத்து பெண்களின் மார்புகள் அறுக்கப் படும் போதும் பச்சைப் பிஞ்சுகள் குண்டுபட்டு மாண்டு போனபோதும் இரண்டு காலையும் இழந்து நடக்க முடியாது இருந்தவர் மீது குண் டிபட்டு இறந்து போன போதும் முதியவர்கள் அழைத்துச் செல்ல ஆட்கள் இன்றி அநா தைகளாக மாண்டு போனபோதும் குற்றம் இழைத்தவர்க்கு இன்றும் தண்டனை கிடை க்காமல் அவர்கள் நிம்மதியாக மகிழ்ந்திருக்க விட்ட இறைவன் தூணிலிருந்தென்ன துரும்பி லிருந்தென்ன பயன்.

**நிரு — கொக்குவில்**

**இனப்பிரச்சினை தீருமா, தீராதா?**

சம்பந்தன் ஐயாவைக் கேட்க வேண்டிய கேள்வி. 2016 இல் தீரும் என்றார். ஆண்டு தான் தீர்ந்தது. மே தினத்தன்று இரண்டு வாரங்களில் நல்ல முடிவு வரும் என்றார். இரண்டு வாரங்கள் தீர்ந்து போனது பாழாய்ப் போன தீர்வு வரவில்லை.

ஐயா அவர்களே நீங்கள் அரசாங்கத்தை ஆதரி யுங்கள். எதிர்க்கட்சியிலிருந்து கொண்டு அதற் காக எங்களை பகடைக்காய்கள் ஆக்காதீர்கள். அதற்கு தமிழர்கள் நாம் இனித் தயாரில்லை. அதை புரிந்து கொள்ளுங்கள் பிளீஸ்.

**ஈஸ்வர் — வதிரி**

**மதத்தலைவர்கள் ஞானசாரதேரர் போல இருந்தால் எப்படி இருக்கும்?**

புத்தர் சிலை 1500 அடி, இயேசு சிலை 2000 அடி, சிவன் சிலை 5000 அடி இப்படி சிலை கள் உயருமே தவிர மனித மனங்களோ மனிதாபிமானமோ உயராது.

**ஜெயா — வதிரி**

**இன்றைய மணமகன் தலை தாடி அலங் காரங்களுடன் வந்தால்?**

என்ன செய்ய எது அழகில்லையோ அதை தான் இன்றைய சமூகம் விரும்புகின்றது. உள் நாட்டு மாப்பிள்ளை என்றால் ஆயிரம் விசாரிப் புக்கள் நடத்தும் பெற்றோர் வெளிநாட்டு மாப் பிள்ளை என்றதும் அடுத்த பேச்சின்றி சம் மதம் தெரிவிக்கிறார்கள்.

அண்மையில் கூட ஒரு மாப்பிள்ளை போட்டோ பார்த்தேன். பெண் வீட்டிற்கு அனுப்பிய அந்த படத்தில் மணமகன் மதுக் கிண்ணத்துடன் போஸ் கொடுக்கிறார்.




**சகானா — மானிப்பாய்**

**மோடியின் வருகை பற்றி?**

மோடியின் மலையக வருகை இனவாதி களுக்கு ஒரு செய்தி சொல்லி இருக்கிறது.

தமிழர்களை இந்தியா ஒருபோதும் கைவிடாது என்பதுதான் அது. அதன் தாக்கங்களும் அதிர்வு களும் இனவாதிகளிடத்தே இப்போது தெரிய ஆரம்பித்திருக்கிறது. போகப் போக புரிய ஆரம்பிக்கும் சபாஷ்.

**தாரணி — முள்ளியவளை**

**காதல் வந்தால் நீரில் நடப்பாய், காற்றில் பறப்பாய் என்பது பற்றி?**

அவள் உனக்கு அல்வா தருவது நிச்சயம். நீ தற்கொலை செய்வதும் சர்வ நிச்சயம். அதன் பின் நீ ஆவி. உன்னால் நீரில் நடக்க முடியும், காற்றில் பறக்கவும் முடியும்.

**தர்சன் — சங்கானை**

**காதலித்த பெண்ணை தான் கட்டாயம் திரு மணம் செய்யணுமோ?**

இன்னொருத்தன் காதலித்த பொண்ணு உனக்கு மனைவியாக வருவாள் பரவாயில்லையா?

**கலா — உடுவில்**

**பிள்ளைகள் குடும்பத்தை நிர்வாகம் செய் யும் பெற்றோர்கள் பற்றி?**

வண்டியை சரியாக ஓட்டாவிட்டால் வாங்கித் தானே ஆகவேண்டும்.

**கம்சன் — வற்றாப்பளை**

**காதல் என்பது எதுவோ?**

உரிக்க உரிக்க எதுவுமே இருக்காது. அது தான் வெங்காயம்.

**ஆதவன் — தெல்லிப்பழை**

**ஈழத்து திரைப்படங்கள் பற்றி?**

அன்புக்கினிய எம் இளைஞர்களே! ஈழத்து சினிமா என்பது ஒரு தனி அடையாளத்துக் குரியது.

தயவு செய்து அதை தென்னிந்திய பாணிக்கு மாற்றிவிடாதீர்கள். எங்கள் அடையாளங்கள் அழிக்கப்பட்டதில் அதுவும் ஒன்று.

**பிரகாஷ் — மிருசுவில்**

**காதலித்து ஏமாற்றுபவர்களுக்கான தண் டனை?**

ஏமாந்தவர்களின் விருப்பத்திற்கேற்ப வழங்கு வது நல்லது. நானும் ஒரு ஐந்தாறு பேருக்கு தண்டனை வழங்க சந்தர்ப்பம் வரும்.

**அனோஜா — உடையார்கட்டு**


**பெற்றோரை மதிக்காத பிள்ளைகள் பற்றி?**

அந்த பிள்ளைகள் ஒரு நாள் பெற்றோர் ஆவார்கள். அப்போது தங்களை பெற்றவர் களை புரிந்து கொள்வார்கள். இப்போது அவர்களை விட்டுவிடுங்களே.


**ஜெகன் — சுழிபுரம்**

**உங்கள் காதலை பற்றி?**

காதலுக்கு கருமாதி செய்தேன்- அதனால் மனைவிக்கு மரியாதை செய்து கொண்டிருக் கிறேன்.



# கவிதைக் கலசம்



## தந்தை
உயிரிலே ஊஞ்சல் கட்டும்
இறைவன்

## தாய்
உன்னைப் படைப்பதால்
பெண்பாலாகிப் போன பிரமன்

## கணவன்
தாமரையாய் நீ மலர
சேறாகிப் புதைபவன்

## அண்ணன்
நீ ஒளிர இருட்டில் உருகும்
மெழுகுவர்த்தி

## குழந்தை
எந்தப் பக்கத்தைப் புரட்டினாலும்
சலிக்காத புத்தகம்

## பெண்
உளி கொண்டு தட்டினால் சிலை
நீ முட்டி மோதினால் எரிமலை

## ஆண்
படித்தாலும் பலராலும்
புரியாத புதிர்

நரா
நவதர்சினி

## பலன்கோடி!

தன்னை உணர்ந்தவன் ஞானி
தனக்கென வாழாதவன் யோகி
அளவோடு உண்பவன் போகி
அளவுக்கு மிஞ்சினால் ரோகி
இருந்தும் இல்லையென்பான் பாவி
இல்லார்க்குக் கொடுப்பான் பாரி
எதற்கும் பயந்தவன் பேடி
ஏமாற்றி வாழ்பவன் கேடி
இருப்பவர் வாழிடம் மாடி
இல்லாதோர் இருப்பிடம் சேரி
குடியைக் கெடுக்கும் பெரும் குடி
குடிகெடுத்தால் தலையில் விழும் இடி
எக்காலும் நன்னூல்களை வாசி
எப்போதும் வாழ் உண்மை பேசி
ஆத்திரம் வரும்போது யோசி
அதனால் வரும் பலன் கோடி

கந்தபேரின்பம்
தீவான்

## அனவரதம்

விழி கனத்த சுமையோடு
தெருவழி நடக்கிறோம்
தேசம் கதற தேடி வந்த
விஷங்களெல்லாம்
தேரில் ஏறிச் சவாரி செய்தன
மூடர் நாமென முணகியும்
முட்டியும் கறைகளால்
கதறினோம்
முள்ளில் வீசிய துவேசவேசம்
எதையும் அள்ளித் தரமாட்டீர்
என்றுணர்ந்து ஆவேசப்பட்டோம்
அல்லும் பகலும்
சொல்லொணாத் துன்பம்
சோராமலும் எம் இடம் சேராமலும்
தவித்தோம் செத்தவராய்
எம் சொத்துயிராம் சிதறிப் பாதி
சிந்திய நீரை தெருவில் சிதறி
செந்நீர் கழுவி சென்றோம்
நரைபுரண்டு நாரி வலித்து
பாரில் பாதியாய் வந்தோம்
கூடி வந்தும் கூட்டி வந்தும்
கொடுத்த உறவினை
தேடியும் கிடைக்கவில்லை
எத்தேசமும் பேசவில்லை
நாடி நரம்பறுந்து நாளை நாளை
என்று கோழையாய் வாழ்கிறோம்
ஏழை எம் ஈழத்தமிழன்
இன்வாதப் பூச்சாண்டித் தொட்டிலில்

யாழ்.வாகீஷ்
ஓட்டுசுட்டான்

## வஞ்சகன் நெஞ்சிலிருப்பது

இணங்கிப் போவதும்
இசைந்து போவதும்– எமக்கு
பழகிப் போய்விட்டதோ!

கசங்கிப் போகும் காகிதமாய்
தமிழர் நிலை மாற
உறங்கிக் கிடக்கும் எம் தலைமையே!

முடங்கிப் போவது ஒரு நிலை
அடங்கிப் போவது இன்னொரு நிலை
மடங்கிப் போவது வேறொரு நிலை

இதில் உம் நிலை எதுவோ?
ஓ... மடங்கிப் போதல் தானோ?

விரிந்து கிடக்கும் நந்திக்கடலில்
சத்தியம் செய்யுங்கள்
உங்கள் பேச்சில்
உள்ளொன்று புறமொன்று
இல்லையென்று!

தெற்கு தலைமையிடம்
இரண்டுநாள் விடுப்பெடுத்து
வடக்கு வந்து விளக்கேற்றுகிறீர்
ச்சீ... பிழைப்பு இதுவொரு பிழைப்போ!

கொத்தாய் இறந்த எம்
அத்தனை ஆத்மாக்களும்
குருதி தோய்ந்த மணலை அள்ளி
உம் தலையில் கொட்டி சபிக்கிறோம்
உம் சந்ததி விருத்தி பெறா!
உமக்கென்றொரு சரித்திரமிரா!
இது சத்தியம் சத்தியம்

மாவை. நா.கஜேந்திரன்

# மௌனத்தின் தேடல்– 353



## தடை மீறிப் போராடு

கம்பி வேலி நடுவே
காத்து நிற்கும் உறவுகள்
கலைந்து போன கனவுகளோடு
கண்ணீர் பொங்கும் விழிகள்
உண்மையை யார் உணர்வார்
ஊர்போக யார் துணை வருவார்
காத்துக் காத்து காலம் போனது
கண்ணீர் தான் மீதமானது
உறங்காது ஏங்கும்
உம் விழிகள்
ஊர் போகத் துடிக்கும்
உம் கால்கள்
கரையேற வழியின்றி
கலங்கும் உள்ளங்கள்
தடைபோட யாரிங்கே
தடை மீறிப் போராடு

சி.திவ்வியா
யா.ப.மெ.ம.வி

## யார் வருவார்?

ஊர் விட்டு உறவு விட்டு
ஊனமாகி உயிர் பாதி
மரணிக்க நாதியற்று
நடு தெருவில் விட்டனரோ
உலகம் நயத்தோடு கைகோர்த்து
பேரினத்துக்கு பிச்சை இட்டதுவோ
இல்லை நீர் வாழ்ந்த பூர்வீகம்
புதையுண்டு முள்வேலி ஆகியதோ
தமிழினமே உன்னைத்
தலை நிமிர்த்த யார் வருவார்?

வா.சாரங்கன்
முத்தையன்கட்டு

## சிதைவின் சிரிப்பூ

முட்கம்பி வேலிக்குள்
முடங்கிக் கிடந்தோம் அகதிகளாய்
வெளிவந்தும் அடங்கிக் கிடக்கிறோம்
அடிமைகளாய்
சொந்தக் காணி இன்றி வீதியில்
சொந்த பந்தம் இன்றி தனிமையில்
உரிமைகளையும் உயிர்களையும் புதைத்தாலும்
எம் புன்னகையை புதைக்க முடியாது
சிரிப்பினை மறந்து சினம் கொண்டால்
சிதைந்துவிடும் பல ஊர்களும் உயிர்களும்

கில்பேட்
வாணர் குடியிருப்பு

## எம் உறவுகளைத் தேடுகின்றோம் பரந்தாமா

எம் உறவுகளைத்
தேடுகின்றோம் –பரந்தாமா
உம் உறவுகளை எவரேனும்
ஒழித்துவிட்டால்
உளத் திடத்தோடு இருப்பீரோ
பரந்தாமா
பெற்றெடுத்த பிள்ளையையும்
கரம்பிடித்த கணவரையும்
காணத் தவிக்கும் உறவுகளின்
கதறல்கள் புரியவில்லையா
பரந்தாமா
தந்தை முகம் காணாமல்
தாயின் மடியில் தவழாமல்
பரிதவிக்கும் குழந்தைகளின்
பாசம் தேடும் கதையிதுவே
பரந்தாமா
கண்கள் திறந்து பாராயோ
இக்கதையின் முடிவைக் கூறாயோ?
காணத் தவிக்கிறோம்
எங்கள் உறவுகளைத்தான்!

சி.அபிலாசினி
யா.வ.ம.ம.க.

## பட்டியில் அடைத்த மனிதர்கள்

முள்ளிவாய்க்காலில் இருந்து
முள்வேலிக்குள் அடைக்கப்பட்டு
முன்பேதும் இல்லாத வாழ்க்கையை
முனைப்புடன் நோக்குகின்றோம்
வெளியில் செல்ல வழியில்லை
விழுந்து படுக்க இடமில்லை
வேதனையில் மனம் துடிக்கிறது
வரும் காலத்தை எண்ணி
திகைப்பும் வருகிறது

பா.கலாதேவி
யா.ச.இ.க.

## தவிப்பு

ஏங்கித் தவிக்கும்
எங்கள் முகங்களின்
மூச்சுக் காற்றில் வாழும்
ஒவ்வொரு வலிகளையும்
சுற்றியுள்ள
கம்பி வேலிகளை
கேட்டால் சொல்லும்
ஆனால்
எங்களை வைத்து
பிழைப்பு நடத்தும்
எங்கள் முகம்
பார்க்க முடியாத
அவர்களுக்கெங்கே
புரியும்

தேன் நிலா,நல்லூர்

## அடம்பன் கொடியாய் திரண்டு எழுங்கள்

முள்ளிவாய்க்கால்
போரில் அகப்பட்டு
முள்வேலிகளால்
முடக்கப்பட்டு
பட்டினியால் வாடிய
உறவுகளே
உங்கள் ஆறாத
துயரினை
துடைத்தெறிய
அடம்பன் கொடியாய்
திரண்டு எழுங்கள்

சி.பிரியங்கா
மட்டுவில் தெற்கு

# மௌனத்தின் தேடல் –354



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.


எனும் முகவரிக்கு 24.05.2017ஆம்
திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில்
அமையும் கவிதைகளுக்கே
முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -



சோனியா காந்தி



ராகுல் காந்தியுடன்...

# சோனியா காந்திக்கு உடல்நலக் குறைவு ஆட்டம் காணும் காங்கிரஸ் கட்சி

காங்கிரஸ் கட்சிக்கு இனி எதிர்காலமே இல்லை என்று கருதப்பட்ட காலத்தில் கட்சித் தலைவரானவர் சோனியா காந்தி. எதிர்க்கட்சிகளை ஒன்று திரட்டி பி.ஜே.பியை எதிர்த்து, காங்கிரஸை ஆட்சியில் அமரவைத்தார். நேருவுக்குப் பிறகு, தொடர்ந்து இரண்டாவது முறையாக யாரும் பிரதமரானது இல்லை என்ற நிலையை மாற்றி மன்மோகன் சிங்கை இரண்டாவது முறையாக அரியணையில் அமர வைத்தார்.

தற்போது, மீண்டும் காங்கிரஸுக்கு எதிர்காலம் இல்லை என்ற நிலை ஏற்பட்டுள்ளது. சோனியா காந்தியால் மட்டுமே எதிர்க்கட்சிகளை ஒருங்கிணைத்து பி.ஜே.பியின் வெற்றிக்குத் தடை போட முடியும் என்கிற குரல்கள் எதிரொலிக்கின்றன. ஆனால் களத்துக்கு வரவேண்டிய சோனியா காந்தி உடல் நலக்குறைவால் துவண்டுபோயிருக்கிறார்.

நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து பல மாநில சட்டமன்றத் தேர்தல்களிலும் காங்கிரஸ் தோல்வியையே சந்தித்துள்ளது. வாழ்வா, சாவா என்று எதிர்பார்க்கப்பட்ட உத்தரப்பிரதேசம் உள்ளிட்ட ஐந்து மாநில சட்டமன்றத் தேர்தல்களிலும் சோனியா காந்தி பிரசாரத்துக்கு வரவில்லை. ஆனால், உத்தரப்பிரதேச தேர்தலுக்குப் பிறகு சோனியாவின் உடல் நிலையில் முன்னேற்றம் ஏற்பட மீண்டும் சுறுசுறுப்பானது காங்கிரஸ்.

### ஜனாதிபதி தேர்தல்!

குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜியின் பதவிக்காலம், வரும் ஜூலையுடன் முடிகிறது. புதிய குடியரசுத் தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் விரைவில் அறிவிக்கப்பட உள்ளது. மக்களவையில் பெரும்பான்மை உறுப்பினர்கள் மற்றும் வட இந்தியாவில் பெரும்பாலான மாநிலங்களில் ஆட்சி அதிகாரத்தில் இருந்தாலும்கூட, பி.ஜே.பிக்கு குடியரசுத் தலைவர் தேர்தலில் பெரும்பான்மை பெற நூலிழை இடைவெளி இருக்கிறது. எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒன்று சேர்ந்தால், பி.ஜே.பியின் குடியரசுத் தலைவர் கனவு தவிடுபொடியாகிவிடும். இதற்கான காய் நகர்த்தலில் மிகத் தீவிரமாக இறங்கிய சோனியா, சரத்பவார், சீத்தாராம் யெச்சூரி, டி.ராஜா, லாலு பிரசாத் யாதவ், நிதிஷ் குமார், உமர் அப்துல்லா உள்ளிட்ட பி.ஜே.பிக்கு எதிரணியில் உள்ள தலைவர்களைத் தொடர்ச்சியாகச் சந்தித்து வந்தார்.

இந்நிலையில்தான், சோனியாவுக்கு மீண்டும் உடல்நலக் குறைவு ஏற்பட்டுள்ளது. மே 7 ஆம் திகதி இரவு, உடல் நலக் குறைவு காரணமாக டில்லியில் உள்ள வைத்தியசாலை ஒன்றில் அனுமதிக்கப்பட்டார். அவருக்கு 'உணவு ஒவ்வாமை' என வைத்தியசாலை நிர்வாகம் தெரிவித்தது. ஆனால் ஒரு வாரத்துக்கும் மேலாக வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்றார் சோனியா. வைத்தியசாலையில் அவர் அனுமதிக்கப்பட்டு அவர் சிகிச்சை பெறுவது இது முதல்முறை அல்ல... கடந்த 8 மாதத்தில் இது நான்காவது முறை.

### புற்றுநோயா?

சில ஆண்டுகளுக்கு முன்பு அமெரிக்காவில் சிகிச்சை பெறுவதற்காக சோனியா காந்தி சென்றிருந்தார். அங்கு அவருக்கு அமெரிக்கவாழ் இந்திய வைத்தியர் தத்தாத்ரேயடு நோரி தலைமையிலான வைத்தியர்கள் சிகிச்சை அளித்தனர். தத்தாத்ரேயடு, புற்றுநோய் சிகிச்சைக்கான வைத்தியர். சோனியாவுக்கு என்ன நேர்ந்தது, என்ன சிகிச்சை அளிக்கப்பட்டது என்பது எல்லாம் ரகசியமாகவே இருந்தன. ஆனாலும், சோனியாவுக்குக் கர்ப்பப்பை வாய் புற்றுநோய் இருந்ததாகவும் இதற்குச் சிகிச்சை பெறவே அமெரிக்கா சென்றதாகவும் தகவல்கள் வெளியாகின. அமெரிக்காவில் சோனியாவுக்கு கர்ப்பப்பை அகற்றும் சிகிச்சையும் கீமோ, ரேடியேஷன் சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும் சொல்லப்பட்டது. ஆனால், காங்கிரஸ் கட்சி தரப்பில் இருந்து இதுவரை எந்தவொரு அதிகாரபூர்வ தகவலும் இல்லை.

அதில் இருந்து தொடர் மருத்துவக் கண்காணிப்பு, சிகிச்சையிலேயே சோனியா காந்தி இருந்து வருகிறார். இதுதவிர, சோனியா காந்திக்கு ஆஸ்துமா, எலும்பு தொடர்பான பிரச்சினைகளும் உள்ளன. இதனால், அரசியல் மற்றும் பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பதைத் தவிர்த்து வருவதாகக் கட்சியினர் சொல்கின்றனர்.

### அரசியல் எதிர்காலம்!

வரும் குடியரசுத் தலைவர் தேர்தலில் மட்டுமல்ல... 2019இல் நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலிலும் பி.ஜே.பியின் வெற்றிக்குத் தடைபோட சோனியா காந்தியால் மட்டுமே முடியும் என்பது காங்கிரஸ் தொண்டர்கள் மட்டும் அல்ல, அனைத்து எதிர்க்கட்சிகளின் கருத்து. சோனியா சொன்னால் எல்லோரும் ஓர் அணியில் திரள்வார்கள் என்பதுதான் மம்தா உட்பட பல கட்சித் தலைவர்களின் கருத்தாக இருக்கிறது. ஆனால் தொடர் உடல்நலக்குறைவு அவரை ஆட்டிப் படைக்கிறது.

சோனியாகாந்தி மீண்டும் அரசியல் களத்துக்கு வருவாரா என்பதற்கான கேள்விக்குப் பதில்சோனியாவால்கூட இப்போதைக்கு சொல்ல முடியாது என்பதே உண்மை!

**ஜுனியர் விகடன்**

# வெடிக்கும் ரஜினி இரகசியம்!



"போர் வரும்போது களத்தில் இறங்குவோம்..." "இங்கே சிஸ்டம் கெட்டுக் கிடக்கிறது... போர் வரும்போது களத்தில் இறங்கு வோம்... நான் தமிழனா என்ற தரமற்ற விமர்சனங்கள் எனக்கு வருத்தம் தரு கின்றன. நான் பச்சைத் தமிழன்..."

ஐந்து நாட்கள் நடந்த ரசிகர்களுடனான சந்திப்பில், முதல்நாள் மைக் பிடித்துப் பேசினார் ரஜினி. அவரது அரசியல் பிரவேசம் பற்றிய யூகங்களும் விமர்சனங்களும் நாளுக்கு நாள் அதிகரித்தன. மீண்டும் மைக் முன்னால் வந்த ரஜினி, மேற்கண்டவாறு பேசி யூக நெருப்பில் இன்னும் நெய் வார்த்திருக்கிறார். 'இது அரசியலுக்கான அஸ்திரமா அல்லது, ரசிகர்களைக் கட்டிப் போடும் தந்திரமா?' என விவாத மேடைகள் களை கட்ட ஆரம்பிக்கும். ஆனால், இந்தச் சந்திப்புகள் அவரின் ரசிகர்களை திடீர் உற்சாகத்தில் ஆழ்த்தி இருப்பது நிஜம்.

### விழுப்புரம் மாவட்ட ரஜினி ரசிகர்கள்

"தலைவர் வருவதற்கு முன்னாடியே 'தலைவர் கையைப் பிடிக்கக் கூடாது, காலில் விழக் கூடாது, அவர் கன்னத்தைக் கிள்ளவோ, முத்தம் கொடுக்கவோ கூடாது, கட்டிப் பிடிக்கவோ... செல்ஃபி எடுக்கவோ கூடாது... அவருகிட்ட வளவளனு பேசக் கூடாது' என்று நிறைய இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் குடுத்தாங்க. தலைவர் முதல்நாள் பேசிய வீடியோ காட்சியைக் காட்டினாங்க. தலைவர் வழக்கத்தைவிட ரொம்ப உற்சாக மாக, அக்டிவா இருந்தாரு. குழந்தைங்க வந்தா அவங்கள மடியில் தூக்கி உட்கார வெச்சுக்கிட்டாரு. வெளியில வரும்போது எங்கள் வாழ்நாள் கனவான, தலைவரு கூட எடுத்த போட்டோ எங்க கையில் இருந்துச்சு."

### நெல்லை மாவட்ட ரஜினி ரசிகர் மன்றத் துணைத் தலைவர் தாயப்பன்

"போட்டோ எடுக்க நெருங்கினதும், 'தலைவரே... நீங்க அவசியம் அரசியலுக்கு வரணும்'னு சொன்னேன். அவர் சிரிச்சுக்கிட்டே மேலே பார்த்துக் கையைக் காட்டினார். நிச்சயமா அவர் தனிக் கட்சியைத் தொடங்குவார். அரசியல் வெற்றிடத்தை நிச்சயம் தலைவர் நிரப்புவார்.

### "தேனி மாவட்ட ரஜினி மன்றத் தலைவர் புஷ்பராஜ், செயலாளர் பொன்.சிவா

"அரசியல் என்ட்ரி பற்றி அவருடைய முதல் நாள் பேச்சிலேயே பதில் சொல்லிவிட்டார். அதனால், நாங்கள் எதையாவது சொல்லி அவரைக் குழப்ப நினைக்கவில்லை. தமிழக அரசியலில் தற்போதுள்ள குழப் பமான சூழலில் சுப்பர் ஸ்டார் என்ட்ரி ஆகவேண்டும் என்று பொதுமக்கள் நினைப்பதுபோலவே நாங்களும் நினைக்கிறோம், அவ்வளவுதான்."

### குமரி மாவட்ட ரசிகர்கள்

'பல ஆண்டு காத்துக்கிடந்து சாமி தரிசனம் செய்த உணர்வுதான் இருக்கிறது. தலைவர் என்ன முடிவெடுத்தாலும் அவர் பின்னால் நாங்கள் நிற்போம். தலைவர் அரசியலுக்கு இதுவரை வராத காரணத்தால் நாங்கள் பல்வேறு கட்சியில் இருக்கிறோம்.

தலைவர் அரசியலுக்கு வந்ததும் ரசிகர்கள் அனைவரும் ஒன்றிணைந்து மிகப் பெரிய கூட்டமாக மாறுவோம். மிகப் பெரிய மாற்றம் தமிழகத்திலே நிகழ இருக்கிறது."

## ஈழத்தமிழருக்கு இந்தியா தந்த பரிசு

# "ஏமாற்றம்"




முகத்திற்கு ஓங்கி அடிவயிற்றில் குத்தும்' தமது கூர்மையான இராஜதந்திரத்தை, புத்தர் ஞானம் பெற்ற பௌர்ணமி தினத்திலும் சிங்கள ஆட்சியாளர்கள் நடத்தி இருக்கிறார்கள்.

சர்வதேச பௌத்த வெசாக் தின நிகழ்வுக்காக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மேற்கொண்ட இலங்கைப் பயணத்தின் போது சிங்கள ஆட்சியாளர்கள் வடிவமைத்த காட்சிகள் ஒவ்வொன்றும் அரசியல் அர்த்தங்கள் கொண்டவை.

இந்திய வம்சாவளியைச்சேர்ந்த மலையகத் தமிழர்கள் மத்தியில் மோடியை உரையாற்ற வைத்து, இலங்கை-இந்திய உறவெனும் அரூபத்துக்குத் தங்க முலாம் பூசியிருக்கிறது இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசு.

முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை நிகழ்ந்த மாதத்தில் இலங்கைக்குச் சென்ற இந்தியப் பிரதமர், அந்த வரலாற்றுத் துயரம் குறித்த சிறுசொல்லைக்கூட எங்கும் உதிர்க்கவில்லை.

காலம்காலமாக இந்திய எதிர்ப்புவாதத்தின்பெயரால் சிங்களவர்கள் கொன்ற ஈழத்தமிழர்களின் உரிமைப்பிரச்சினையைத்தற்போதைய இந்திய அரசும் பொருட்படுத்தவில்லை என்பதைத் தான் மோடியின் இந்த மௌனம் உணர்த்துகிறதா? புவியியல்ரீதியாக கேந்திர முக்கியம் கொண்ட ஈழத்தமிழர்களை, தீண்டத்தகாத ஒரு இனமாகவே இந்தியப் பெரு நாடு இன்னும் பார்க்கிறதா?

சீனாவில்நடந்த பட்டுப்பாதைக் கூட்டத்தொடரை இந்தியா நிராகரித்திருந்த சூழலில், அந்தக் கூட்டத்தில் கலந்துகொண்ட இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு முதல் இருக்கை வழங்கப்பட்டிருக்கிறது.

மோடியைஇலங்கைக்கு அழைத்து, அடுத்த நாளே சீனாவோடு கைகுலுக்கினார் ரணில். சிறிமாவோ பண்டாரநாயக்கவின் காலத்திலிருந்தே சீனாவோடு சிங்களத் தலைவர்களுக்கு இருக்கும் உறவு ஆழமானது.

அந்த உறவின் நிமித்தம் இந்தியாவுக்கு எழும் கோபத்தை, காட்சிமயமாக்கும் வைபவ அரசியலில் காணாமல் செய்து விடுவதில் சிங்களவர்கள் வல்லவர்கள். அதுவே மோடியின் பயணத்தில் நிரூபணமாகி இருக்கிறது.

இந்திய மக்களிடம் இருக்கும் இலங்கை மீதான எதிர்ப்பையும் மிகலாவகமாகத் தோற்கடித்து விடுகிற இந்த வித்தை, அவர்களின் அரசியல் கலாசாரத்தின் நீட்சி. கூடவே, ஈழத்தமிழர் களுக்கு ஆதரவாக இந்தியா திரும்பி விடக்கூடாது என்கிற பதற்றம். மொத்தத்தில், இந்தியாவை அணைப்பது போல் அணைத்துக் கொண்டே, சீனாவை முத்தமிடும் நகர்வு.

மோடி விஜயம் செய்வார் என அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து கடுமையான எதிர்ப்புகள் கொழும்பில் எழுந்தன. மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான எதிர்க்கட்சி அணியின் உறுப்பினர்களில் ஒருவரான விமல்வீரவன்ச, மோடிக்குக் கறுப்புக்கொடி காட்டவேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். இதை எதிர்க்கட்சியின் எதிர்ப்பு' என்று மட்டும் புரிந்துகொள்ளக் கூடாது.

இந்தியத் தலைவர் ஒருவரின் வருகையை எதிர்க்கும் அளவுக்குச் சிங்கள அரசியலாளர்கள் இருக்கிறோம்' என்பதையே விமல் வீரவன்ச மூலம் இந்தியாவுக்கு உணர்த்த விரும்பியது இன்றைய இலங்கை அரசாங்கம்.




ஆனால், மகிந்தவைச் சந்தித்து இந்தியாவுக்கு வரும்படி தனிப்பட்ட ரீதியாக அழைப்பு விடுத்தார் மோடி. இந்த அரசியல் சாணக்கியத்தில் மகிந்த - மைத்திரி என இரண்டாக உடைந்து நிற்கும் இலங்கை சுதந்திரக்கட்சி ஒன்றாகிவிடுகிறது.

ஒரு தேரை பின்னின்று தள்ளுபவர்களுக்கும் முன்னின்று இழுப்பவர்களுக்கும் எப்படி இலக்கு ஒன்றோ, அதுபோலவே மோடியை அழைக்கவும் செய்தனர் எதிர்க்கவும் செய்தனர்.

இந்திய ஆதிக்கத்திற்கு எதிராக, தான் நிகழ்த்தும் நாடகத்தில், இந்தியத் தலைவர்களையே பாத்திரமாக்கிவிடும் சிங்கள ராஜதந்திரத்தை இந்தியாவும் உணர்வதாக இல்லை.

'நல்லிணக்க அரசு' என்கிற ஜோடனையின் கீழே, தமிழர்களின் தாயகமான வடக்கு, கிழக்கில் சைவ வழிபாட்டுத்தலங்களை இடித்து அழிக்கும் அநீதியும், ஆக்கிரமிப்புக் குடியேற்றங்களும் தொடர்ந்துகொண்டிருக்கின்றன.

இந்த வேளையில் தமிழ்த் தலைவர்களுடனான மோடியின் சந்திப்பு முதன்மையோ, முக்கியத்துவமோ பெறவில்லை. சர்வதேச பிரச்சினையின் ஓர் அம்சமாக மாறியிருக்கும் ஈழத்தமிழ் அரசியலை, இந்தியப்பெருங்கடல் பிராந்தியத்தின் பிரதானமான இந்திய நாடு தவிர்த்தோடவே முடியாது.

இந்தப் பிராந்தியத்தில் தனது நேச சக்தியான ஈழத்தமிழ் மக்களின் நீதிக்காக இந்தியா செயற்படவேண்டிய கட்டாயத்தைக் காலம் உருவாக்கி இருக்கிறது.

இந்திய ஆதிக்கத்தின் நீட்சியாகவும் இந்துக்களாகவும் ஈழத்தமிழர்களை உருக்காட்டி, 'அவர்களைக் கொல்வது சொர்க்கத்துக்குச் செல்லும் வழி' என்று சிங்களவர்களுக்குப் போதிப்பவர்கள். பௌத்த மரபின்படி மன்னனுக்கு எழுந்து நிற்காத புத்த பிக்குகளை ஒரு இந்துவான மோடி சிரத்தையோடு வணங்கினார்.

இந்தியாவை வெறுத்து ஒதுக்கும் வரலாற்றின் கசப்புகளோடு, ஒரு இந்தியத் தலைவரை சிங்கள பிக்குகள் எதிர்கொண்டார்கள். சிங்களப் பாரம்பரியத்தில் கூர்மையானதாகக் கடைப்பிடிக்கப்படும் இந்திய எதிர்ப்புவாதத்தோடு மோடியை அவர்கள் கடந்தார்கள். ஈழத்தமிழ் மக்களோ, 'இந்தியப் பிரதமர் தமது பிரச்சினைக்குத் தீர்வாக என்ன கூற இருக்கிறார்' என எதிர்பார்த்தார்கள். அதுவும் வெறுங்கனவாய் கலைந்தது.

இந்நிகழ்வு வரைக்கும் ஈழத் தமிழ் மக்களின் கையில் இந்தியா தந்திருக்கிற பரிசுக்கு நிரந்தமான பெயருண்டு. ஏமாற்றம்.

# ஒட்டாத உறவுகள்!



சந்திரனின் மனம் மிகுந்த குழப்ப நிலையில் இருந்தது. மனைவி பிள்ளைகளோ ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தனர். புதிய உறவினர்களின் வருகையை. மனைவி, பிள்ளைகளுக்கு வருபவர்கள் புதிய உறவினர்கள். ஆனால் சந்திரனுக்கோ அவர்கள் விடுபட்ட மிகப் பழைய உறவினர்கள். அவர்களின் வருகை சந்திரனுக்கு எவ்வித மகிழ்ச்சியையும் கொடுக்கவில்லை. மாறாக பழைய வடுக்களையே கிளறிய வண்ணம் இருந்தது. வீட்டின் பின் மாமரத்தின் கீழ் அமர்ந்தவனின் மனம் பல ஆண்டுகள் பின்னோக்கி ஓடியது.

அன்று சந்திரனின் குடும்பத்தில் அவன், அவனது அம்மா, அப்பா, சகோதரர்கள் இருவர் என அளவான குடும்பமாக் இருந்தது. ஆனால் சந்திரனின் தாயாரது இளைய சகோதரனின் குடும்பமும் சந்திரனது குடும்பத்துள் ஒன்றாகவே காணப்பட்டது.

“ சந்து நேரம் போய் விட்டது. அம்மா தேடப் போறா... வீட்டுக்குப் போ” மச்சாளின் குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தான் சந்திரன். உண்மையிலேயே நேரம் போய் விட்டதை மாலைநேர மம்மல் பொழுது அவனுக்கு உணர்த்தியது. ஆனாலும் தாய்மாமனின் குரல் அவனை மேலும் உற்சாகமாக வேலை செய்யத் தூண்டியது. வாழைகளுக்கு நீர் பாய்ச்சிக் கொண்டிருக்கும் மாமாவுக்கு உதவியாக பாத்திகளில் வரும் நீரை வாழையின் அடிகளுக்கு போகும் வண்ணம் கால்களால் தள்ளிக் கொண்டிருந்த அவனுக்கு மச்சாள் வீட்டுக்குப் போக நேரமாகிவிட்டது என்று கூறியபோது “அவனை ஏன் கலைக்கிறாய்? இதுவும் அவன்ர வீடு தானே நேரம் போனால் சாப்பாட்டைக் குடு அவன் இங்கேயே நிக்கட்டும்” மாமாவின் உரிமையான பேச்சு சந்திரனை வானத்தின் உச்சிக்கே கொண்டு போனது.

சந்திரனுக்கும் இதுவரை தனது வீட்டுக்கும் மாமாவின் வீட்டுக்கும் எந்த வித்தியாசமும் தெரிவதில்லை. சொல்லப் போனால் தனது வீட்டில் நிற்பதைவிட மாமா வீட்டில் நிற்பதே அதிகம். எந்த விசேட நாட்களிலும் மாமா வீட்டிலேயே நின்று கொள்வான்.

மாமா உறவுகளை எப்படி வைத்திருப்பாரோ அப்படித்தான் சொத்துப் பத்துக் களையும் வைத்திருப்பார். பெரிய மாமா வுக்கும் மாமாவுக்கும் சேரவேண்டிய காணி ஒன்றினை பெரிய மாமா உயிருடன் இருக்கும் காலத்திலேயே தனது பெயருக்கு மாற்றி விட்டார். இந்த விடயம் தெரியாத பெரியமாமி தங்களது பராமரிப்பில் இருந்த அந்தக் காணியை ஊரில் வேறு ஒருவருக்கு விற்பதற்கு ஆயத்தமாக அது பெரிய சண்டையானது.

சந்திரனின் அம்மாவுக்கோ தனது சின்ன அண்ணாமீது அளவுகடந்த பாசம். இதனால் மாமா வீட்டுடன். சேர்ந்து பெரிய மாமியுடனும் காணி வேண்ட வந்த வர்களுடனும் சண்டை பிடித்து ஊரில் கணிசமானவர்களுடன் கதை பேச்சு நின்று நிரந்தரப் பகையையும் தேடிக் கொண்டது சந்திரனின் குடும்பம்.

இதனால் சந்திரனின் மற்றைய உறவினர்களின் வீட்டுப் போக்கு வரவும் மட்டுப்படுத்தப்பட்டது. கடைசியில் மாமா வீடே தஞ்சம் என இருந்தது. ஒருநாள் மாமாவின் மரணச் செய்தி வீடு வந்து சேர்ந்தது. செய்தியைக் கேட்டவுடன் சந்தி ரனின் அம்மா அழுத அழுகை மாமா மீதான பாசத்தைக் காட்டி நின்றது. இன்றளவும் அதனைச் சந்திரனால் மறக்க முடியாதிருந்தது. இன்று எந்த மரண வீட்டிலும் அப்படி ஒரு அழுகையை அவன் கண்டதில்லை. உணர்வுகளை வெளிக்காட்டுவ தில் கூட நவநாகரிகம் புகுந்துள்ளது. எழுபத்தைந்து வயது தாண்டியவர்கள் கஷ்டம் தராமல் இறந்து விடவேண்டும் என்று கூட இன்று பலர் சிந்திக்கின்றார்கள்.

மாமாவின் செத்தவீடு காரணமாக சில நாட்கள் மாமா வீட்டிலேயே நின்றான் சந்திரன். மாமா இல்லாத வீட்டில் ஏதோ ஒரு இடைவெளி இருப்பதை அந்தச் சிறு வயதிலேயே அந்தச் சில நாட்களிலேயே உணர்ந்து கொண்டான் சந்திரன். ஆனால் அந்தச் சிறுவயதில் மாமா இல்லாத விடத் தில் சந்திரனின் அப்பாவோ அம்மாவோ அவர்களது குடும்பத்தில் அதிகாரம் செய்து விடுவார்களோ என்கின்ற பயத்தில் அத னைத் தடுக்க மச்சாள்மார் தங்களிடமிரு ந்து ஒதுங்கிக் கொள்கிறார்கள் என்ற உண்மை சந்திரனுக்கு விளங்கவில்லை. அவர்கள் நினைக்கும் அளவுக்கு சந்திர னின் அப்பா, அம்மா இல்லை என்பது மச்சாள்மாருக்கோ சந்திரனின் அத்தைக்கோ விளங்கவில்லை. இதனால் நாளடைவில் பல குற்றச்சாட்டுக்களை கூறியே சந்திரன் வீட்டில் இருந்து விலகிக் கொண்டனர்.

பன்னிரெண்டு வயதில் இவற்றை உணராத சந்திரனுக்கோ அவர்களது பிரிவு மோசமானதாக இருந்தது. வீதிகளில் அவர்களைக் காணும் பொழுதெல்லாம் ஏக்கத்துடன் அவர்களை அவன் மட்டுமே பார்ப்பான். அவர்கள் பார்ப்பதில்லை. காலங்கள் செல்ல வலிகள் மறந்து போக வலிகள் தந்த வடு மட்டும் சந்திரனின் மனதில் படிந்து கொண்டது. நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளால் சந்திரனின் சகோதரர்களும் ஒவ்வொருவராக வெளிநாடு செல்ல சந்திரன் தனிமைக்குள் தள்ளப்பட்டான். மாமா வீட்டுக்காக சில ஊரவர்களுடன் பகைத் திருந்தமையால் வளர வளரத் தனிமையைப் பழகிக் கொண்டவன் பாடசாலைகளிலும் பல்கலைக்கழக த்திலும் நண்பர்களைப் பயந்து பயந்தே தேர்ந்தெடுத்துக் கொண்டான். அவர்களும் விட்டுப் பிரிந்துவிடுவார்களோ என்ற பயத்தில்.

அவனது தனிமை அவனது திருமணத்துடன் மறைந்தாலும் கடந்தகால ஏக்கங்களும் வலிகளும் மறையவில்லை. அதனாலேயே பலருடனும் பெரிதாக ஒட்டிக் கொள்வதில்லை. அற்ப விடயங்களுக்காக சண்டையிடும் உறவுகளும் புரிந்து கொள் ளாத உறவுகளும் அவனுக்கு ஒட்டாத உற வுகளாகவே தொடர்ந்தன. ஒட்டிக் கொள்ள அவன் நினைத்ததுமில்லை. கால ஓட்டத் தில் மச்சாள் குடும்பம் சேர்ந்து கொண்டாலும் பழைய அந்த ஏதோ ஒரு உணர்வு மட்டும் இல்லாமலேயே இருந்தது. இருந்தும் மனைவிக்காகவும் தன்னைப்போல் இப்போதிருக்கும் சின்னப் பிள்ளைகளும் பாதிக்கப்படக்கூடாது என்ற எண்ணத்தில் எதிர்பார்ப்புக்கள் இன்றிய உறவினை ஏற்படுத்திக் கொண்டான். சகோதரர்கள் வெளிநாடு சென்றதைப் போலவே ஒரு மச்சாள் திருமணம் முடித்து வெளிநாடு சென்றிருந்தார். அவரது திருமணமோ அல்லது வெளிநாடு சென்றதோ எதுவும் சந்திரனுக்கு தெரியாது. அத்துடன் அவர் போர்க்காலங்களிலும் சரி எக்காலங்களி லும் இதுவரை தொடர்பில் இல்லை. ஏன் சந்திரனின் பெற்றோரின் இறப்பில்கூட தொடர்பு கொள்ளவில்லை.

தற்போது திடீரென அவர்கள் வெளிநாட்டில் இருந்து பிள்ளைகளுடன் வருவதாகவும் சந்திரனின் வீட்டுக்கும் வரப்போவதாகவும் தகவல் வர சந்திரனால் அதனை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. சந்திர னுக்குத் தெரியும் இது நிச்சயம் அத்தையின் வேலையாகத்தான் இருக்கும். வயது போன நேரத்தில் சிலர் சொந்தங்களைத் தேடுவார்கள். இப்பொழுது படுக்கையில் இருக்கும் அத்தையைப் பார்க்கப் போகும் போதெல்லாம் “ அவனுக்கு மோர் பிடிக்கும் ஊத்திக் குடு” என்று சொல்லும் பொழுதெல்லாம் சந்திரன் மனம் இருபத்தைந்து வருடங்கள் முன்னோக்கிச் சென்று விடும். இருபத்தைந்து வருடங்கள் இந்த வார்த்தைகளை ஏன் இழந்தான் என்றும் அவனுக்கு விளங்குவதில்லை.

“அப்பா ஓட்டோ வருகிறது” என்ற மகனின் வார்த்தைகள் சந்திரனை நிகழ் காலத்துக்கு கொண்டுவர வீட்டின் முன் பக்கம் செல்ல முன்னமே சந்திரனின் மனைவியும் பிள்ளைகளும் புதிய, பழைய உறவினர்களை வரவேற்றிருந்தனர். சந்திரனும் ஒப்புக்காக அவர்கள் முன் சிரித்துக் கொண்டிருந்தான். பதில்கள் ஒற்றைச் சொல்லில் வந்து கொண்டிருந்தன. அவனிடத்தில் இருந்து வந்தவர் கள் அவர்களது ஸ்மார்ட் போன்களில் செல்பி எடுத்துக் கொண்டு கிளம்பினர்.

“உங்களுக்கு ஆட்களுடன் கதைக்கிறதென்றால் பிடிக்காது. அதுகள் எவ்வளவு பாசமாக கதைக்குதுகள். கல்லுளி மங்கன் மாதிரி இருக்கிறீங்கள். அந்தச் சின்னப் பிள்ளைகள் பாவம் அதுகளோடையாவது கதைத்திருக்கலாம். மனைவியின் வழமையான புராணம். ஆனாலும் “அந்தச் சின்னப் பிள்ளைக ளோடையாவது” கொஞ்சம் குத்தியது. என்னைப் போல் அவர்களும் பெரியவர்களின் சுயநலங்களால் பாதிக்கப்படுகின் றனர். இருந்தாலும் வேண்டாம். இப்ப டியே இருந்திடுவம் என்ற நினைப்புடன் இருக்க போன் அடித்தது. மனைவியின் கதையில் “ ஆ... பாவங்கள் இவர் இப்படித் தான்” என்று கதைக்கும் பொழுதே சந்திரனுக்கு விளங்கிவிட்டது. யாரோ தனக்கு ஆப்பு வைக்கிறார்கள் என்று. கதைத்து முடியும்வரை மௌனமாக இருந்தான்.

“ அந்தப் பிள்ளையள் அத்தையிட்ட ஏன் சித்தப்பா எங்களோடு கதைக்கவில்லை என்று சொல்லி கவலைப் பட்டதுகளாம்” என்று மனைவி கூறவும் பாசம் பொத்துக்கொண்டு வர அவன் மனைவியையும் கூட்டிக்கொண்டு உடனே அத்தை வீட்டுக்குக் கிளம்பிச் சென்றான். சந்திரனையும் மனைவியையும் கண்ட தும் அவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்க சந்திரனே கதையைத் தொடங் கிக் கதைத்தான். பழைய கதைகளைக் கூறும்போதே அதற்கும் தனக்கும் எந்தத் தொடர்பும் இல்லாதது போலவும் வீடு தேடி வந்தபோது சந்திரன்தான் வடிவா கக் கதைக்கவில்லை போலவும் அவர்கள் கதைக்க சந்திரன் மனைவியை ஆழமாக பார்த்தான். அவன் மௌனமாக இருந்தாள். சந்திரனுக்கோ பொத்துக் கொண்டு வந்த பாசம் பொசுக்கென்று போனது.

சில நாட்களில் அவர்கள் வெளிநாடு சென்றுவிட மச்சாளின் பிறந்தநாளுக்கு வாழ்த்துமட்டை அனுப்பினாள் சந்திரனின் மனைவி. அடுத்த பிறந்த நாளும் வரப்போகிறது. இதுவரை எந்தப் பதிலும் இல்லை. தொடர்பும் இல்லை. சந்திர னின் மனைவி இப்பொழுதெல்லாம் அவர்களைப் பற்றிக் கதைப்பதில்லை. சுட்டமண் ஒட்டாது என்பார்கள். சில உறவுகளும் அப்படித்தான் ஒட்டாத உறவு களாய் ஆனால் இரத்த உறவுகளாய்?

மானிப்பாய் சுதன்

# கை கழுவும் அமெரிக்கா பற்றிப்பிடிக்கும் சீனா

தெற்கு மற்றும் மத்திய ஆசியா மீதான தனது நிர்வாகத்தின் வேறு இலக்குகளை அடைந்து கொள்வதற்காகவே அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெளிநாடுகளுக்கான உதவித் திட்டத்தைக் குறைப்பதற்கு திட்டமிட்டிருப்பது போல் தெரிகிறது.

காலநிலை மாற்றம் போன்ற பல்வேறு திட்டங்களை இலக்கு வைத்தே தனது வரவு செலவுத் திட்டத்தில் வெளிநாடுகளுக்கான உதவிகளைக் குறைப்பதாக ஆட்சிக்கு வரும்போது ட்ரம்ப் தெரிவித்திருந்தார். ஆனால் ஆசியப் பிராந்திய தீவிரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் இந்தியாவுடன் ஒத்துழைப்பு போன்ற வேறு சில திட்டங்களையும் அமெரிக்காவின் தற்போதைய நிர்வாகம் முன்னுரிமைப்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் முன்மொழியப்பட்டுள்ள வரவு செலவுத்திட்டத்தில் தென் மற்றும் மத்திய ஆசியாவைச் சேர்ந்த கேந்திர முக்கியத்துவம் மிக்க நான்கு நாடுகளுக்கு முழுமையான உதவித் திட்டங்களை வழங்குவதையும் இப்பிராந்தியத்தின் அரைவாசிப் பகுதிக்கு சிறியளவிலான உதவிகளை வழங்குவதையும் நோக்காகக் கொண்டிருக்கும் எனக் கூறப்படுகிறது.

அத்துடன் ட்ரம்ப் நிர்வாகத்தின் புதிய வரவுசெலவுத் திட்டமானது அபிவிருத்திக்கான உதவி மற்றும் ஐரோப்பா, யுரேசியா, மத்திய ஆசியா போன்ற நாடுகளுக்கான உதவி (AEECA) போன்ற இரு வகையான உதவித்திட்டங்களையும் நீக்கவுள்ளது. இவ்விரு உதவித் திட்டங்களுக்கும் பதிலாக அமெரிக்காவின் உதவிகள் தொடர்ந்தும் வழங்கப்படவுள்ள நாடுகளுக்கு பொருளாதார ஆதரவு நிதியம் என்கின்ற திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது.

அமெரிக்காவின் வெளியுறவுக் கோட்பாடானது சில அடிப்படை மாற்றங்களைக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. இந்தவகையில், புதிய வரவு செலவுத் திட்டத்தில் ESF என்கின்ற பொருளாதார ஆதரவு நிதியம் என்கின்ற திட்டம் புதிதாக உட்சேர்க்கப்படவுள்ளமையானது, 'ட்ரம்ப் தனது முன்னைய ஆட்சியாளர்களை விட மிகக் குறுகிய காலத்தில் தனது அரசியல் நோக்குகளை அடைந்து கொள்வதற்காக வெளிநாட்டு உதவியைப் பயன்படுத்துவதில் ஆர்வமாக உள்ளார் என்பதையே' சுட்டிக்காட்டுகிறது.


ஏனெனில் இத்தகைய பொருளாதார ஆதரவு நிதியத் திட்டம் என்பது எப்போதும் உண்மையான அபிவிருத்தி விளைவுகளுடன் குறைந்தளவிலேயே தொடர்பைக் கொண்டுள்ளது. அமெரிக்காவில் பரிந்துரைக்கப்பட்டுள்ள 'நிதியாண்டு 2018 ஐ கூர்ந்து அவதானிக்கும் போது, தெற்கு மற்றும் மத்திய ஆசிய நாடுகளுக்கான உதவித் திட்டங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள் இப்பிராந்தியத்தில் அமெரிக்கா தனது நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான இயலுமைகளை ஆச்சரியமளிக்கும் வகையில் குறைத்து மதிப்பீடு செய்வதைக் காண்பிக்கின்றது.

இதற்கும் மேலாக, தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிரா்ந்தியங்களை நோக்கி பாரிய சீன உதவித் திட்டங்கள் காணப்படுகின்ற இந்த வேளையில், அமெரிக்காவின் சிறியளவிலான உதவிகள் இப்பிராந்தியத்தில் அமெரிக்கா தொடர்ந்தும் தாக்குப் பிடிக்க முடியுமா என்கின்ற கேள்வியை எழுப்புகிறது.

**மத்திய ஆசியா மீதான தாக்கங்கள்**

மத்திய ஆசியாவின் ஐந்து நாடுகள் (AEECA) என்கின்ற அமெரிக்கத் திட்டத்தின் மூலம் பயன்பெற்று வருகின்றன. ஆனால் அமெரிக்கா தனது வரவு செலவுத்திட்டத்தில் இத்திட்டத்தை நீக்கவுள்ள நிலையில், மத்திய ஆசியாவில் இது தாக்கத்தைச் செலுத்தும். (AEECA) திட்டமானது பனிப்போருக்குப் பின்னான காலப்பகுதியில் கிழக்கு ஐரோப்பா மற்றும் யுரேசியா போன்ற பிராந்தியங்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக உருவாக்கப்பட்ட திட்டமாகும். உண்மையில் இத்திட்டமானது எதிர்பார்த்த ஆண்டுகளை விட அதிக காலம் நீடித்துள்ளதாக பூகோள அபிவிருத்திக்கான மையத்தால் 2012இல் தெரிவிக்கப்பட்டது.

இவ்வாறான பல்வேறு நிதித் திட்டங்களுடன் அமெரிக்காவின் வெளியுறவுக் கோட்பாட்டை நிர்வகிப்பதென்பது சவாலானதாகும். இந்நிலையில் திட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளமை அமெரிக்கா தனது நிர்வாகத்தை நடத்துவதற்கு இலகுவானதாக இருக்கலாம். இத்திட்டத்தை முடிவிற்குக் கொண்டுவரப் போவதாக பராக் ஒபாமாவின் நிர்வாகம் தனது 2013 நிதியாண்டில் பரிந்துரைத்திருந்தது.



ஆனால் (AEECA) திட்டத்தை முடிவிற்குக் கொண்டு வருவதால் என்ன நடக்கும்? கசகஸ்தான் மற்றும் துர்க்மெனிஸ்தானுக்கான உதவித் திட்டம் முடிவிற்கு வரும். நடுத்தர வருமானத்தைக் கொண்ட நாடாக உலக வங்கியால் இனங்காணப்பட்டுள்ள கசகஸ்தான் அமெரிக்காவின் மட்டுப்படுத்தப் பட்ட உதவியான6மில்லியன்டொலரை இதுவரை காலமும் பெற்றுக் கொண்டுள்ளது.

இதேபோன்று சர்வாதிகாரத்துவ ஆட்சி நடைபெறும் நடுத்தர வருமானத்தைக் கொண்ட நாடாக விளங்கும் துர்க்மெனிஸ்தானுக்கு அமெரிக்காவால் 3.9 மில்லியன் டொலர் உதவியாக வழங்கப்பட்டுள்ளது. இந்த நாடானது வடகொரியாவிற்கு அடுத்ததாக உலகின் இரண்டாவது தனிமைப்படுத்தப் பட்ட நாடு என அண்மையில் கார்டியன் ஊடகத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அமெரிக்காவின் புதிய நிதியாண்டில் இந்த நாட்டிற்கு இதுவரை வழங்கப்பட்ட உதவித் திட்டமும் நீக்கப்பட்டுள்ளமை துர்க்மெனிஸ்தானுக்கு பெரும் பிரச்சினையாக இருக்கும். கிர்கிஸ் குடியரசு, தஜிகிஸ்தான், உஸ்பெகிஸ்தான் போன்ற நாடுகளுக்கான அமெரிக்காவின் உதவித் திட்டமானது பொருளாதார ஆதரவு நிதியம் என்கின்ற திட்டத்தின் கீழ் தொடர்ந்தும் வழங்கப்படும். உஸ்பெகிஸ்தானுக்கான உதவித் திட்டம் முன்னரை விட சிறிதளவு அதிகரிக்கும்.

**வர்த்தகச் செயற்பாடுகள்**

அமெரிக்காவில் புதிய நிர்வாகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ள நிலையில் இதன் வெளியுறவுக் கோட்பாட்டில் பல மாற்றங்கள் எட்டப்பட்டுள்ளன. இந்த வகையில் மத்திய ஆசியாவுடனான வர்த்தகச் செயற்பாடுகள் சிறிதளவில் இடம்பெறும் எனக் கருதப்படுகிறது. மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டு உதவியானது முக்கிய பங்காற்றுகிறது' என ஒபாமா நிர்வாகத்தின் போது அமெரிக்காவின் அனைத்துலக அபிவிருத்தி மையத்தின் ஆசியாவிற்கான உதவிச் செயலராகப் பணியாற்றிய நிசா தேசாய் பிஸ்வால் தெரிவித்திருந்தார்.

மத்திய ஆசியா முழுமைக்குமான அமெரிக்காவின் உதவித் திட்டமானது, 'தீவிரவாதத்தை எதிர்த்தல், பொருளாதாரத் தொடர்பாடலை மேம்படுத்துதல், மனித உரிமைகள் மற்றும் ஜனநாயக ஆட்சிபோன்றவற்றை அதிகரித்தல்' போன்ற பல்வேறு விடயங்களுக்கு முன்னுரிமையளிப்பதாக நிசா பிஸ்வால் குறிப்பிட்டிருந்தார். மத்திய ஆசியப் பிராந்தியம் முழுமைக்கும் ஆப்கானிஸ்தானுக்குமான பொருளாதாரத் தொடர்பாடலானது ஆப்கான் பொருளாதாரத்திற்கு நீண்டகால அடிப்படையில் வலுச்சேர்க்கும் என்பதால் அமெரிக்கா தனது மூலோபாய முன்னுரிமையை அடிப்படையாகக் கொண்டு இதனைத் தொடர வேண்டும்.

**அமெரிக்கா புறந்தள்ளப்படுதல்**

சீனாவின் உதவித் திட்டமானது மத்திய ஆசியா நோக்கி அதிகரித்து வரும் நிலையில் அமெரிக்கா இப்பிராந்தியத்திற்கான தனது நிதியுதவியைக் குறைத்தால் மூலோபாய ரீதியாக அமெரிக்கா பின்தள்ளப்படும். குறிப்பாக சீனாவானது இப்பிராந்தியத்தில் தனது ஒரு அணை ஒரு பாதை என்கின்ற திட்டத்தை அமுல்படுத்துவதற்காக மிகத் துரிதமாக பாரிய கட்டுமானத் திட்டங்களை மேற்கொண்டு வருவதைக் காண முடியும்.

சீனா தனது பட்டுப்பாதைத் திட்டத்தின் மூலம் கசகஸ்தான், துர்க்மெனிஸ்தான், உஸ்பெகிஸ்தான் போன்ற நாடுகளின் ஊடாக புதிய தொடருந்துப்பாதைகளை அமைத்து வருகிறது. அத்துடன் கிர்கிஸ் குடியரசு மற்றும் தஜிகிஸ்தானின் ஊடாக சீனாவிற்கான தரைவழிப் பாதைகளும் அமைக்கப்படுகின்றன. ஆகவே சீனா தனது திட்டத்தை நிறைவேற்றுவதற்காக மத்திய ஆசிய நாடுகளில் பாரிய கட்டுமானத் திட்ட்ங்களை மேற்கொள்ளும் நிலையில், அமெரிக்காவின் சிறியளவிலான உதவிகள் இந்த நாடுகளில் புறந்தள்ளப்படும். அத்துடன் இந்த நாடுகளுடனான அமெரிக்காவின் உறவுநிலையும் எப்போதும் சுமுகமாக இருந்ததில்லை என்பதால் இந்த நாடுகளுடனான தொடர்பாடல் அமெரிக்காவிற்கு சிக்கலை ஏற்படுத்தும்.

**சுகாதாரத் திட்டங்களுக்கான நிதியுதவிகள் குறைக்கப்படுதல்**

மத்திய ஆசியாவை விட தெற்காசியாவானது குறைந்தளவு செழுமை மிக்கது, அதிகளவான மக்களைக் கொண்டுள்ள பிராந்தியமாகும். ஆகவே இந்த நாடுகள் விவசாயம் தொடக்கம் சுகாதாரம் மற்றும் பொருள்ாதார மறுமலர்ச்சி, ஜனநாயகம், ஆட்சி போன்ற பல்வேறு விடயங்களிலும் அமெரிக்காவின் உதவியை நாடியுள்ளன. பல்லாண்டுகளாக இப்பிராந்திய நாடுகளின் சுகாதாரத்திட்டங்களுக்கு அமெரிக்கா பாரிய பங்களிப்பை வழங்கி யுள்ளது.

ஆனால் தற்போது அமெரிக்காவின் ஜனாதிபதியான ட்ரம்ப் தனது அடுத்தாண்டு வரவு செலவுத் திட்டத்தில் இந்த நாடுகளுக்கான சுகாதார உதவித் திட்டங்களை அதிகளவில் குறைத்துள்ளார். அமெரிக்காவின் கடந்தாண்டு வரவு செலவுத் திட்டத்தில் பங்களாதேசுக்கான சுகாதார நிதியுதவியானது 79 மில்லியன் டொலராகவும் இந்தியாவிற்கு 53 மில்லியன் டொலராகவும் நேபாளத்திற்கு 41 மில்லியன் டொலராகவும் பாகிஸ்தானிற்கு 22 மில்லியன் டொலராகவும் காணப்பட்டன. ஆனால் ட்ரம்ப் நிர்வாகம் இந்த உதவித் திட்டத்தை சரி அரைவாசியாகக் குறைத்துள்ளது.

அமெரிக்காவானது தெற்காசிய நாடுகளுக்கான சுகாதார உதவித் திட்டத்திற்கான நிதியைக் குறைபபுச் செய்துள்ளதானது இந்த நாடுகளில் பல்வேறு எதிர்த்தாக்கங்களை உண்டுபண்ணும் என்பது ஒரு கெட்ட வாய்ப்பாகும். இதனால் இந்த நாடுகளின் சிறுவர் மற்றும் தாய்மார் சுகாதார முன்னேற்றம், போசாக்கு அதிகரிப்பு, காசநோய், எய்ட்ஸ் போன்ற தீவிர நோய்களை எதிர்த்து நிற்பதற்கான திறனற்ற நிலை உருவாகும்.

அத்துடன் அமெரிக்காவின் இந்த நிதியுதவியானது இதுவரை காலமும் இந்த நாடுகளில் வாழும் மக்களின் உடல் ஆரோக்கியத்திற்கும், குடும்பக் கட்டுப்பாட்டிற்கும் ஆதரவாக இருந்தது. ஆனால் ட்ரம்ப் நிர்வாகம் இந்த நிதியுதவியை சரி அரைவாசியாக்க் குறைப்புச் செய்வதால் தெற்காசியா புதிய சவால்களைச் சந்திப்பதற்கு வழிவகுக்கும்.

பூகோள சுகாத்ாரத் திட்டம் என்பது ஒபாமா நிர்வாகத்தின் மிக முக்கிய வெளிநாட்டு உதவியாகக் காணப்பட்டது. குறிப்பாக இத்திட்டமானது 'ஜனாதிபதியின் முயற்சித் திட்டம்' எனக் கூறப்பட்டது. இந்நிலையில் ஒபாமா நிர்வாகத்தின் முன்னுரிமைத் திட்டங்களை இல்லாமல் செய்வதே ஜனாதிபதி ட்ரம்பின் விருப்பாக உள்ளது. இத்ற்காகவே தற்போது கடந்த காலத்தில் அமெரிக்காவால் முன்னெடுக்கப்பட்ட பல்வேறு திட்டங்களை இதன் புதிய நிர்வாகம் இல்லாதொழித்து வருகிறது.

ட்ரம்ப் நிர்வாகத்தின் புதிய வரவு செலவுத் திட்டமானது மாலைதீவு மற்றும் இலங்கைக்கான உதவிகளை முற்றிலும் முடிவிற்குக் கொண்டு வரும். மாலைதீவானது நடுத்தர வருமானத்தைக் கொண்ட நாடு. இது ஜனநாயக ரீதியில் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகிறது. குறிப்பாக இங்கு 100 சதவீதமும் சுனி முஸ்லிம்களே வாழ்கின்றனர். ஆனால் தீவிரவாதம் என்பது இங்கு பெரும் பிரச்சினையாகக் காணப்படுகிறது.

காலநிலை மாற்றத்திற்கு நிதி வழங்குவதை ட்ரம்ப் நிர்வாகம் முற்றிலும் எதிர்த்துள்ளமை அனைவரும் அறிந்ததே. எனினும் தீவிரவாத அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள மாலைதீவிற்கு அதன் பாதுகாப்பு மற்றும் சமாதானம் போன்றவற்றுக்காக வழங்கப்பட்ட சிறியளவிலான உதவித் தொகையை ட்ரம்ப் நிர்வாகம் இல்லாமல் செய்தமையானது இந்த நிர்வாகத்தால் முன்னுரிமைப்படுத்தப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகக்கு முரணாக காணப்படுகிறது.

தாழ்வான நடுத்தர வருமானத்தைக் கொண்டதும் 30 ஆண்டுகால உள்நாட்டு யுத்தத்திலிருந்து 2009 இல் மீண்டெழுந்த நாடான இலங்கைக்கான 38 மில்லியன் டொலர் பெறுமதியான அமெரிக்காவின் நிதியுதவியானது நிறுத்தப்படவுள்ளது. ஜனநாயகம், மனித உரிமைகள், நல்லாட்சி, சமாதானம், பா்துகாப்பு மற்றும் பொருளாதார அபிவிருத்தி போன்றவற்றை மையப்படுத்தியே இந்த உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டன.

இலங்கை மற்றும் மாலைதீவு போன்ற நாடுகள் இந்திய மாக்கடலில் கேந்திர முக்கியத்துவம் மிக்க மையத்தில் அமைந்துள்ளன. இந்திய மாக்கடல் முழுவதிலும் சீனா தனது செல்வாக்கை விரிவுபடுத்துவதற்கான திட்டத்தில் இறங்கியுள்ளது. இந்நிலையில் இந்திய மாக்கடலில் கேந்திர முக்கியத்துவம் மிக்க அமைவிடத்தைக் கொண்டுள்ள இலங்கை மற்றும் மாலைதீவு ஆகிய இரு நாடுகளுடனும் சீனா பல்வேறு பாரிய இராஜதந்திர மற்றும் பொருளாதார பங்களிப்பை வழங்கி வருகின்றது.

**முன்னுரிமைகளைத் தவறாகப் பயன்படுத்துதல்**

ட்ரம்பின் புதிய நிர்வாகமானது தனது வெளியுறவுக் கோட்பாட்டின் கீழ் பிற நாடுகளுக்கான பொருளாதார உதவிகளைக் குறைப்புச் செய்வதானது இந்த நாடானது ஜனநாயகம், நல்லாட்சி, மனித உரிமைகள் போன்ற விழுமியங்களை குறைத்து மதிப்பிடுவதையே சுட்டிக்காட்டுகிறது. அமெரிக்கா இவ்வாறு தனது உதவித் திட்டங்களைக் குறைப்புச் செய்வதன் மூலம் மத்திய ஆசியாவில் சீனாவால் தொடருந்துப் பாதைகள் மற்றும் வீதிகள் அமைக்கப்படுவதன் மூலமும் தெற்காசிய நாடுகளான இலங்கை மற்றும் மாலைதீவு போன்ற கேந்திர முக்கியத்துவ அமைவிடத்தைக் கொண்ட நாடுகளில் சீனா தொடர்ந்தும் தனது செல்வாக்கைச் செலுத்துவதற்குமான வாய்ப்பு மேலும் அதிகரிக்கப்படுகிறது.

ஆகவே இதனைத் தடுப்பதற்கு அமெரிக்கா பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் நல்லாட்சி போன்றவற்றில் அதிக கவனத்தைச் செலுத்த வேண்டும். இதேபோன்று இந்தியாவிற்கு வழங்கப்படும் உதவித் திட்டங்களை இல்லாமல் செய்வதன் மூலம் புதிய கண்டு பிடிப்புக்கள் தொடர்பில் இந்தியாவின் வளர்ச்சி எத்தகையது என் பதை அறிவதற்கான வாய்ப்பை அமெரிக்கா இழக்கும்.

அமெரிக்காவின் புதிய நிர்வாகம் இவ்வாறான மாற்றங்களை மேற்கொண்டாலும் கூட, இவை எவையும் ட்ரம்ப் நிர்வாகத்தின் முன்னுரிமைகளுடன் ஒத்துப்போவது போல் தோன்றவில்லை.

வழி மூலம் – Forbes
ஆங்கிலத்தில் – Alyssa Ayres
மொழியாக்கம் – நித்தியபாரதி




## அவுஸ்திரேலியாவின் ப்ளஸ்,மைனஸ் என்ன?

# சம்பியன்ஸ் டிராபி யாருக்கு

ஐ.பி.எல் பரபரப்புகளே இன்னும் ஓயவில்லை, அதற்குள் சம்பியன்ஸ் டிராஃபி ஜுரம் பற்றவைக்கப்பட்டிருக்கிறது. விராட் ஹோலி முதல் 'டிவில்லியர்ஸ் வரை இந்த முறை நாங்கதான் சம்பியன்" எனத் தீர்க்கமாக நம்புகிறார்கள். எட்டு அணிகளுக்கும் இந்த ஆசை இருந்தாலும், கோப்பை ஓர் அணிக்குத் தானே சாத்தியம். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு நடக்கும் சம்பியன்ஸ் டிராஃபியை முத்தமிட, அத்தனை வீரர்களும் துடிக்கிறார்கள். வரும் ஜுன் 18ஆம் திகதி கோப்பையை வெல்லப்போகும் அணி எது, ஒவ்வோர் அணியின் ப்ளஸ் மைனஸ் என்ன, வெற்றி - தோல்வி வாய்ப்பில் இதுவரையிலான வரலாறு போன்றவற்றை அலசும் மினி தொடர் இது.

### அவுஸ்திரேலியாவின் ப்ளஸ் - மைனஸ்

சம்பியன்ஸ் டிராஃபி வரலாற்றிலேயே இரண்டு முறை கோப்பையைத் தக்கவைத்த ஒரே அணி, அவுஸ்திரேலியாதான். (2002 ஆம் ஆண்டில் இலங்கையுடன் கோப்பையைப் பகிர்ந்துகொண்டதால் இந்தியா சேர்க்கப்படவில்லை) ரிக்கி பொண்டிங் தலைமையிலான அவுஸ்திரேலியாதான் மினி உலகக்கோப்பையை இரண்டு முறை வென்றது.

வருடங்கள் ஓடிவிட்டன, அப்போதிருந்த அவுஸ்திரேலிய அணியில் ஒரு வீரர்கூட தற்போதுள்ள அணியில் இல்லை. பலருக்கு வயதாகிவிட்டது. சிலர், ஃபார்ம் அவுட் காரணமாக ஒதுக்கப்பட்டுவிட்டார்கள். சரி, இப்போதைய ஸ்டீவன் ஸ்மித் தலைமையிலான அவுஸ்திரேலியா சம்பியன் ஆகுமா?

அணியின் ப்ளஸ், மைனஸ் குறித்துப் பார்ப்பதற்கு முன்னதாக 1998-ம் ஆண்டு முதல் 2013-ம் ஆண்டு வரை அவுஸ்திரேலியாவின் பெர்போமன்ஸ், சம்பியன்ஸ் டிராஃபி-யில் எப்படியிருந்தது என்பதைப் பார்ப்போம்.

### 2002-ம் ஆண்டு - நாக் அவுட்டில் காலி

லீக் சுற்றுகள் அறிமுகப்படுத்தப்பட்ட முதல் மினி உலகக் கோப்பைத் தொடர் இது. இந்தியாவில் நடைபெறுவதாக இருந்த இந்தத் தொடர், இலங்கைக்கு மாற்றப்பட்டது. லீக் சுற்றில் நான்கு பிரிவுகள் இருந்தன. ஒவ்வொரு பிரிவிலும் மூன்று அணிகள் இடம் பெற்றிருந்தன. முதல் இடத்தைப் பிடிக்கும் அணி, நேரடியாக அரை இறுதிக்குத் தகுதிபெறும் என்பது விதி.

குரூப் 1இல் அவுஸ்திரேலியா, வங்கதேசம், நியூசிலாந்து ஆகிய அணிகள் இடம்பெற்றன. 164 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்து அணியை வீழ்த்திய ஆஸி., ஒன்பது விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வங்கதேசத்தைப் பந்தாடியது. அரை இறுதியில் இந்த முறை இலங்கையைச் சந்தித்தது. முரளிதரனும் அரவிந்த டி சில்வாவும் அவுஸ்திரேலியாவைப் பாடாய்ப் படுத்தினர். ஓட்டங்கள் குவிக்கவே சிரமப்பட்ட ஆஸி., 48.4 ஓவர்களில் வெறும் 162 ஓட்டங்களுக்கு ஓல் அவுட் ஆனது. நாற்பதே ஓவர்களில் சேஸிங்கை முடித்து டாட்டா காட்டியது இலங்கை. தொடர்ந்து மூன்றாவது முறையாக நாக் அவுட் சுற்றில் மண்ணைக் கவ்விய சோகத்தோடு சொந்த ஊருக்குத் திரும்பியது அவுஸ்திரேலியா.

### 2004ஆம் ஆண்டு - அரை இறுதியோடு கரைந்த கனவு

முந்தைய தொடரைப்போலவே அதே முறையில் போட்டிகள் நடந்தன. இந்தத் தொடர் இங்கிலாந்தில் நடந்தது. அவுஸ்திரேலியா இடம் பெற்றிருந்த பிரிவில் நியூசிலாந்து, அமெரிக்க அணிகள் இருந்தன. நியூசிலாந்தை ஏழு விக்கெட்கள் வித்தியாசத்தில் வென்ற ஆஸி., அமெரிக்காவுடனான போட்டியை ஒட்டுமொத்தமாகவே வெறும் 31.5 ஓவர்களில் முடித்து, டின்னருக்குச் சென்றது. அரை இறுதியில் இங்கிலாந்திடம் எட்டு விக்கெட் வித்தியாசத்தில் வீழ்ந்தது. தொடர்ந்து நான்காவது முறையாக நாக் அவுட் சுற்றில் வெளியேறியது ஆஸி.

### 2006-ம் ஆண்டு - தொடரை நடத்திய இந்தியா

முதன்முதலாக சம்பியன்ஸ் டிராஃபி இந்திய மண்ணில் நடந்தது. இந்த முறை லீக் சுற்றில் மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன. நான்கு பிரிவுகளுக்குப் பதிலாக இரண்டு பிரிவுகளாக அணிகள் பிரிக்கப்பட்டன. எட்டு அணிகளுக்கு மட்டுமே அனுமதி.

அவுஸ்திரேலியாவின் குரூப்பில் இந்தியா, இங்கிலாந்து, மேற்கிந்தியத்தீவு ஆகிய அணிகள் இருந்தன. லீக் சுற்றில் மேற்கிந்தியத் தீவுகளுடன் தோற்றாலும், இந்தியாவையும் இங்கிலாந்தையும் ஆறு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் அடுத்தடுத்து வீழ்த்தி அரை இறுதிக்குத் தகுதிபெற்றது ஆஸி. மொஹாலியில் நடந்த அரை இறுதியில் 240 ஓட்டங்களைத் துரத்திய நியூசிலாந்து அணி, 206 ஓட்டங்களை மட்டுமே எடுத்தது. முதன்முதலாக மினி உலகக்கோப்பையில் நாக் அவுட் சுற்றில் வென்ற மகிழ்ச்சியில் திளைத்த ஆஸி., இறுதிப்போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் எதிர்கொண்டது.

மும்பையில் நடந்த அந்த மட்ச் ருசிக்காமலேயே முடிந்தது. வெறும் 138 ஓட்டங்களுக்கு மேற்கிந்தியத்தீவுகள் ஓல் அவுட், ஆக, அவுஸ்திரேலியா "எளிதாக வென்றுவிடலாம்" என நினைத்துக் களம்கண்டது. ஆனால், 13/2 என லேசாகத் தடுமாறியது. அதன் பிறகு வாட்சன் - மார்ட்டின் இணை பொறுப்புடன் ஆடி, குழுவைக் கரை சேர்த்தனர். ஆஸி. சம்பியன் ஆனது. வாட்சன் "மான்-ஒப் த மட்ச்" விருதை வென்றார். மூன்று உலகக்கோப்பைகளை வென்றிருந்தாலும், சம்பியன்ஸ் டிராபியில் சம்பியன் ஆகவில்லையே என்ற கவலை அவுஸ்திரேலிய வீரர்களுக்கு இருந்தது. இந்தத் தொடரில் அவர்கள் வென்ற பிறகு, ஆஸியைக் கண்டு அத்தனை அணிகளும் நடுங்க ஆரம்பித்தன.

### 2009ஆம் ஆண்டு - மீண்டும் சம்பியன்

2008ஆம் ஆண்டு சம்பியன்ஸ் டிராபி தொடர் நடந்திருக்க வேண்டும். ஆனால் நடக்கவில்லை. காரணம் பாகிஸ்தான். முதலில் பாகிஸதானில்தான் தொடர் நடத் தப்படுவதாக இருந்தது. ஆனால், அந்த ஆண்டு பாகிஸ்தானில் நடந்த பயங்கரவாதத் தாக்குதலில் இலங்கை வீரர்கள் பாதிக்கப்பட, தென்னாபிரிக்கா உள்ளிட்ட பல நாடுகள் "பாகிஸ்தானில் தொடர் நடந்தால், தொடரைப் புறக்கணிப்போம்" என அறிவித்தன. இதையடுத்து தொடர் ரத்துசெய்யப்பட்டு, 2009ஆம் ஆண்டு தென்னாபிரிக்காவில் நடந்தது.

இரண்டு பிரிவுகளில் இந்தியா, பாகிஸ்தான், மேற்கிந்தியத்தீவுகள், ஆகிய அணிகள் இடம்பெற்ற குரூப் 1-ல் அவுஸ்திரேலியாவும் இருந்தது. மேற்கிந்தியத்தீவுகள் 50ஓட்டங்கள் வித்தியாசத்தில் ஊதித் தள்ளிய ஆஸி., பாகிஸ்தானையும் இரண்டு விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வென்றது. இந்தியாவுடனான போட்டி மழையால் ரிசல்ட் கிடைக்கவில்லை.

அரையிறுதியில் இங்கிலாந்து 258ஓட்டங்களை வெற்றி இலக்காக நிர்ணயிக்க, ஷேன் வாட்சன் , பொண்டிங் இருவரும் சதம் அடித்து ஒன்பது விக்கெட்டுகள் வித்தியாசத்தில் ஆஸியின் வெற்றிக்கு வித்திட்டனர். இறுதிப்போட்டியில் நியூசிலாந்து அணியுடன் மோதியது. 201ஓட்டங்கள் எடுத்தால் மீண்டும் சம்பியன் என்ற இலக்கோடு களமிறங்கிய ஆஸி., வாட்சனின் மீண்டும் ஓர் அட்டகாசமான சதத்தால் 45 ஓவர்களிலேயே மட்சை முடித்தது. முதல் நான்கு சம்பியன்ஸ் டிராபி தொடரில் இறுதிப் போட்டி வரை உடன் வராத ஆஸி., அடுத்தடுத்து இரண்டு கோப்பைகளை வென்று வரலாறு படைத்தது. இரண்டு உலகக்கோப்பைகள், இரண்டு சம்பியன்ஸ் டிராபியுடன் கப்டன் பொண்டிங் போஸ் கொடுக்க, ஆஸியே ஆனந்தக்கூத்தாடியது.

### 2013-ம் ஆண்டு சொதப்பல் ஆட்டம்

இங்கிலாந்தில் நடந்த ஏழாவது சம்பியன்ஸ் டிராபி தொடரில் அவுஸ்திரேலியா, இலங்கை, இங்கிலாந்து, நியூசிலாந்து ஆகிய அணிகள் ஒரு பிரிவில் இருந்தன. நியூசிலாந்துடனான போட்டி மழையால் கைவிடப்பட, இங்கிலாந்து மற்றும் இலங்கையுடனான போட்டிகளில் மண்ணைக் கவ்வியது அவுஸ்திரேலியா. மூன்று போட்டிகளில் ஒரு வெற்றிகூட கிடைக்காமல் லீக் சுற்றோடு வெளியேறியது அவுஸ்திரேலியா.

### 2017ஆம் ஆண்டில் என்ன நடக்கும்?

சம்பியன்ஸ் டிராபியில் சுவாரஸ்யமான ஒரு விடயம் உண்டு. தரவரிசையில் நம்பர் 1 மற்றும் நம்பர் 2 ஆகிய இடங்களில் இருக் கும் தென்னாபிரிக்கா மற்றும் அவுஸ்திரேலிய அணிகள் இதுவரை சம்பியன்ஸ் டிராபியில் மோதியதே கிடையாது. இந்த முறையும் அவுஸ்திரேலியாவும் தென்னாபிரிககாவும் வெவ்வேறு பிரிவுகளில் இடம் பெற்றுள்ளன.

இந்த முறை இங்கிலாந்து, நியூசிலாந்து, வங்கதேசம் ஆகிய அணிகள் இடம்பெற்றுள்ள பிரிவில் அவுஸ்திரேலியாவும் உள்ளது. இந்த நான்கு அணிகளுமே ஒருநாள் போட்டிகளில் வலுவான அணிகள்தான். குறிப்பாக, வங்கதேசம் சமீப காலங்களில் மிகப்பெரிய எழுச்சி பெற்றுள்ளது. வங்கதேச அணியுடன் கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் மோதப் போகிறது அவுஸ்திரேலியா. தற்போதைய வலுவான வங்கதேசத்தை அவ்வளவு எளிதாக அவுஸ்திரேலிய அணியால் வீழ்த்திவிட முடியாது. வங்கதேச அணி, கிட்டத்தட்ட அவுஸ்திரேலியாவைத் தவிர அத்தனை அணிகளையும் கடந்த மூன்று ஆண்டுகளில் வீழ்த்தியிருக் கிறது. இந்தமுறை அவுஸ்திரேலியா வைத் தோற்கடிக்கத் துடித்துக் கொண்டிருக்கிறது. எனவே, வங்க தேசம் - அவுஸ்திரேலியா இடையேயான போட்டி, பரபரப்பாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

2015-ம் ஆண்டு உலகக்கோப்பைத் தோல்விக்குப் பிறகு மீண்டு வந்து சரமாரியான வெற்றிகளைக் குவித்துவருகிறது இங்கிலாந்து. நியூசிலாந்து அணி, கணிக்க முடியாத வகையில் ஆடிவருகிறது. ஆகவே, அவுஸ்திரேலியாவுக்கு இந்த முறை பயங்கரமான சவால், லீக் சுற்றிலேயே காத்திருக்கிறது. 2015-ம் ஆண்டில் சொந்த மண்ணில் எளிதாக உலகக்கோப்பையை வென்றதைப்போல இந்த முறையும் கோப்பையைக் கைப்பற்றிவிட முடியாது என்பதே நிதர்சனம்.

### சரி, அவுஸ்திரேலிய அணி எப்படி இருக்கிறது?

பட்டிங்கைப் பொறுத்தவரை வார்னர், ஃபின்ச், ஸ்டீவன் ஸ்மித் இருக்கிறார்கள். டிராவிஸ் ஹெட் மற்றும் கிறிஸ் லின் ஆகியோர் இப்போது அணியில் இணைந்திருக்கிறார்கள். இவர்களைத் தவிர மக்ஸ்வெல், ஹென்றிக்ஸ் ஆகிய ஓல்ரவுண்டர்களும் பட்டிங்கில் கலக்குவார்கள். போதாக்குறைக்கு விக்கெட் கீப்பர் பட்ஸ்மேன் மாத்யூ வேடு வேறு இருக்கிறார்.

ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் பலமான பட்டிங் வரிசைபோலத் தெரிந்தாலும், அனுபவமற்ற படை என்பது அப்பட்டமாகத் தெரிகிறது. குறிப்பாக, ஸ்டீவன் ஸ்மித் தவிர எல்லோருமே அதிரடி பட்ஸ்மேன்கள்தான். சிலர் பின்ச் ஹிட்டர்கள். இங்கிலாந்து மண்ணில், பௌலிங் நன்றாகவே எடுபடும். பெரும்பாலான போட்டிகள் பகல் போட்டிகளாகவே உள்ளன. ஆகவே, முதலில் பட்டிங் செய்யும் அணி, முதல் பத்து ஓவர்களில் கவனமாக ஆடவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஐபிஎல் போட்டிகளில் கலக்கிய லின், மக்ஸ்வெல், ஹெட் போன்றோர் ஆட்டத்தை எப்படி வெளிப்படுத்தப் போகிறார்கள் என்பதை, பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இந்தத் தொடரில் அனுபவம் வாய்ந்த, பொறுப்புடன் ஆடக்கூடிய ஜார்ஜ் பெய்லியை நிச்சயம் மிஸ்செய்யும் ஆஸி.

பட்டிங்கில் சற்று நிலையற்ற தன்மை இருந்தாலும், பௌலிங்கில் சற்று தெம்பாகவே இருக்கிறது. எனினும் ஜாம்பாவைத் தவிர நல்ல சுழற்பந்து வீச்சாளர் அணியில் இல்லை. மிதவேகப்பந்துக்கு மிச்செல் மார்ஷ், ஜேம்ஸ் ஃபால்க்னர் இல்லை. அவர்களின் இடத்தை யூார் சரியாக நிரப்புவார்கள்?" என்ற கேள்வி எழுகிறது.சம்பியன்ஸ் டிராபியில் ஆடப்போகும் ஆஸி. அணி முற்றிலும் புதிது. இந்தப் பதினைந்து பேரிலிருந்து அணிக்குத் தேவையான பதினொரு பேரை எடுப்பது பெரும் சவால். அதே நேரத்தில் இவர்களுக்கு எப்படி வியூகம் வகுப்பது என்பதில் எதிர் அணி திணறும். இது ஆஸிக்கு சற்றே சாதகமான அம்சம்.


ஒருநாள் போட்டிகளில் மீண்டும் ஆதிக்கம் செலுத்த வேண்டுமெனில், அவுஸ்திரேலியா கடக்கவேண்டிய தூரம் நிறையவே இருக்கிறது. அதற்கான முதல் அடி, சம்பியன்ஸ் டிராபி கோப்பையை மீண்டும் கையில்ஏந்துவதாகஇருக்கவேண்டும். ஆனால், அது அவ்வளவு எளிதல்ல என்பதே நிதர்சனம். ஏனெனில், அரை இறுதிக்குத் தகுதிபெறுவது என்பதே பெரும் சவால்!




(க)

## காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்:- நெஞ்சில் ஓர் ஆலயம்
பாடியவர்:- பி.சுசீலா
இசை : விஷ்வநாதன் ராமமூர்த்தி



முத்தான முத்தல்லவோ முதிர்ந்து வந்த முத்தல்லவோ
கட்டான மலரல்லவோ கடவுள் தந்த பொருளல்லவோ
முத்தான முத்தல்லவோ முதிர்ந்து வந்த முத்தல்லவோ
கட்டான மலரல்லவோ கடவுள் தந்த பொருளல்லவோ
முத்தான முத்தல்லவோ

சின்னஞ்சிறு சிறகு கொண்ட சிங்கார சிட்டல்லவோ
செம்மாதுளை பிளந்து சிரித்து வரும் சிரிப்பல்லவோ (2)
மாவடு கண்ணல்லவோ மைனாவின் மொழியல்லவோ (2)
பூவின் மணமல்லவோ பொன்போன்ற முகமல்லவோ

முத்தான முத்தல்லவோ முதிர்ந்து வந்த முத்தல்லவோ
கட்டான மலரல்லவோ கடவுள் தந்த பொருளல்லவோ
முத்தான முத்தல்லவோ

வாழாத மனிதரையும் வாழ வைக்கும் சேயல்லவோ
பேசாத தெய்வத்தையும் பேச வைக்கும் தாயல்லவோ
தாழம்குடையல்லவோ தள்ளாடும் நடைய்ல்லவோ
மாலை பொழுதல்லவோ வண்டாடும் செண்டல்லவோ..

முத்தான முத்தல்லவோ முதிர்ந்து வந்த முத்தல்லவோ
கட்டான மலரல்லவோ கடவுள் தந்த பொருளல்லவோ
முத்தான முத்தல்லவோ

# கனவுகளும் பலன்களும்



கிழிந்த துணியை அணிந்து இருப்பது போல கனவு கண்டால், பணவரவு இருக்கும். ஒரு காரியத்தை தொடங்குவீர்கள். அது சுலபத்தில் நடக்காது. இருந்தாலும் விடாமுயற்சியால் வெற்றி பெறுவீர்கள். புது வரவும் அதனால் உற்சாகமும் ஏற்படும்.

கிழிந்த துணியைத் தைப்பது போல கனவு கண்டால், புகழ், செல்வம் உண்டாகும். இனிமையான செய்திகள் கிடைக்கும். பணம் பற்றாக் குறை இருக்காது. நினைத்ததை சாதிப்பார்கள்.

துணியை கிழிப்பது போல கனவு கண்டால், வேலையில் சில மாற்றம் உறவில் விரிசல் போன்றவை உண்டாகும். மனப்பூர்வமாக யாரை நம்பினீர்களோ அவர்களால் பிரச்சினை ஏற்படும். பிறருக்கு நன்மை செய்தாலும் அவர்கள் உங்களைக் குறைதான் கூறுவார்கள்.

கிழிந்த துணியை உங்கள் குடும்பத்ினர் உடுத்தி இருப்பது போல கனவு கண்டால், ஏதோ ஆபத்து வரும். இருந்தாலும் இறைவனின் ஆசியாலும் உங்கள் புத்திசாலித்தனத்தாலும் பெரிய ஆபத்தில் இருந்து தப்பி வருவீர்கள். குடும்பத்தில் நிம்மதியின்மை இருக்கும். உங்களையும் உங்கள் குடும்பத்தையும் யாரோ ஒரு மூன்றாம் நபர் ஆட்டிப் படைப்பார்.

களைப்பாக-பயணம்-தண்ணீரை கண்டால்

தண்ணீர் கனவில் வந்தால் என்ன பலன்.

ஒரு இடத்தில் தண்ணீர் இருப்பது போல கனவு கண்டால் பிரச்சினைகள் விலகும். புதிய நண்பர்களால் நன்மை ஏற்படும்.

வறண்ட குளம் இருப்பது போல கனவு கண்டால் புதிய செலவுகள் அதிகம் உண்டாகும். எதிர்பார்த்த இடங்களில் இருந்து நல்ல தகவல்கள், பணம் சம்பந்தப்பட்ட தகவல்கள் வர தாமதமாகும். அல்லது அதில் ஏதாவது தடைகள் உண்டாகும்.

குளத்தில் அதிக தண்ணீர் இருப்பது போல கனவு கண்டால் பெரிய இடத்தில் இருந்து ஆதரவு, அவர்களாலே பல நன்மைகளும் உண்டாகும். வெகுநாட்களாக இருந்த பிரச்சினைக்கு ஒரு நல்ல தீர்வு கிடைக்கும்.

குளத்தில் தாமரை பூக்கள் இருப்பது போல கனவு கண்டால் பண வரவு உண்டாகும். கடன் சுமை குறையும். நல்ல நல்ல நண்பர்களின் ஆதரவினால் வியாபார விருத்தியும் குடும்ப ஒற்றுமையும் ஏற்படும்.

குளத்தில் கால் கழுவுவதைப் போல கனவு கண்டால் தரித்திரம் விலகி முகத்தில் புதிய உற்சாகம் ஏற்படும். நாட்பட்ட வியாதிகளால் ஏற்பட்ட பண விரயமும் உடல் பலவீனமும் அகலும். ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கிச் செல்வீர்கள்.

குளத்தில் இருக்கும் போது முதலை உங்கள் காலை பிடிப்பது போல கனவு கண்டால் எடுக்கும் முயற்சியில் வெற்றியை பெறுவீர்கள். இருந்தாலும் சிறிய பிரச்சினைகளையும் தடைகளையும் சந்திக்க நேரும்.

(தொடரும்)

# அடைய வேண்டிய தூரம் அதிகமில்லை

## வானில் பறந்து சாதித்த சிறுமி

அந்த விமான நிலையத்துக்குள் அம்மா,அப்பாவோடு நுழைகிறாள் அந்த ஐந்து வயது குழந்தை. இது அவளுக்கு முதல் விமானப் பயணம். அம்மா வாங்கிக் கொடுத்த சாக்லேட்டைக்கூட மறுத்துவிட்டு மேலே எழும், கீழே இறங்கும் விமானங்களை ஆச்சரியத்தோடு பார்த்துக் கொண்டிருக்கிறாள். விமானத்தின் இறக்கைகளைப் போலவே சிறுமியின் சிறகுகளும் ஆனந்தத்தில் விரிகின்றன.




"அம்மா... எனக்கு விமானங்கள் ரொம்பப் பிடிச்சிருக்கு. நானே ஒரு விமானத்தைச் செய்ய வேண்டும்" என்று ஐந்து வயதில் சொல்லிய 'அந்தப் பெண் சப்ரினா கொன்சலேஸ் பாஸ்டர்ஸ்கி... தன் 14 ஆவது வயதில் ஒரு தனி விமானத்தைச் செய்து முடித்தார். இப்போது 23 வயதிலிருக்கும் சப்ரினாவை, "இவர்தான் இன்றைய ஐன்ஸ்டீன்" என்று புகழாரம் சூட்டியிருக்கிறது உலகப்புகழ்பெற்ற ஹார்வர்டு பல்கலைக்கழகம். "அறிவியல் எனக்குப் படிப்பு அல்ல, அது என் வேலை அல்ல... அறிவியல் என் வாழ்க்கை. தூங்கும் நேரம் மட்டும்தான் நான் அறிவியலைப் பற்றி நினைப்பதில்லை" என்கிற சப்ரினா, பொது அறிவியல், ஏரோநாட்டிக்ஸ், வானியல் ஆகிய முக்கிய துறைகளில், உலகளவில் குறிப்பிடத்தக்க நபராகத் திகழ்கிறார்.

2008... அப்போது சப்ரினாவுக்கு வயது 14. தனி ஒருத்தியாக ஒற்றை இன்ஜின் கொண்ட விமானத்தை ஓராண்டுக் காலத்துக்குள் செய்து முடிக்கிறார். இன்ஜினுக்கு ஒரு மாதம், விமானப் பாகங்களைத் தயாரிக்க ஏழு மாதங்கள், உள் அலங்காரங்களைச் செய்து முடிக்க—நான்கு மாதங்கள் என அந்த ஓராண்டுக் காலத்தில், அவர் ஒருநாள் கூட பாடசாலைக்கு விடுப்பு எடுக்கவில்லை.

மாலை நேரங்களிலும், விடுமுறை நாட்களிலுமே மொத்தத்தையும் செய்து முடித்திருக்கிறார். அமெரிக்க - கியூபப் பெண்ணான சப்ரினாவின் இந்தப் பணியைக் கண்டு, ஒட்டுமொத்த அறிவியல் உலகமும் ஆச்சரியத்தில் மூழ்கியது. அவரே உருவாக்கிய அந்த விமானத்தில் பறக்க, அவர் புறப்படும் நேரத்தில் அவர் வசித்த சிக்காகோவில் அதேபோன்ற ஒரு விமானம் விபத்துக்குள்ளானது. அதனால், அனைவரும் சப்ரினாவின் பறக்கும் முயற்சியைத் தடுத்தார்கள்.

"என் கண்டுபிடிப்பின் மீது நானே சந்தேகம் கொள்வது சரியல்ல. இது பிழையில்லா ஒரு கண்டுபிடிப்பு. நான் நிச்சயம் பத்திரமாகப் பறந்து திரும்புவேன்" என்று நம்பிக்கையோடு சொல்லி சாதித்தும் காட்டினார் சப்ரினா.

"நான் எதிர்காலத்தில் மசாசூசெட்ஸ் பல்கலைக்கழகத்துக்குப் படிக்கப் போவேன். அப்போது என் அப்பா, அம்மா இருவரும் என்னைப் ப்ர்க்க இதில் பறந்து வருவார்கள்..." என்று சிரித்தபடியே கூறிய சப்ரினா, அதையும் நிஜமாக்கினார். மசாசூசெட்ஸ் பல்கலைக்கழகத்துக்கு வழங்கும் அதிகபட்ச மதிப்பெண்ணான 5.0 கிரேடைப் பெற்றுப் பட்டம் பெற்றார்.

இப்போது, ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் முழு நேர பி.எச்.டி. ஆய்வை மேற்கொண்டு வருகிறார். யாஹூ, அமேசான், நாசா உட்பட பல இடங்களிலிருந்தும் சப்ரினாவுக்கான வேலைவாய்ப்புகள் வந்தாலும் அறிவியல் ஆராய்ச்சிகளில் மட்டுமே கவனம் செலுத்தி வருகிற இவர், "ப்ளாக் ஹோல்" குறித்த ஆய்வில் தீவிர கவனம் செலுத்தி வருகிறார்.

அதோடு, பிரபல வானவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்கோடு சேர்ந்து ஆராய்ச்சிக் கட்டுரைகளைச் சமர்ப்பித்திருக்கிறார். இவரது "முக்கோணக் கோட்பாடு" அறிவியல் உலகில் மிக முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

எளிமையான குடும்பத்தைச் சேர்ந்தவர் சப்ரினா. தாய் மரியா கொன்சலேஸ், தந்தை மார்க் பாஸ்டர்ஸ்கி ஆகிய இருவரின் பெயரையும் தன் பின்னால் இணைத்துக்கொண்டுள்ள இந்த அபூர்வப் பெண், தனக்கென மொபைல்போன் வைத்துக் கொள்வதில்லை. சமூக வலைத்தளங்களான ஃபேஸ்புக், டுவிட்டர், இன்ஸ்டாகிராம் போன்ற எதையும் உபயோகிப்பதில்லை.

புதுப் பாடசாலையில் சேருவதற்கான நேர்முகத் தேர்வு. "நான் ஒன்பது வயதிலேயே விமானம் ஓட்டும் பயிற்சி மேற்கொண்டேன்" என்று பெருமை பொங்க அந்த ஆசிரியரிடம் சொன்னேன். அவரோ மிகச் சாதாரணமாக, 'ஓ... சரி... அதற்கப்புறம் என்ன செய்தாய்? என்ன சாதித்தாய்?' என்று கேட்டார். ஒவ்வொரு முறை நான் ஏதாவது செய்து முடித்து, உலகமே என்னைப் பாராட்டினாலும் அந்த ஆசிரியரின் கேள்வியை நினைத்துக் கொள்வேன். அடைய வேண்டிய தூரம் அதிகமிருப்பதை உணர்ந்து ஓடத் தொடங்கிவிடுவேன்..." என்று தலையில் கனமில்லாமல், தன்னம்பிக்கையோடு சொல்கிறார் சப்ரினா.

அடுத்து, தனியாகவே ஒரு விண்கலத்தைத் தயாரிக்க வேண்டும், வானவியலின் விடை தெரியாக் கேள்விகளுக்கான விடைகளைக் கண்டறிய வேண்டும் என்ற இலக்கோடு பயணித்து வருகிறார் இந்த இளம் ஐன்ஸ்டீன்!

சினிமா செய்தி

# லென்ஸ்

## திரைவிமர்சனம்




தனி மனிதனின் வக்கிரம் தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி எப்படிப் பலரின் வாழ்க்கையைக் கலைத்துப்போடுகிறது என்பதைப் பேசும் சினிமா 'லென்ஸ்'.

மனைவி ஓர் அறையில் காத்திருக்க, இன்னோர் அறையில் 'அலுவலக வேலை' எனப் பொய் சொல்லிவிட்டு, தனது ஒன்லைன் தோழியுடன் ஒருவன் சாட் செய்துகொண்டிருக்கிறான். இருவரும் ஆடைகளைக் களைகிறார்கள். நாம் சரியான படத்துக்குத்தான் வந்திருக்கிறோமோ என்ற முணுமுணுப்பு அரங்கம் முழுவதும் எழுகிறது.

ஆனால், இதைவிட மோசமான இரண்டு பேரின் அந்தரங்கக் காட்சிகள் நமது மொபைலில் இருந்தால், எந்தக் கூச்சமும் இல்லாமல் பார்ப்போம். அது எவ்வளவு பெரிய நேர்மையற்ற செயல் என்பதைப் பொட்டில் அறைவதுபோல் அழுத்தமாகச் சொல்கிறது 'லென்ஸ்'.

இணையத்தில் பெண்களுடன் நட்பாகி, அவர்களுடன் வீடியோ சாட் செய்வதுதான் அரவிந்தின் (ஜெயபிரகாஷ் ராதாகிருஷ்ணன்) பொழுதுபோக்கு. அப்படி ஒருநாள் 'நிக்கி' என்ற ஐ.டி., வீடியோ சட்டுக்கு அழைக்கிறது. ஆனால், எதிர்முனையில் வருவது ஆண் (ஆனந்த் சாமி) எனத் தெரிந்து துண்டித்துவிடுகிறான் அரவிந்த்.

வேறொரு பெண்ணுடன் அரவிந்த் செய்த சட்டின் க்ளிப் ஒன்று அவன் மொபைலுக்கு வருகிறது. பயந்துபோய், மீண்டும் வீடியோ கோலுக்குச் சென்றால், அந்த 'நிக்கி' ஜெயபிரகாஷை மிரட்ட ஆரம்பிக்கிறான்.

நிக்கி யார், ஏன் ஜெயபிரகாஷை மிரட்டுகிறான், ஜெயபிரகாஷ் இன்னொரு பெண்ணுடன் செய்த சட் வீடியோ நிக்கிக்கு எப்படிக் கிடைத்தது என்பதே படம். ஒவ்வொரு காரணம் தெரியும்போதும் நமக்குத் தூக்கி வாரிப் போடுகிறது.

முதல் படத்திலேயே சமகால வாழ்வின் ஆகப்பெரிய சாத்தானை அடையாளம்காட்ட முயன்றிருக்கும் இயக்குநர் ஜெயபிரகாஷ் ராதாகிருஷ்ணனை, மனம் திறந்து பாராட்டலாம். ஏஞ்சல் கதாபாத்திரப் படைப்பு ஒன்று போதும்.

தன்னை யாரோ படம்பிடிக்கிறார் என்ற பயத்தில் கால்கூடத் தெரியாமல் சொக்ஸ் அணிந்து குமுறும்போதும், உடை களையாமலே ஷவரில் குளிக்கும்போதும் நம் மனசாட்சி முன் விஸ்வரூபமெடுத்து நிற்கின்றன நெருப்புக் கேள்விகள். பேசும் திறனற்ற ஏஞ்சல், கடைசி நேரத்தில் எழுதிக்காட்டும் ஒவ்வொரு பேப்பரும் இந்தச் சமூகம் முகம் பார்த்துக்கொள்ளும் கண்ணாடி.

ஃப்ரேமுக்கு ஃப்ரேம் நம் நிஜ வாழ்க்கையில் யாரோ ஒருவரை அல்லது ஏதோ ஒரு சம்பவத்தை நினைவுபடுத்தும் யதார்த்த கதைக்களம்தான் 'லென்ஸி'ன் ஆகப்பெரிய பலம். இதுதான் விடயம் எனத் தெரிந்த பிறகும், சுவாரஸ்யம் குறையாமல் போகும் திரைக்கதை நேர்த்தி. "எங்க பெர்சனலை ரெக்கோர்ட் பண்ணி பிளாக்மெயில் பண்றியே..." எனக் கொதிக்கும் ஜெயபிரகாஷின் வார்த்தைகள், பின்னர் அவருக்கே பூமராங் ஆக வரும் திரைக்கதை உத்தி புத்திசாலித்தனம்.

உயிரோடு இருந்தப்ப அவ பேசலை. ஆனா, இப்ப அவ அலர்ற சத்தம் என் காதுல கேட்குது" போல பல வசனங்கள் தோட்டாக்களாகத் தெறிக்கின்றன. "பக்கத்துல யாராவது இருக்காங்களா? மத்தவங்க முன்னாடிதான் மனுஷன் அதிகமா நடிப்பான்" - முதல் பத்தியில் அரங்கில் எழுந்த முணுமுணுப்புக்குக்கூட வசனங்களில் பதில் வைத்திருக்கிறார் இயக்குநர்.

பெரும்பாலும் ஒரே அறைக்குள் இரண்டு பேரின் வீடியோ சட்தான். அதை அத்தனை கோணங்களில் சலிப்புத்தட்டாமல் படம் பிடித்திருக்கும் எஸ்.ஆர். கதிரின் கமராவுக்கு ஆயிரம் லைக்ஸ்.

உறுத்தாமல் ஒலிக்கிறது ஜி.வி.பிரகாஷ் குமாரின் பின்னணி இசை. இப்படியொரு முயற்சிக்கு ஆதரவளித்த தயாரிப்பாளர் வெற்றி மாறனுக்கும் பாராட்டுகள்.

இருந்தபோதும் ஒருகட்டத்தில் 'குறும்படம் பார்த்துக்கொண்டிருக்கிறோமோ!' என்ற உணர்வு எழுகிறது. ஆனந்த் சாமி அளவுக்கு மற்ற நடிகர்களின் நடிப்பு நம்மைக் கவரவில்லை. சில இடங்களில் ஒட்டாத உதட்டசைவு டப்பிங் படம் பார்க்கும் உணர்வைத் தருகிறது.


பிளம்பரை வெறிகொண்டு கொலைசெய்யும் ஆனந்த் சாமி, ஜெயபிரகாஷை ஏன் அப்படிக் கொல்லவில்லை? ஒருவேளை அரவிந்த் வாயாலே நடந்ததையெல்லாம் ரெக்கோர்ட் செய்து அப்லோட் செய்ய நினைத்தாலும், முடிவில் அவனைக் கொலை செய்யாமல் ஏன் தற்கொலை செய்ய வேண்டும்? ஆனந்த் சாமிக்கு உதவி செய்யும் அந்தப் பெண் யார்? கொலை செய்யும் அளவுக்குப் போன பிறகும் அதே வீட்டில் இருக்க எப்படிச் சம்மதித்தார்?

ஜெயபிரகாஷின் மனைவியைக் கடத்துவதற்குப் பதில் ஜெயபிரகாஷையே கடத்தி, அவர் வாயிலிருந்து உண்மைகளை வரவழைத்திருக்கலாமே? இப்படி 'லென்ஸ்படத்தில் நமக்கு ஆயிரம் கேள்விகள் எழலாம்.

ஆனால், "லென்ஸ்" கேட்கும் எந்தக் கேள்விக்கும் நம்மிடம் பதில் இல்லை என்பதே இந்தப் படத்தின் அழுத்தமான வெற்றி.



50/100





# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்! முப்படையே உடன் வெளியேறு; பளையில் பொலிஸார் மீது சூடு!

முப்படையின் கோரத் தாண்டவம் முள்ளிவாய்க்காலில் பல பத்தாயிரம் தமிழ் மக்களின் படுகொலையின் பின் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு எட்டு ஆண்டுகள் கடந்துவிட்டன.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் உணர்வெழுச்சியுடன் இம்முறையும் அனுஷ்டிக்கப்பட்டது. வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் தலைமையில் இந்த நினைவேந்தல் நிகழ்வு நடந்தது.

மதத் தலைவர்கள் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் , பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் , பல்லாயிரக் கணக்கான பொது மக்கள் இந்த நினைவேந்தல் நிகழ்வில் பங்கேற்றனர்.

கொலைக்களத்தில் நடந்த கொடூரங்களை மீட்டியும் கொத்துக்கொத்தாக கொன்றொழிக்கப்பட்ட உறவுகளை நினைத்தும் கண்ணீர்விட்டுக் கதறிய முத உறவுகள் படையினருக்கும் அவர்களை ஏவிவிட்ட அரச தரப்பினருக்கும் சாபம் இட்டனர்.

அதேவேளை இங்கு உரை நிகழ்த்திய வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், வடக்கு-கிழக்கு மாகாணங்களிலிருந்து முப்படையே உடன் வெளியேறு என்று மக்கள் ஒன்றிணைந்து குரல் எழுப்பும் காலம், வெகு தொலைவில் இல்லை என தான் நம்புவதாகவும் ஒவ்வொரு வருடமும் மே மாதம் 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நாளில் தமிழ்ச் சமூகங்கள் ஒன்றுபட்டு செயற்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

முதலமைச்சரின் இந்த உரை பாதுகாப்புத் தரப்பினருக்கு நிச்சயம் எரிச்சலை ஏற்படுத்தியி ருக்கும். படைத் தரப்பு மீது பல் குற்றச்சாட்டுக்களை இதற்கு முன்னரும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் முன்வைத்துள்ளார்.

தமிழர் தாயகமான வடக்கு-கிழக்கிலிருந்து படைத் தரப்பு வெளியேற வேண்டும் என்று முதலமைச்சர் விக்னேஸ்வரன் மட்டுமன்றி தமிழ் அரசியல்வாதிகள் பலரும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

ஆனால், தேசிய பாதுகாப்பைக் காரணம் காட்டி பொது மக்களின் காணிகளில் நிலை கொண்டுள்ள படையினரைக்கூட வேறு இடத்திற்கு மாற்ற அரசு நடவடிக்கை எடுக்கவில்லை.

முள்ளிவாய்க்கால் - இனப்படு கொலை நடந்த பின்னரும் கூட வடக்கு மாகாணத்தைப் போர்க் களமாக வைத்திருக்கவே அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மீண்டும் உருவாகிவிடுவார்கள் என்று முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, கூட்டு எதிரணி பாராளுமன்ற உறுப்பினர்களான விமல் வீரவன்ச, உதய கம்மன்பில உள்ளிட்டவர்கள் தெற்கில் சிங்கள மக்களிடையே அச்ச உணர்வை விதைக்கும் போதெல்லாம் வடக்கில் சில அசம்பாவிதங்கள் இடம்



பெறுகின்றன.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு வடக்கு-கிழக்கு தயாரான போது கோத்தபாய புலிக்கதை கூறினார். முள்ளிவாய்க்காலில் நினைவேந்தல் நிகழ்வு நடந்த மறுநாள் அதிகாலை (19.05.2017) பளையில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது.

ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸாரின் வாகனம் மீது நடத்தப்பட்ட இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் பெரும் பதற்றம் - பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பொலிஸார் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதற்கு பலவிதமான ஊகங்கள், கதைகள் கூறப்படுகின்றன.

அதில் ஒன்று தான் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை மையப்படுத்தி அரச தரப்பு அடக்குமுறையைக் கையாள நினைக்கிறதா? என்ற நியாயமான சந்தேகங்களுடனான கருத்துக்கள் அமைந்துள்ளன.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்படுவதற்கு முன்னைய மகிந்த ஆட்சிக்காலம் போலல்லாது மைத்திரி ஆட்சிக்காலத்தில் சற்று அச்சுறுத்தல் குறைந்துள்ளது. ஆனாலும், படைத்தரப்பின் பிரசன்னம் வடக்கில் குறைந்தால் தெற்கிலுள்ள சிங்கள இனவாதிகள் கூச்சலிட ஆரம்பித்து விடுவார்கள் என்பதால்.

இதனை சமாளிப்பதற்காகவும் வடக்கில் படைத்தரப்பு உஷார் நிலையில் தான் இருக்கிறது என்பதைக் காண்பிப்பதற்கும் பளை நகரை அண்மித்த கச்சார் வெளிப்பகுதியில் ஏ-9 வீதியில் நேற்று முன்தினம் அதிகாலை நடந்த துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம்; பொலிஸார், இராணுவம், அதிரடிப்படைக் குவிப்பு; பாரிய தேடுதல் வேட்டை என்பனவற்றைக் குறிப்பிடலாம். இதுவும் ஊகத்தின் அடிப்படையில் அமைந்த கருத்துத்தான். உண்மையை உறுதிப்படுத்தும் வரையில் அல்லது வெளிப்படுத்தும் வரை யில் ஊகங்கள் உலாவருவதைத் த்டுக்க முடியாது.

எது எவ்வாறாயினும் வடக்கு-கிழக்கிலிருந்து இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்ற கோரிக்கையையும் முள்ளிவாய்க்கால் வரை நீண்டு நீடித்த தமிழின அழிப்பு படுகொலைகளுக்கு நீதிகேட்டு நினைவேந்தல் நடத்துவதையும் பச்சிளம் பாலகர்கள் முதல் கர்ப்பிணிப் பெண்கள், வயோதிபர்கள் பல்லாயிரக்கணக்கான இளையோர்களையும் பலியெடுத்த அரச பயங்கரவாதத்திற்கு எதிராக சர்வதேச நீதி விசாரணை தான் வேண்டும் என்பதையும் போர்க் குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் தமிழ் மக்கள் எக்காலத்திலும் கைவிட மாட்டார்கள். இதை சிங்கள அரசு நினைவில் வைத்திருக்க வேண்டும்.

அதேவேளை , போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்டு எட்டு ஆண்டுகள் கடந்த பின்பும் வடக்கு -கிழக்கில் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வரும் நினைவேந்தல் நிகழ்வுகள் சிங்கள அரசின் அராஜகங்களை உலகிற்கு வெளிப்படுத்திக் கொண்டே இருக்கும் என்பதில் ஐயமில்லை.

காண்டீபன்

# facebook

## என்ன கொடுமை சார் இது

நல்லவேள சரியான நேரத்துக்குத் தான் பஸ் ஸ்டாப்புக்கு வந்துருக்கேன். இன்னிக்கு கரெக்ட் டைமுக்கு ஆபீஸ்க்குள்ள போய்ட்டு அந்த மனேஜர் முகத்துல கரியப் பூசணும். ராஸ்கல் இந்த ஒரு வாரமா எல்லார் முன்னாடியும் வச்சு எப்டி திட்டிட்டான்'. இப்படி யோசித்துக் கொண்டே நான் பேருந்திற்காக காத்திருந்தேன். கைபேசி அழைத்தது. என் மனைவிதான். நான் யோசிக்காமல் அழைப்பைத் துண்டித்தேன். மீண்டும் அழைப்பு. நான் மீண்டும் துண்டித்தேன். மீண்டும் அழைத் தாள்.

உனக்கு என்னதாம்மா பிரச்சினை இவ்ளோ நேரமா வீட்ல வச்சு அர்ச்சன பண்ணது பத்தலயா? நான் பொறுமையை பிடித்துக் கொண்டு கேட்டேன்.

ஏங்க இன்னிக்கு ஒரு நாள் மட்டும் எனக்காக லீவு போடமாட்டிங்களா? கெஞ்சும் குரலில் கேட்டாள்.

இதுக்குதான் கால் பண்ணயா, அதான் வீட்லயே சொல்லிட்டேனேமா? இந்த மாசம் அதிகமா லீவ் போட்டுட்டேன். இப்போ போட முடியாது. கேட்டாலும்கொடுக்க மாட்டாங்க. நீ முதல்ல போன வை.

அப்போ உனக்கு எங்களவிட உன் வேல தான் முக்கியம். இல்ல?

ஆமாண்டி. அப்டிதான். எனக்கு என் வேலதான் முக்கியம். பேசாம என்ன டைவர்ஸ் பண்ணிட்டு வேற ஒருத்தன கல்யாணம் பண்ணிக்க. போ.

"சொல்லிட்டல்ல. என்ன இப்டி சொல்ல. நான் இன்னிக்கே என் அம்மா வீட்டுக்கு என் பிள்ளகளக் கூட்டிட்டுப் போறேன். அங்க போய் முதல் வேல உன்ன டைவர்ஸ் பண்ணறது தான்.

அவள் அழுதுகொண்டே இன்னும் ஏதோ பேசினாள். நான் அதற்குள் தொடர்பைத் துண்டித்து விட்டேன். இப்படிப்பேசினால்தான் அவள் கோபத்தில் என்னிடம் பேசாமல் இருப்பாள்.

நானா இப்படி பேசினேன் என்று எனக்கே ஆச்சர்யமாக இருந் தது. நான் பேருந்து வரும் திசையை யும் என் கடிகாரத்தையும் பார்த்துக் கொண்டு நின்றிருந்தேன்.

எக்ஸ்க்யூஸ் மீ சார் என்ற குரல் கேட்டுத் திரும்பினேன். என் வயது மதிக்கத்தக்க ஒருவன் கையில் ஒரு சிறுவனுடன் நின்றிருந்தான். நான் என்ன என்பதுபோல் பார்த்தேன்.

"சார் நா பக்கத்துல ரெஸ்ட் ரூம் வர போய்ட்டு வரேன். அதுவரைக்கும் என் பையனக் கொஞ்சம் பாத்துக் கோங்க ப்ளீஸ் என்றான்.

நான் சரி என்பதா இல்லை முடியாது என்பதா என்று முடிவெடுக்கும் முன் என் பதிலுக்குக் காத்திராமல் அவன் தன் பையனிடம் அங்கிள் கூடவே இருக்கணும் செல்லம். எங்கயும் போய்டக்கூடாது என்ன? என்று விட்டு என்னிடம் திரும்பி தலையசைத்துவிட்டுச் சென்றுவிட்டான்.

'டேய் நான் உன்னும் சரின்னே சொல்லலடா' மனக்குரல் (Mind Voice) என்னில் தோன்றி அடங்கியது.

'இப்ப நா என்ன பண்றது. பஸ் வர டைம் ஆச்சே' கையைப் பிசைந்து கொண்டு பேருந்து வரும் திசையைத் நோக்கினேன். எரிச்சலுடன் திரும்பினால் அந்த சிறுவன் என் கையை விட்டு கொஞ்ச தூரம் சென்றிருந்தான்.

டேய்டேய்தம்பி கத்திக்கொண்டே அவனை ஓடிப் போய் பிடித்து வந்து நின்றேன். இடையில் அந்த பொது கழிவறையை திரும்பிப் பார்த்துக் கொண்டேன்.

அப்போது என்னிடம் தன் பையனைப் பார்த்துக்கொள்ளச் சொல்லி விட்டுச் சென்றவன் என்னைக் கை காட்டி ஏதோ பேசிக்கொண்டே வேறொரு திசையிலிருந்து வேகமாக வந்துகொண்டிருந்தான். அவனோடு இரு பொலிஸ்காரர்களும் வந்து கொண்டிருந்தனர்.

என்னருகில் வந்தவன் "சார் சார் இவந்தான் சார்" என்று கூறிவிட்டு அப்போதுதான் தன் பிள்ளையைப் பார்ப்பவன் போல அந்த பையனின் முகம் முழுவதும் முத்தம் கொடுத்துக் கொண்டே என்னை ஏதோ கடத்தல்காரன்போலப் பார்த்தான். எனக்கு என்ன நடக்கிறதென்றே புரியவில்லை. இந்த சூழ்நிலையிலும் நான் பேருந்து வருகிறதா என ஒரு முறைப் பார்த்து விட்டுத் திரும்பினேன்.

அந்த பொலிஸாரில் ஒருவர் நடய்யா ஸ்டேஷனுக்கு என்றார். என்னத்துக்கு சார்? யோவ் என்ன தைரியமிருந்தா குழந்தையையும் கடத்திட்டு இங்க வந்து தெனாவெட்டா நின்னுக்கிட்டு எகத்தாளமா கேள்விகேட்ப? என்று கூறிக் கொண்டே என்னைப் பிடித்து நகர்த்தினார்.

அய்யோ. சார் நான் எந்தக் கொழந்தைய எப்ப கடத்தினேன். எனக்கொன்னும் புரியலயே சார் என்று பதறினேன்.

"நீ இந்தக் கொழந்தய கடத்திட்டன்னுதான் இவர் எங்ககிட்ட புகார் கொடுத்துருக்காரு. நட என்றார்.

"சார் இந்தஆள் தான் கொஞ்ச நேரம் முன்னாடி என்ட்ட வந்து இந்த கொழந்தயப்பாத்துக்க சொல்லிட்டுப் போனான் சார். இப்ப வந்து இந்த மாதிரி பேசுறான். இவன் ஏதோ ஃப்ராட் பண்றான் சார்"

யார் ஃப்ராட்ன்னு நாங்க சொல்றோம். நீ கெளம்பு மொதல்ல. சார் நாந்தான் தப்பே பண்ணலன்னு சொல்றேன்." அந்த சமயம் பார்த்து நான் செல்ல இருந்த பேருந்து வந்து சேர்ந்தது.

சார் சார் ப்ளீஸ் சார் என் பஸ் வந்துருச்சு சார். என்ன போகவிடுங்க சார்.

நான் போய் அட்டண்டன்ஸ் போட்டு வந்துடுறேன் சார். உங்களுக்கு நம்பிக்கை இல்லனா இவரையும் கூட அனுப்புங்க" என்று அருகில் நின்றிருந்த இன்னொரு பொலீஸ், காரரை கைகாட்டிக் கெஞ்சினேன்.

நீ கேக்க மாட்ட? என்று கூறிக் கொண்டே என் கையைப் பிடித்து இழுத்து நகர்த்தினர். நான் குழந்தை போல 'வரமாட்டேன்' என்று கீழே உட்கார்ந்து அடம்பண்ணிக்கொண்டே பேருந்தைப் பார்த்தேன்.

அது கிளம்பி என்னைக் கடந்து சென்று கொண்டிருந்தது. நான் கோபத்தின் உச்சிக்கே சென்றுவிட்டேன். டேய். என்ன விடுங்கடா" என்று கத்திக்கொண்டே கையை உதறி விட்டு ஓடினேன்.

"சார் சார் ஓடாதீங்க சார்" என்று அவர்களும் என்னை பின்தொடர்ந்தனர். நான் ஒரு பைத்திக்காரனைப் போல ஓடி சுற்றி எங்காவது கல் கிடைக்கிறதா என்று தேடினேன். ஒரு பெரிய கல்லை என் இரு கையாலும் தூக்கிகொண்டு அவர்கள் பக்கம் திரும்பினால் அவர்கள் என்னைப் பார்த்து சிரித்துக் கொண்டே என்னருகில் வந்து

சார் போட்டுடாதீங்க சார். அங்க பாருங்க. அங்க பாருங்க" என்றனர். நான் அவர்கள் கைகாட்டிய திசையில் பார்த்தேன். அங்கே ஒருவன் ஒரு கட்டட மறைவில் இருந்து கையில் கமெராவுடன் வெளியே வந்து என்னைப் பார்த்து கையசைத்தான்.


என் அருகில் நின்றிருந்தவன் "சார் நாங்க ஜூப்பிட்டர் சானல்லருந்து 'ரோட் ரியாக்ஷன்' நிகழ்ச்சிக்காக இந்தமாதிரி ரோட்ல போறவங்ககிட்ட வம்பிழுத்து அவங்க ரியாக்ஷன்ஸ காப்ச்சர் பண்ணி டிவில போடுவோம். அதுல இன்னிக்கு நீங்க. சாரி சார். ரொம்ப பயந்துட்டீங்களோ? என்றான் சாதாரணமாக.

நான் தூக்கியிருந்த கல் இன்னும் என் கையில் கனத்துக்கொண்டிருந்தது. நான் தமிழ் பட கதாநாயகர்கள் சண்டைக் காட்சியில் பேசுவார்களே அதுபோல சத்தமாக "டேய் நா என்ன மாதிரி நிலைமையில நின்னுட்டிருந்தேன் தெரியுமாடா. உங்கள விட மாட்டேண்டா டேய்" என்று கத்திக்கொண்டே அவர்களைத் துரத்தினேன்.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 1079

Search for people, places and things | Nagendram | Home

**சுமன் ராயு**




**அசோக் ரமணா**




**பாஸ்கரன் பிரதீபன்**




**சாந்தன் பிரசன்னா**




**ஹம்சா பிரதீபான்**




**தர்சிகா**




நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 85

## வாழ்வில் வெற்றிபெற்றிட

நாம் எமது உண்மையான சிந்தனைகளுக்கும் நாம் செய்யும் தொழிலுக்கும் தலைவணங்குவோமாயின் பிறரிடம் மண்டியிடவேண்டியதேவை இருக்காது.

ஆனால் எம் மனச்சாட்சிக்குஎதிராக சூழ்நிலைகளுக்கும் அழுத்தங்களுக்கும் மண்டியிடுவோமாக இருந்தால் ஒவ்வொருவரிடமும் மண்டியிட்டு வாழ வேண்டிய பரிதாப நிலை ஏற்படலாம். அப்படியாயின் நாம் யார் சொல்லைகேட்பது? எதன்படி நடப்பது?

பெரியவர்கள் சொல்லுவார்கள்

மனிதன் சொல்ல இறைவன் கேட்பது திருவாசகம்

இறைவன் சொல்லமனிதன் கேட்பதுகீதை

மனிதன் சொல்லமனிதன் கேட்பதுகுறள்

மகன் சொல்லமகேசன் கேட்பது பிரணவம்

ஞானிகள் சொல்லஞானிகள் கேட்பதுதிருமந்திரம்

உன்மனம் சொல்வதை நீ கேட்பது வாழ்க்கை.

எமது மனச்சாட்சியை புறக்கணித்து நாம் செய்யும் செயல்கள் வெற்றிக்கு வழிவகுக்காது. நாம் எமது மனச்சாட்சி சொல்வதைக் கேட்டு வாழ்க்கையை நெறிப்படுத்தி ஆகவேண்டும்.

கால்நடைமுறைகள் எம்மை ஏளனம் செய்யக்கூடும், புறக்கணிக்கக்கூடும், நோகடிக்கக்கூடும், மோதக்கூடும், இதனூடேநாம் தடம் மாறாது பயணித்து ஆக வேண்டும்.

எமக்குள்ளேயும் எம்மவருக்குள்ளேயும் யாராலும் கண்டுகொள்ள முடியாத பல திறமைகள் புதையுண்டு கிடக்கின்றன. அதனை அடையாளப்படுத்த முயற்சி எடுப்போம்.

, அதைஅத்திபாரமாக்க் கொண்டு முயற்சியை தொடருவோம். எமது இலக்கை நோக்கியநகர்வுகள் தான்முக்கிய மானவை. அதனை அடைய நாம் அதிக காலம் எடுப்பதுதோல்வி என்று அர்த்தப்படாது. வாழ்வில் ஒவ்வொருதடங்கலும் ஏற்படும் பொழுது எம் நிலையைமீளாய்வு செய்து நாம் விட்டதவறுகளை அறிந்து திருத்தி எமது வாழ்க்கை பய ணத்தை தொடர்வது ஆரோக்கிய நகர்வாக அமையும்.



நாம் செய்யும் அல்லது செய்த தவறுகளை நாமே அடையாளப்படுத்திக் கொள்வது உண்மையிலே கடினமானது. ஆனால் அதுதான் எமது வெற்றிப் பாதையின் பிரதான படிக்கல்லாகவும் அமைகின்றது.

பிறர் விடும் தவறுகளை இலகுவில் அடையாளப்படுத்திக் கொள்ளும் திறமை எம் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது. ஆனால் நாம் விடும் தவறுகளை நாமே அடையாளப்படுத்தி திருந்திக் கொள்ள முயலும் மனநிலை எம்மிடம் இல்லை.

அதனை நாம் வளர்த்துக் கொள்ள வேண்டி இருக்கிறது. இந்த முயற்சி எம்மைவாழ்வின் வெற்றிக்கு இட்டுச் செல்லும் படிக்கற்களாக அமையும்.

நாம் சாம்பலாகிவிடவில்லை, கல்லறைக்குள் இல்லை, கடுமையாகநோய் வாய்ப்பட்டு கட்டிலில் கிடக்கவில்லை, அறிவு மங்கவில்லை, சிந்தனை ஓட்டங்கள் சிதறிப் போகவில்லை. இருந்தும் நாம் அடிக்கடிசோர்ந்துபோக காரணம் என்ன?

தொடரும்.

Dr.சி.சிவன்சுதன்
பொதுவைத்தியநிபுணர்.

## பளிச்சிடும் பற்களின் ஆரோக்கியம் பற்றி சிந்தித்திடுவோம்

பற்கள் எமக்கு அழகைக் கொடுப்பதுடன், சரியான உச்சரிப்புக்கும், உணவினை மென்று உண்பதற்கும் மிகவும் முக்கியமானவை. இப்படிப்பட்ட முக்கியம் வாய்ந்த பற்களின் ஆரோக்கியத்தைப் பற்றி நாம் சிந்திக்கவேண்டாமா?

1.குழந்தை பிறந்து முதலாவது பல் தென்படத் தொடங்கிய நாளிலிருந்து ஒருவர் தனது வாழ்நாள் வரை நாள் ஒன்றுக்கு இரண்டு தடவைகளாவது பல் துலக்குதல் வேண்டும்.

2. குறிப்பாக வாய்க்குழிக்குள் நான்குபற்கள் தோன்றிய நாளிலிருந்து கட்டாயமாக பற்தூரிகையைப் பயன்படுத்தி பல் துலக்க வேண்டும்.

3. குழந்தைகள் ஒரு வயதினை அடைந்த பின்பு புளோரைட் அடங்கிய பற்பசையினை சிறியளவில் தூரிகையிலிட்டு துலக்குதல் ஒவ்வொரு பெற்றோரினுடைய முக்கிய கடமையாகும்.

4. தினமும் (Fluride ) குறைந்தது இரண்டு தடவைகளாவது புளோரைட் அடங்கிய பற்பசை கொண்டும், பற்தூரிகை கொண்டும் பற்களை சரியான முறையில் பற்சுத்தம் செய்வது ஒவ்வொருவரினதும் இன்றியமையாத கடமையாகும். குறிப்பாக இரவில் படுக்கைக்குச் செல்லும் முன்னர் கட்டாயமாக பல்துலக்க வேண்டும்.

5. உணவு அருந்தியவுடன் பல் துலக்குவது தவறான ஒரு முறையாகும். ஏனெனில் உணவருந்தியவுடன் எமது வாயில் அமிலத்தன்மை காணப்படும். இவ் அமிலத்தன்மை ஆனது எமது வாய்க்குழியை மென்மையாக்க வல்லது. உணவருந்திய உடனே பல்துலக்குகையில் பல் மிளிரிகழர ஏதுவாகஅமையும் எனவே தான் சாப்பிட்டு ஒரு மணித்தியாலத்தின் பின் பற்களை பற்தூரிகை கொண்டு சுத்தம் செய்ய வேண்டும்.

6. உணவருந்தியவுடன் ஒவ்வொரு தடவையும் வாயினை நன்றாக நீர்கொண்டு கொப்புளித்தல் வேண்டும்.

7. பற்களை புளோரைட் அடங்கிய பற்பசை கொண்டு துலக்கிய பின் கடுமையாக கொப்புளிக்கக்கூடாது. ஏனெனில் பற்பசையில் இருக்கும் புளோரைட் ஆனது பற்சூத்தை வராமல் பாதுகாப்பளிக்கும்.இது பல்துலக்கிய 1மணித்தியாலம் தொடக்கம் 2 மணித்தியாலங்கள் வரை பற்களில் படிந்து பற்களுக்கு பாதுகாப்பைஅளிக்கின்றது. கடுமையாக கொப்புளிப்பதன் காரணமாக பற்களிலிருந்து கழுவிச் செல்லப்படுவதால் புளோரைட் பற்களிலிருந்து அகற்றப்படும்.

8. மிகவும் சூடான, மிகவும் குளிரான பானங்கள் பற்களின் ஆரோக்கியத்திற்கு உகந்தவையல்ல. இயன்றவரை மிகவும் சூடான, மிகவும் குளிரான பானங்கள் அருந்துவதைத் தவிர்த்தல் வளமான பற்களின் ஆரோக்கியத்திற்கு வழிவகுக்கும்.

9. ஊட்டச்சத்துமிக்க ஆரோக்கியமான உணவுகளை உட்கொள்ளுதல் பற்களின் ஆரோக்கியத்திற்கு பக்கபலமாக அமையும். அதாவது பால், முட்டை, பழங்கள், பச்சைக்காய்கறிகள், பருப்பு, கீரை வகைகள் பற்களுக்கு மட்டுமல்ல எமது உடலையும் ஆரோக்கியமாக வைக்கத்தக்க உகந்த உணவுகளாகும்.

10. ஒட்டும் தன்மையான உணவுகளைத் தவிர்ப்பதன் வாயிலாக பற்களின் ஆரோக்கியத்தை மேலும் வளமாக்கலாம். அதாவது கடலை, ஐஸ்கிறீம் , முந்திரிப் பருப்பு, சொக்லேட் வகைகள் , கேக் போன்ற உணவுகள் இவ்வகையான உணவுப் பொருட்கள் உண்டவுடன் உடனடியாக வாயினை பற்தூரிகை கொண்டு சுத்தம் செய்யவேண்டும். மிகவும் இனிப்புத் தன்மையான உணவுகளும் பற்களின் ஆரோக்கியத்துக்கு உகந்தவையல்ல. இனிப்புப் பண்டங்கள் உண்டபின் நீரினை அருந்த வேண்டும்.

11. வெற்றிலை, பாக்கு உபயோகித்தல் பற்களின் ஆரோக்கியத்திற்கு உகந்தவையல்ல. இது வாய்ப் புற்றுநோயையும் ஏற்படுத்தவல்லது. எனவே இவ்வாறான பழக்கங்களில் இருப்பவர்கள் இன்றிலிருந்தே விடுபடல் நன்மை பயக்கும்.

12. பல் ஈறுகளுக்கிடையில் அடைந்திருக்கும் உணவுப்பொருட்களை கூரான ஊசி,குச்சி கொண்டகற்ற எத்தனிக்கக் கூடாது. பற்தூரிகையின் உதவியுடன் மெதுவாக எடுக்கவேண்டும். வாயினை நன்றாக கொப்புளித்தல் மூலமும் வெளியேற்றலாம்.

13. அடிக்கடி சிற்றுண்டி (snacks) எடுத்தலை குறைத்துக் கொள்ளல் நன்று. அதாவது பிஸ்கட் வகைகள் ,சிப்ஸ் (Chips) போன்றவை.

14. மூன்று மாதங்களிற்கு ஒருமுறையாவது பற்தூரிகைகள் மாற்றப்பட வேண்டும். அதேநேரம் ஒரே வகையான fluride அடங்கிய பற்பசைகளைத் தொடர்ந்து பாவிக்காமல் அடிக்கடி fluride அடங்கிய பற்பசைகளை மாற்றிமாற்றிப் பாவித்தல் நன்மை பயக்கும்.

15. புளோரைட் அடங்கிய சுத்தமான நீரை அருந்துதல் பற்சூத்தை வராமல் பாதுகாப்பளிக்க ஏதுவாகும்.

16. புதிதாகப் பறிக்கப்பட்ட பழவகைகள், மரக்கறிவகைகள் வாயில் உமிழ் நீர்ச்சுரப்பியைத் தூண்டத்தக்கவை. இவையும் சீனிசேர்க்கப்படாத காப்பி, தேநீர் சீனி சேர்க்கப்படாதகப் (sugar –free gum) உணவுப் பொருட்கள் பற்களில் ஒட்டுப் பட்டிருப்பதை அகற்றவல்லன.

17. பல் வைத்தியரை கிரமமான முறையில் அணுகி பற்களின் ஆரோக்கியத்தை உறுதிசெய்வது ஒவ்வொருவருடையதும் அத்தியாவசியக் கடமையாகும். பல் வைத்தியரின் ஆலோசனைப் படி சிகிச்சை தேவைப்படுபவர்கள் அதனை முழு ஈடுபாட்டுடன் முழுமையாகப் பெற்றுக் கொள்ளல் பற்களின் ஆரோக்கியத்திற்கு வழி வகுக்கும். பல்துலக்கிய பின்னரே உணவு உண்ணலோ பானங்கள் அருந்தலோ வேண்டும்.

18. ஆரோக்கியமான பற்சுகாதாரம்ஒருவரின் நலமான வாழ்விற்கு பக்க பலமாக அமையும். எனவே இன்று முதல் பற்களின் ஆரோக்கியத்தில் பங்கெடுத்து அழகான முத்துப் போன்ற பற்களை பேணிடுவோம். பிணிநெருங்காது எம்மை காத்திடுவோம்.

திருமதி .சுரேஸ் குயிலினி
தாதிய உத்தியோகத்தர்
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

மருத்துவம், ஆரோக்கியம், சுற்றாடல், பாதுகாப்பு சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் இந்த வைத்தியச்சுடர் சம்பந்தமானஉங்கள் அபிப்பிராயங்களையும் 0768363858 என்ற இலக்கத்திற்கு SMS செய்துவிடுங்கள்.